தமிழீழ ஆவணக் காப்பகம்

யூன் 1997



# எரிமலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




## அக்கறைப் பூக்கள்

அன்புடன் ஆசிரியர்
குழுவிற்கும்,
எழுத்தாளருக்கும்,

எமது தாயகம் பற்றிய ஆக்கங்களுடன் திங்கள் ஒரு மடலென வெளிவரும் தமிழ் மொழிக்கலை, கலாச்சார, அரசியல் பொருண்மியம் சம்பந்தப்பட்ட சஞ்சிகையையிட்டு நான் மகிழ்ச்சியடைகின்றேன். நிட்சயமாக சிந்தனையுள்ள ஒவ்வொரு தமிழனும் மகிழ்ச்சியடைவான்.

மேலும் மேலும் நவீனமானதும் தரமானதும் எமக்கு கந்ததுமான ஆக்கங்களைப் எரிமலையில் பிரசுரிக்கவும். மேலும் நாம் இயன்றவரை பிற மொழிச் சொற்களைக் கையாளுவதைத் தவிர்ப்பது நல்லது.

ஞானகுருவேல்
ஜேர்மனி

★★★

எரிமலை ஆசிரியர்
குழுவிற்கு,

நான் ஏற்கனவே தங்களுக்கு கடிதம் எழுதியதைத் தொடர்ந்து எரிமலை இரண்டு இதழ்கள் அனுப்பி வைத்தீர்கள் ஆனால் கடந்த இரண்டு மாதங்களாக இதழ்கள் வரவில்லை. அதனால் எங்களுக்கு ஈழச் செய்திகள் எதுவும் தெரிவதில்லை. எனவே தாங்கள் தவறாமல் எரிமலை இதழ்களை அனுப்பிவைக்குமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

ச. பொன் கிட்டு
கரூர் – தமிழ்நாடு.

★★★

எரிமலை ஆசிரியர்
குழுவிற்கு,

நான் கடந்த ஆறு காலமாக போலந்து நாட்டில் அகதியாகத் தஞ்சம் புகுந்துள்ளேன். இங்கு எட்டு அகதி முகாம்கள் உள்ளன. எந்த முகாம்களிலுமே தமிழ் நூல்களையோ அல்லது தமிழ்ப் பத்திரிகைகளையோ காண்பது மிகவும் அரிதாகவுள்ளது. இதனால் எமது நாட்டின் செய்திகளை அறிந்துகொள்ளமுடியாது இருக்கின்றது. நாட்டின் நிலைமைகளை அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறோம். ஆகவே தயவுசெய்து எரிமலையையும், தாங்கள் வெளியிடும் ஏனைய வெளியீடுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

எம். சத்தியமூர்த்தி
போலந்து.

★★★

வாழ்க புலிகள்! வெல்க தமிழீழம்!

மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம்.

தங்களின் எரிமலை புத்தகம் அண்மையில் சில நண்பர்கள் மூலமாகக் கிடைக்கப்பெற்றுப் படித்தேன். தமிழீழத்தில் நடந்துவரும் உண்மைச் செய்திகளை மறைத்து சிறீலங்கா செய்துவரும் பொய்ப் பரப்புரைகளை அம்பலப் படுத்தியிருப்பது அருமை.

தங்கள் பணி தொடர வாழ்த்துகிறேன்.

மு. முனிராசு
பொச்சம்பள்ளி
தமிழ்நாடு.

★★★

எரிமலை ஆசிரியர்
அவர்கட்கு,

“தமிழ்நாடு மார்க்சிய–லெனினியக் கட்சி”யின் சார்பில் வணக்கம்.

விடுதலைப் புலிகளின் வீரத்தை உலகுக்குப் பறைசாற்றும் எரிமலைக்கு எங்களது புரட்சிகர வாழ்த்துக்கள். எரிமலை இதழை நாங்கள் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று ஆர்வமாக உள்ளோம். ஏற்கனவே இதழ் அனுப்பிவைக்கும்படி ஒரு கடிதம் எழுதினேன். என்ன காரணமோ அனுப்பவில்லை. ஆகவே இக்கடிதத்தை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு இதழ் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

த. நா. மா. லெ. கட்சி
சு. மாதேசுவரன்.
ஈரோடு

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...


★ தமிழர் தேசியப் போராட்டம்
– பக்கம்....16

★ தட்டப்படும் வவுனியா நகரின் கதவுகள்
– பக்கம்.....21

★ மொறவேவா ஆக்கிரமிக்கப்பட்ட பூமி
– பக்கம்....25

★ யசீர் அரபாத்தும் சிங்களப் பேரினவாதமும்
– பக்கம்....26

★ பலதும் பத்தும்
– பக்கம்....28

★ இடர்நடுவே எழும் கலைகள்
– பக்கம்....33

★ அன்னியமாகிப்போன நண்பர்கள்
– பக்கம்....36

★ நான் நலம் மிகுதி நேரில்
– பக்கம்....40

★ தாண்டவம்
– பக்கம்....43

★ சிங்களவருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது
– பக்கம்....46

★ பெண்களும் தமிழீழச் சட்டங்களும்
– பக்கம்....47





சந்திரிகாவின் போர்ப் பிரகடனங்களும் தமிழீழ விடுதலைப் போராட்டமும்
- பக்கம் 05





தோல்வி நிச்சயம்!! முழி பிதுங்கும் சிங்கள இராணுவம்
- பக்கம் 08






புதுச்சேரியில் தமிழர் எழுச்சிப் பேரணி
- பக்கம் 12





சிங்கள வான்படைக்கு இது இலையுதிர்காலம்
- பக்கம் 19





நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல விடுதலைப் போராளிகள்
- பக்கம் 22





கிழக்கு யுத்தமுனை
- பக்கம் 30




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



போராட்ட வடிவங்கள் மாறலாம்; ஆனால் எமது போராட்ட இலட்சியம் மாறப்போவதில்லை.

அறப்போரிலும் சரி ஆயுதப் போரிலும் சரி, எமது விடுதலைப் போர் உலக சாதனைகளைப் படைத்து வருகின்றது; மனித ஈகையின் சிகரத்தை எட்டியிருக்கின்றது.

இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடியெடுத்து வைத்த தினத்தையே எமது போராட்டத்தின் இருண்ட நாளாக நான் கருதுவேன்; எமது போராட்டத்தில் இந்திய இராணுவம் தலையீடு செய்தது, ஒரு இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்.

எமது விடுதலைப் போராட்டத்தின் பளுவை அடுத்த பரம்பரை மீது சுமத்த நாம் விரும்பவில்லை; எமது கடின உழைப்பின் பயனை அவர்கள் அனுபவிக்க வேண்டும். எமது வாழ்நாளில் எமது இலட்சியம் நிறைவேறாது போகலாம்; அப்படியாயின் அடுத்த தலைமுறைக்குப் போராட்டத்தைக் கையளிக்கும் தெளிந்த பார்வை எமக்குண்டு.

சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் அடிமைகளாக வாழ வேண்டும்; தன்மானம் இழந்து தலைகுனிந்து வாழ வேண்டும்; பயந்து பயந்து பதற்றத்துடன் வாழ வேண்டும்; படிப்படியாக அழிந்து போக வேண்டும்.

ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

எமது மக்களின் சுதந்திரத்தையும் கௌரவத்தையும் நிலைநாட்டவே நாம் ஆயுதங்களை ஏந்தினோம்; அந்தச் சுதந்திரமும் கௌரவமும் நிலைநாட்டப்படாதவரை எமது போராட்டமும் தொடரும் என்பதை, தெட்டத்தெளிவாக எடுத்துக்கூற விரும்புகின்றேன்.

என்றோ ஒருநாள், எதிரியானவன் எமது சமாதானக் கதவுகளைத் தட்டுவானாக இருந்தால், நாம் எமது நேசக்கரங்களை நீட்டத் தயாராக இருக்கின்றோம்.

வீர சுதந்திரம் வேண்டி நிற்கும் மக்களுக்கு உறுதிதான் வலுமிக்க ஆயுதம்.

– தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
ஜூன் 1997

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# வெற்றி நிச்சயம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தாண்டிக்குளம் இராணுவ நடவடிக்கை தமிழர்களின் ஆயுதம் தரித்த தேசிய எதிர்ப்பு இயக்கமானது எத்தகைய பலமான, சாதுரியமான, திட்டமிடப்பட்ட நிகழ்ச்சி நிரலுடன் இயங்குகின்றது என்பதற்கான வெளிக்காட்டலாகும். 'ஜெயசிக்குரு' நடவடிக்கையின் இருதயம் போன்ற பிரிவாக இயங்கிய 55-வது பிரிகேட் தலைமையகம், பிரதான இராணுவ வழங்கலுக்கான களஞ்சியங்கள் மற்றும் பிற உதவிகர மையங்கள் மீது வெற்றிகரமான தாக்கமுள்ள ஒரு இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டு இராணுவ ரீதியில் சிறீலங்காவை விடுதலைப் புலிகள் நிலைகுலைய வைத்துள்ளனர்; சிங்களப் போர் வெறி மனோநிலையில் ஒரு பயத்தை ஏற்படுத்தியுள்ளனர்; தமிழர்களின் அரசியல் கோரிக்கையை இராணுவ மேலாதிக்கம் மூலம் அழிக்க முடியாது என்ற உண்மையை தெளிவுபடுத்தியுள்ளனர்.

இன்று தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதம் தரித்த தமிழ்ப் படையணிகள், பீரங்கிகள் சகிதம் எதிரியை மூர்க்கமாகத் தாக்கி "எமது மண்ணில் இருந்து உனது இராணுவம் வெளியேறியே ஆகவேண்டும்" என்பதை தீர்க்கமாக உரைத்து வருகின்றது. இது உயிரை அர்ப்பணித்து எமது இளைய தலைமுறை சிங்கள இனவாத அரசிற்குக் கொடுத்துள்ள செய்தி ஆகும். இங்கே விட்டுக் கொடுப்பதற்கு இடம் இல்லை. எதிரியின் படையணிகளே சிங்கள ஆக்கிரமிப்புக்கான பிரதான கருவியாகும். துப்பாக்கி முனையில் மக்களை நிறுத்தி மக்களின் அரசியல் இலட்சியத்தை நசுக்கி எறிதல் என்பது ஆக்கிர மிப்பாளர்களுக்கான பொதுவான அடிப்படை மனோபாவமாகும். சிங்கள ஆக்கிரமிப்பும் இதனையே கைக்கொள்ள விழைகின்றது என்பது வெளிப்படையானதாகும்.

நாம் - நசுக்கப்பட்ட தேசிய இனம் - எதிரியின் இப்பிரதான ஆக்கிமிப்புக்கான கருவி யான சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்களுடன் எதுவித சமரசமும் புரிதல் ஆகாது.

"பேச்சுவார்த்தை, அதனூடான சமரசத் தீர்வு என்பன சாதரணமாக எமது போராட்டப் பாதையில் காலத்திற்குக் காலம் முன்வைக்கப்படும் விடயங்களாகும். சிங்கள அரசு எக் காலத்திலும் இதனை உளப்பூர்வமாகத் கிரகிக்கவோ - கவனத்தில் எடுக்கவோ இல்லை. 'திம்பு' முதல் சந்திரிகாவின் தூதுக்குழுக்கள்வரை பேச்சுவார்த்தை என்பதை விடுதலைப் புலிகளை எவ்வாறு தமது பொறிக்குள் சிக்கவைத்து தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கையை இல்லாதொழிக்கலாம் என்பதில் அக்கறை காட்டியதே தவிர பேச்சுவார்த்தையை உளசுத்தியுடன் அணுகவில்லை. மாறாக சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்ச்சியான கொடிய தாக்கத்தை எமது மக்களுக்குக் கொடுத்து வந்துள்ளது. இராணுவ ஆக்கிரமிப்பு என்பதே எமது இருப்புக்கு எதிராக சிங்கள அரசால் முன்வைக்கப்பட்ட இன அழிப்புத் திட்டமாகும். பலாத்கார முறையில் சகல சனநாயக எதிர்ப்புணர்வுகளையும் நசுக்கி எறிந்துவிட்டு ஒரு கொடூர அரச அமைப்பைப் பாதுகாத்தலே சிங்கள இராணுவ ஆக்கிமிப்பின் நோக்கமும் இலட்சியமும் ஆகும். சந்திரிகா அரசிடம் ஒரேயொரு பூநகரி இராணுவ முகாமை விலக்கி எமது மக்களின் ஜீவாதார வாழ்வுக்கான பாதையை திறந்துவிடுமாறு நியாயபூர்வமாகக் கூறியபோது இந்த இராணுவ விடயங்களுடன் தன்னால் விட்டுக்கொடுக்க முடியாது எனக்கூறி தமிழர்களினூடான பேச்சுவார்த்தையை 'முறித்துக்கொண்டார்'. பிரேமதாசா அரசு பேச்சுவார்த்தைக் காலத்தினைப் பாவித்து தென்தமிழீழத்தில் பாரிய படைமுகாம்களை ஏற்படுத்தி விடுதலைப்புலிகளினுடனான பேச்சுவார்த்தை முறிவடைவதற்கு வழிகோலினார். திம்பு பேச்சு வார்த்தை முறிவடைய வவுனியாப் பகுதியில் சிங்களப் படைகள் நடாத்திய வன்முறையே பிரதான காரணமாக அமைந்தது. இவ்வாறு ஒவ்வொரு காலகட்டங்களிலும் தமது இராணுவ ஆக்கிரமிப்பைப் பாதுகாக்க சிங்கள அரசு பேச்சுவார்த்தைகளைப் பாவித்து பின்னர் முறித்துக் கொண்டது. ஆக தமிழர் பகுதி மீதான சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பு என்பது சிங்கள தேசத்தின் பிரதான நிகழ்ச்சிநிரல் ஆகும்.

நாம் இதனை எமது எதிப்பு இயக்கத்தின் விடயமாக எடுத்துக்கொண்டு சிங்கள இராணுவ வெளியேற்றம் என்பதை பிரதான வேலைத்திட்டமாக - போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். பேச்சுவார்த்தையோ அல்லது பிற சமரச வழிகளோ சிங்கள இராணுவம் தமிழர் பூமியிலிருந்து வெளியேற்றபட்ட பின்பே ஆக்கபூர்வமானதாக - பயனுள்ளதாக - வெற்றிக்ரமானதாக அமையும்.

எமது தேசத்தின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நிச்சயப்படுத்தும் இவ் வேலைத்திட்டத்தைப் போர்முனையில் விடுதலைப் புலிகளும் தமிழீழ மக்களும் ஒன்றாய் முன்னெடுக்க புலம்பெயர்ந்து வாழும் நாம் எமது பேச்சிலும் மூச்சிலும் சிங்கள இரா ணுவமே வெளியேறு எனப் போரர்டுவோம். இதுவே எமது வெற்றியை நிச்சயப்படுத்தும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# இருபத்திநாலு மணிநேர இரவு

பகலைச்
சட்டபூர்வமாகச் சதுரமிட்ட
ஜன்னல்களில்
நடுநிசியின் ரௌடி நிழல்கள்.
பதுங்காமல்
பவிசுடன் பவனிவரும்
ஓநாய்ப் பற்களுக்கு
இரும்பு வளைவுகளாய்
இராணுவப் பாதுகாப்பு
இருமை தாண்ட விரதமெடுத்துத்
தலைமழித்த பிஷு மடத்தில்
மலர்ச் செடிச் சிலிர்ப்புகள் கூட
ராஸஸத் தலைப் பரட்டைகளாகின்றன.
குழந்தை வீறிடுகிறாள்.
நாளாந்த நாகரீகத்தின்
ஒளிச்சதுரம் உடைந்து
வீட்டினுள் சிதறுகிறது.
சட்டத்தின் கரம் எறிந்த
பெட்ரோல் வெடி.
பீதியின் எல்லை.
குழந்தைமை கற்பிழந்து
பயங்கரம் முதிர்கிறது.
உலகின் ஊமைச் சட்டங்கள்
வீறிட்டு அழும்
பெண் குரலைச் சுற்றி
உதவியற்ற
அமைதிப் பிராந்தியமாகின்றன.
விடிவின் திசையற்று
ஒரு சமூகத்தின்
உயிரைச் சூழ்கிறது
இருபத்திநாலு மணிநேர
இருள்.
கண்முன்னால் தாய் தங்கை
கழுத்தறுபடக் கண்டவனின்
பிஞ்சுக் கைபிடித்த
துப்பாக்கி இரும்பில் மட்டும்
நஷத்திரங்களின்.
ஒளிர்வு.

சுகுமாரன்



நன்றி
'விடுதலைப் புலிகள்'
1986.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சந்திரிகாவின் போர்ப் பிரகடனங்களும்

1977—ல் தமிழ் மக்கள் மீது சிறீ லங்கா இனவாத பேயரசு, கொடிய இனப்படுகொலையை கட்ட விழ்த்துவிட்டதுடன், அதன் தலைவ ரான ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 'போர் என்றால் போர்' என எம்மீதான போரை அப்பட்டமான — சத்திய மான வார்த்தைகள் ஊடாக பிரகட னப்படுத்தினார். தமிழீழ மக்கள் ஜன நாயக ரீதியான சாத்வீக முறையில் தமிழீழமே எம் தேசத்தின் வாழ்வுக்கும் எதிர்காலத்துக்குமான தீர்வு என பிர கடனப்படுத்திய காலம் அது.

இரு தசாப்தங்களின் பின், கடந்த இரு ஆண்டு காலத்தில் 13 முழுமை யான போர் பிரகடனங்களை சந்தி ரிகா — ரத்வத்தை தலைமையிடமி ருந்து எமது தேசம் எதிர்கொண்டுள் ளது.

## தமிழீழ விடுதலைப் போராட்டமும்

'முன்னேறிப் பாய்தல்' தொடங்கி சந்திரிகாவின் போர்வெறி 'வெற்றி நிச்சயம்' என குறியீட்டுப் பெயர் கொண்ட இராணுவ நடவடிக்கை வரை வியாபித்து எம் தேசத்தை குண் டுகளினாலும் துப்பாக்கி ரவைகளினா லும் நிறைத்து வைத்துள்ளது.

> சந்திரிகா பேச்சு வார்த்தையில் காட்டிய அசிரத்தையும், பேச்சு வார்த்தையை பிரச்சாரத் தேவைகளுக்காக பாவிப்பதில் காட்டிய அதீத அக்கறையும் சந்திரிகாவை முன்னைய சிங் களத் தலைமைகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது.

இப் போர்ப் பிரகடனங்களின் நோக்கம் என்ன? இதனை எதிர்த்து நின்று எமது விடுதலைப் போராட்டம் எவ்வாறு தனது இருப்பையும், வெற் றியையும் திட்டமிடுகின்றது?

* * *



சந்திரிகா அரசு, முன்னைய பௌத்த சிங்கள இனவாத அரசுகளிலிருந்து மேம்பட்ட இனவெறிப் பார்வையை யும், தந்திரோபாய நிலைப்பாட்டை யும் கொண்டதாகும். தமது முன்னைய தலைமைகள் தம் போர் உபாயங்களில், தந்திரோபாய முறைகளில், பிரச்சார யுத்தங்களில் எதிர்நோக்கிய பலவீன மான பிரதேசங்களைக் கருத்தில் எடுத்து, சிங்கள இனவாதம் பிரசவித்த நவீனமயப்படுத்தப்பட்ட தலைமையே சந்திரிகா அரசாகும். தமிழீழ விடுத லைப் போர் உள்நாட்டுப் போர் என்ற வட்டத்திலிருந்து விலகி, சர்வதேச அவதானிப்பும் — தலையீட்டுக்கான சூழ்நிலையும் உருவாகிய காலகட்டத் தில் 'சமாதானம்' என்பதை கோஷமா கவும், அந்தக் கோஷத்தை எழுப்புவதற் கான சூழ்நிலையை வாக்குச் சேகரிப் பதற்கான வேட்டைக்களமாகவும் மாற்றி சிங்கள இனவாதம் பிரசவித்த தலைமையே சந்திரிகா — ரத்வத்தை கூட்டணியாகும்.

தொடர்ச்சியாக ஏற்பட்டுவந்த பொருளாதாரச் சரிவு — பணவீக்கம் என்பன அடிமட்டச் சிங்கள மக்களி டம் தமது இனவாதப் பிடிக்குள் ஒரு மூச்சுவிடுவதற்கான தேவையை ஏற்ப டுத்தியிருந்தது. விடுதலைப் புலிகள் ஏற்படுத்திய இராணுவ — அரசியல் ரீதி யிலான அழுத்தம், இனவாத இயந்தி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



ரமே முறிந்து சிதறடிந்துவிடும் எனும் அச்சத்தை பரவலாக சிங்களப் பகுதிகளில் உருவாக்கி வளர்த்துவந்தது. மறுபுறம் சிறீலங்கா அரசு போர்வெறி பிடித்த அரசாக – மனித உரிமை மீறல்களை புரிபவர்களாக சர்வதேச ரீதியில் அடையாளமிடப்பட்டிருந்தது. இந்தத் தோல்வி பற்றிய அச்சமே 'சந்திரிகா' எனும் தலைமையைத் தோற்றுவித்தது.

தமிழ் மக்கள் மீது இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராக கிளர்ந்தெழுந்து அதனைக் களைவதற்கான சங்கற்பம் பூண்டு சிங்கள தேசம் சந்திரிகாவை உருவாக்கவில்லை என்பதை, சிங்கள தேசத்தின் அகப்புறக் குணாம்சங்களை எடுத்து ஆராயும்போது புரிந்துகொள்ளலாம். ஆயிரம் ஆயிரம் இன்னல்களை எதிர்கொள்ளும் தமிழ் மக்களை – அவர்களது துயரங்களை பகிர்ந்து கொள்ளும் அரசியல் எழுச்சி சிங்கள மக்களிடம் ஆரம்ப காலம் தொட்டு இன்றுவரை உருவாகவில்லை என்பதும், போரின் சுமைகளை தாமே தாங்கியவாறு போரைத் தொடர்ந்து அனுமதிக்கும் – ஆதரிக்கும் சூழ்நிலை தொடர்ந்தும் சிங்கள மக்களிடம் காணப்படுவதும் சந்திரிகா எத்தகைய மனோபாவத்துடன் தலைமையாக உருவாகினார் என்பதற்கான தளநிலமையாகும். சந்திரிகா பேச்சுவார்த்தையில் காட்டிய அசிரத்தையும், பேச்சுவார்த்தையை பிரச்சாரத் தேவைகளுக்காக பாவிப்பதில் காட்டிய அதீத அக்கறையும் சந்திரிகாவை முன்னைய சிங்களத் தலைமைகளிடமிருந்து வேறுபடுத்திக் காட்டியது. போர் ஆரம்பமாகியவுடன் தமது பிரதான வேலைத்திட்டமாக சந்திரிகா அரசு பிரச்சார விடயத்தைக் கையாண்டது.

அ. சர்வதேசப் பத்திரிகையாளர்களின் நேரடிப் பார்வை தடைப்படுத்தப்பட்டது.

ஆ. கொழும்பு சிங்கள, ஆங்கிலப் பத்திரிகைகள் ஒருங்கிணைக்கப்பட்ட முறையில் பிரச்சாரத்திற்கான செய்திகளை சர்வதேச செய்தி அரங்குகளில் விதைத்தனர்.

இ. சர்வதேச செய்தி நிறுவனங்களின் தேவையைப் பூர்த்திசெய்ய தினசரி இராணுவப் பேச்சாளர்களின் பத்திரிகையாளர் கூட்டங்கள், திரிக்கப்பட்ட மேற்கோள்களும் எடுகோள்களும், ஒழுங்குபடுத்தப்பட்ட – தேர்வு செய்யப்பட்ட பயணங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

ஈ. சர்வதேச செய்தி நிறுவனங்களின் கொழும்பு முகவர்களாக செயற்பட்ட சிங்கள முகவர்கள் தொழில் நியாயத்திலும் மேலாக இனவெறியைக் காவி நின்றனர்.

சந்திரிகா அரசு *1995* ஜூன் *7*–ம் திகதி அன்று தமது முதலாவது பாரிய இராணுவ நடவடிக்கையைப் பிரகடனப்படுத்தியது. தமிழ் மக்கள் சுயமான உட்கட்டுமானங்களுடன் தமிழீழம் என்னும் மனோரீதியான தயார்படுத்தலுடன் வாழ்ந்து வந்த மையத்தை

**ஆயிரம் ஆயிரம் இன்னல்களை எதிர்கொள்ளும் தமிழ் மக்களை – அவர்களது துயரங்களை பகிர்ந்து கொள்ளும் அரசியல் எழுச்சி சிங்கள மக்களிடம் ஆரம்பகாலம் தொட்டு இன்றுவரை உருவாகவில்லை**





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நோக்கி இத்தாக்குதல் ஆரம்பமாகியது. இதன்போது, தென்தமிழீழத்தில் இருந்த தமது கட்டுப்பாட்டை இழப்பதற்கு சிங்கள அரசு தயாராக இருந்ததும் சிங்கள இராணுவத்தின் முழு வளங்களும், முழுத் தலைமையும் ஒரு



போர்முனைக்காக நகர்த்தப்பட்டதும் இந்நடவடிக்கையை முன்னைய நடவடிக்கையிலிருந்து வேறுபடுத்திக்காட்டியது.

1. சர்வதேச சட்டங்களில் குறிப்பிடப்படும், அம் மக்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத அரசுகளுக்கு எதிரான தேசிய சுயநிர்ணய உரிமை என்னும் கோட்பாட்டுக்கு உட்பட வடதமிழீழம் ஒருவிதமான சுதந்திரமான தேசமாக உருவாகி வருவதை சிங்கள அரசு குறிவைத்துத் தாக்கியது.

2. வடதமிழீழம் தமிழீழப் போராட்டத்திற்குத் தேவையான பொருளாதார வளங்களையும் அனுபவங்களையும் வழங்கி வருவதை குறிவைத்து சிங்கள அரசு தாக்கியது.

இதன்பிற்பாடு கிளிநொச்சி, பரந்தன் பகுதிகள் மீதும் மன்னார்ப் பகுதி மீதும் தற்போது வவுனியா, முல்லைத்தீவு பகுதிகளூடாகவும் திட்டமிடப்பட்ட முறையில் சிங்கள இராணுவ போர் நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.

இப் போருக்கான புறத் தேவைகளான சர்வதேசப் பிரச்சாரம், பொருளாதார வளங்களைச் சேகரித்தல் என்பனவற்றை சமாதானத்திற்கான போர் என்ற கோஷத்தினூடாக சிங்கள அரசு பூர்த்திசெய்தது.

* * *

தமிழீழ விடுதலைப் புலிகள் இப் போர்ப் பிரகடனங்களை தொடர்ச்சியான சிங்கள இனவாத அடக்குமுறையின் எத்தனங்கள் என்ற நோக்கிலேயே விடயத்தைக் கையாண்டு வருகின்றனர். எதிரியின் பொறியில் சிக்காது தமிழீழம் என்னும் எமது அரசியல் கோரிக்கையைப் பாதுகாத்தல், அந்த அரசியல் கோரிக்கையின் முதுகெலும்பாக எழுந்து நிற்கும் ஆயுதம் தரித்த தமிழர் இராணுவக் கட்டமைப்பைப் பாதுகாத்தலும் பலப்படுத்தலும்; அதன் மூலம் முழுமையான வெற்றிக்கான சூழ்நிலைகளை உருவாக்குதல் என்ற விடயங்களில் விடுதலைப் புலிகள் சாதுரியமாக செயற்பட்டனர்.

எதிரி யாழ்ப் போர் முனையின் மூலம் மட்டும் தமிழீழம் என்ற எமது கோரிக்கையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கலாம் போன்றதொரு மாயையான சூழ்நிலையினை உருவாக்க முனைந்தனர். போர் பிரகடனப்படுத்தப்பட்ட முறை அதற்குக் கொடுக்கப்பட்ட பிரச்சார முக்கியத்துவம் போர் முடிவடைந்த பின்னர் இடம்பெற்ற சிங்கள இராஜதானிய முறைப்பட்ட அணிவகுப்புகள் என்பன இதனையே

**இழப்பதற்கு எதுவுமேயற்ற புள்ளியிலிருந்து வெற்றி ஒன்றே வாழ்வுக்கும் எதிர்காலத்திற்குமான தேவை என்ற மனப்பக்குவம் எம்முள் உருவாகி வருகின்றது**

சுட்டிநிற்கின்றன. ஒருபுறம் மக்களை பேரழிவிலிருந்கு பாதுகாக்கவும், மறுபுறம் இராணுவ உளவியல் காரணங்களுக்காகவும் ஒரு வீரம் மிகு எதிர்ப்பை வெளிக்காட்டிய எமது தமிழர் இராணுவம் சிறீலங்காவின் பிரதான பொறியான இறுதிப் போர் என்ற பொறியிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் முகமாக ஒரு பின்வாங்கலை மேற்கொண்டனர்.

இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகள் முன்னையதிலும் பெருமளவிலான பிராந்தியங்களை தென்தமிழீழத்தில் கைப்பற்றி அப்பகுதிகளில் திட்டமிடப்பட்ட தற்காப்பு யுத்தமுனைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும் தற்போது இடம்பெறும் சிங்கள இராணுவத்துடனான பீரங்கிச் சமர் என்பது விடுதலை போராளிகள் மரபுரீதியான போர்த்துறையில் ஒரு மேம்பாட்டைக் கண்டு வருவதை வெளிக்காட்டுகின்றது. விடுதலைப் புலிகள் இப் போர்த் தந்திரங்களினூடாக தமது இருப்பைப் பாதுகாத்தலுடன் வெற்றிக்கான சகல கதவுகளையும் தட்டிவருகின்றனர்.

'ஜயசுக்குரு' நடவடிக்கை ஆரம்பமாகியபோது நான்கு போர் முனைகளில் ஒரேசமயத்தில் தமிழர் இராணுவம் எதிரியை எதிர்கொண்டது. பல சர்வதேச இராணுவ நிபுணர்களின் ஆலோசனைகளுடன் வகுக்கப்பட்ட இப் போர் நடவடிக்கையை மிகக் குறைந்தளவிலான ஆயுத தளபாட வசதிகளுடன் மிகக் கூடிய யுக்தி ரீதியான திட்டமிடலுடன் 'பிரபாகரன்' எதிர்கொண்டு வருகின்றார்.

★★★

சிங்கள அரசானது எமது இடையூறற்ற இராணுவப் பிரகடனங்கள் மூலம் தமது முறிவுப் புள்ளியை நோக்கி தம்மை விரைவாகத் தள்ளிவருகின்றனர். பலவீனமான பொருளாதாரம், தொடர்ச்சியான சக்திக்கு மீறிய இராணுவ மனிதவள உபயோகம், சமநிலை அற்ற தளபாட விநியோகங்கள் என்பன இயல்பாகவே சிங்கள இராணுவத்தை அதனது முறிவுப்புள்ளியை நோக்கி தள்ளிவருகின்றது. மறுபுறம் தமிழர்களால் ஏற்படுத்தப்படும் உயிரழப்புக்கள், இராணுவத் தளபாடச் சேதங்கள், பொருளாதார மையங்கள் மீதான தாக்குதல்கள் என்பன இந்தச் சூழ்நிலையை விரைவுபடுத்துகின்றது. அதிகரித்துவரும் வெளிநாட்டுக் கடன், நிதிப்பற்றாக்குறை இதனால் ஏற்பட்டு வரும் அந்நிய செலாவணிப் பற்றாக்குறை, உள்நாட்டுப் பொருளாதாரத் தேவைகள் என்பன சிறீலங்காவிற்கு ஏற்பட்டுள்ள நீண்டகாலப் பிரச்சினையும் புதைகுழியுமாகும்.

எமது தேசம் விடுதலை என்ற பிரகடனத்துடன் எழுந்து நின்று உரம் கொள்கின்றது. இழப்பதற்கு எதுவுமேயற்ற புள்ளியிலிருந்து வெற்றி ஒன்றே வாழ்வுக்கும் எதிர்காலத்திற்குமான தேவை என்ற மனப்பக்குவம் எம்முள் உருவாகி வருகின்றது. பிற இராணுவக் காரணிகள், பொருளாதாரத் தேவைகள் என்பன இந்த ஆன்ம பலத்தின் மூலம் பூர்த்தி செய்யப்படும் என்பது உலக வரலாறு தந்த பாடம் மட்டுமல்ல இயற்கையின் நியதியுமாகும்.

**- நாதன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தோல்வி நிச்சயம்!!

## முழி பிதுங்கும் சிங்கள இராணுவம்

பெளத்த சிங்களப் பேரின வாதிகள் மத்தியில் ஒரு நிலையான இடத்தை ஏற்படுத்திக் கொள்ளவும், அரசினதும் இராணுவத்தினதும் நெருக்கடியை ஒரே சமயத்தில் தீர்த்துக் கொள்ளவும் எண்ணங்கொண்டு, எடிபல இராணுவ நடவடிக்கை தந்த உற்சாகம் மற்றும் விடுதலைப் புலிகள் பற்றிய பிழையான மதிப்பீட்டுடன் மேற்கொள்ளப்பட்டதே தற்போதைய வெற்றி நிச்சயம் என்ற பொருள் தரும் 'ஜெயசுக்குறு' நடவடிக்கையாகும்.

குடாநாட்டில் ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள சிங்கள இராணுவத்திற்கான இலகுவான செலவீனங்கள் குறைந்த விநியோகத்தை மேற்கொள்ள ஒரு தரைப்பாதை. இத்தரைப்பாதையை அமைப்பதினூடாக விடுதலைப் புலிகளைக் கூறுபோடுதல், அவர்களின் இணைந்து திட்டமிட்டு செயலாற்றும் வலுவை பலவீனப்படுத்தல். ஒவ்வொரு பகுதிகளாக, இராணுவ ஆக்கிரமிப்பை மேற்கொண்டு, அவர்களது மண்ணில் இருந்தே அவர்களை ஏதாவது ஒரு மூலையில் முடக்கி வலுவிழக்கச் செய்தல். மண்மீதான மக்கள் மீதான அவர்களின் தொடர்பைத் துண்டித்து அந்நியமாக்கல். இறுதியில் வலுவிழந்தவர்கள் முன்னால் ஏதாவது ஒன்றை வீசி எறிந்து, பிரச்சினைக்கான தீர்வு என்ற வகையில் ஏற்கச் செய்தல் அல்லது திணித்தல்.

குளிர்சாதன அறையில் இருந்து கொண்டு, யதார்த்தத்தை அறவே புரிந்து கொள்ளாத, வரலாற்றுக் குருடர்களாய் வெறும் மமதை மனத்துடன் சிறீலங்காவின் பெருந்தலைகள் கூடி மேற்கொண்ட திட்டம் இது. இலகுவானதாகவும், வெற்றி தரக்கூடியதாகவும், புத்திசாலித்தனமாகவும் இத்திட்டம் அவர்களை உள்ளம் குளிரச் செய்திருக்கும். ஆனால் யதார்த்தம் வேறு. அது வரலாற்றோடு தன்னைப் பின்னிக் கொண்டு பயணப்படுவது.

குடாநாடு மீதான ஆக்கிரமிப்பு நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த இராணுவ யுக்திகள், மற்றும் முடிவுகள், ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கைக்கு ஒத்திகையாக வவுனியாவில் இருந்து மன்னார் நோக்கி மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படும் எடிபல இராணுவ நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகள் கைக்கொண்ட இராணுவ நிலைப்பாடு என்பன, ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கைக்குத் தவறான ஊக்கத்தை சிங்கள பாதுகாப்பு உயர்பீடத்திற்கு ஏற்படுத்திவிட்டது என்பது இப்பொழுது தெளிவாகிவருகின்றது.

சற்று மோதிவிட்டுப் பின்வாங்கி விடுவார்கள் புலிகள் என்ற சிங்களப் படையின் கணிப்பீட்டைப் பொய்யாக்கி, பெரும் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்திவருவதும், பெரும் இழப்புகளால் சிங்களப்படை சிக்கித்தடுமாறுவதும் நிகழ்ந்துவருபவை.

### பிழையான நேரம்

வெற்றி நிச்சயம் என்ற பொருள் தரும் ஜெயசுக்குறு குறியீட்டுப் பெயருடனான இராணுவ நடவடிக்கை மே மாதம் 13–ம் திகதி செவ்வாய்க்கிழமை






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அதிகாலை, சோதிடர்கள் குறித்துக் கொடுத்த நேரத்தில், பெரும் ஆரவாரங்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இரு பதினாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர், டாங்கிகள் பீரங்கிகள் கனரக வாகனங்கள் சகிதம், விமானப் படையினர் மழையெனக் குண்டுகளைப் பொழிய, ஆட்டிலறிகள் வெறிகொண்டு தாக்கிப் பாதையமைக்க, தமது பாதை திறக்கும் நடவடிக்கையை ஆரம்பித்தனர். பூசைவழிபாடுகள் நடத்தி, சோதிடர்கள் குறித்துக் கொடுத்த சுபநேரத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த இராணுவ நடவடிக்கை, பௌத்த சிங்களப் பண்டிகையான வெசாக் தினத்திற்கு முன்னதாக, அதாவது ஒரு வாரத்தில் குறைந்தபட்சம் புளியங்குளத்தையாவது சென்றடைவது எனத் திட்டமிடப்பட்டிருந்து. ஆனால், ஓமந்தை வரை முன்னேறிய சிறீலங்கா இராணுவத்தால், வெசாக் பண்டிகை முடிவடைந்து ஒரு மாதமாகியும் புளியங்குளத்தைச் சென்றடைய முடியவில்லை.

### மூன்று கட்டத் திட்டம்

வவுனியாவில் இருந்தும், வவுனியாவிற்கு மேற்கில் இருந்தும் கிழக்கில் இருந்தும் மூன்று பிரிவுகளாக நகர்வை ஆரம்பித்து முதற்கட்டமாக புளியங்குளத்தைச் சென்றடைவது. புளியங்குளத்தில் இணைந்த படைப்பிரிவுகள் இரண்டாம் கட்டமாக மாங்குளத்தை நோக்கி முன்னேறுதல். மூன்றாம் கட்ட நடவடிக்கையாக மாங்குளத்தில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும் சமகாலத்தில் இராணுவ நகர்வை மேற்கொள்ளல். இரு முனைகளில் இருந்து நகரும் பெரும்படைகளும் ஏதாவது ஓர் இடத்தில் சந்தித்தல். இதன்படி வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையான தரைப் பாதை அமைக்கும் திட்டம் சுபமாய் பூர்த்திபெறும். இதன் அடிப்படையில் தான் சிறீலங்காப் படைநடவடிக்கை திட்டமிடப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கென அது வகுத்துக் கொண்ட கால அளவும் அதிகமானதாக இருக்கவில்லை.

### மும்முனைகளிலும் முறியடிப்பு

சிறீலங்கா இராணுவப்படையினரை விடுதலைப் புலிகள் மும்முனைகளிலும் உறுதியுடன் எதிர்கொண்டனர். சிங்களப்படைக்கு பெரும் அழிவை ஏற்படுத்தினர். அதன் நகர்வை முறியடித்து முடக்கினர். ஓமந்தை வரை முன்னேறிய இராணுவப் பிரிவை மும்முனைகளி

# தாண்டிக்குள இடிமுழக்கம்
## எதிரொலிகள்

பிரபாகரன் ரத்வத்தையை விரும்பவே செய்வார் பிரபாகரனுக்கு தேவையானதை இந்த இராணுவ .ஜெனரல் தாராளமாகக் கொடுக்கிறார். சிங்கள இராணுவம் எந்தவித ஒய்வும் இன்றி , தொடர்ந்து பேரிடுவதற்காக இராணுவத்தினரை பயன்படுத்துவதை பிரபாகரன் விரும்புகின்றார். இறுதியில் பிரபாகரன் விரும்பும் களைத்துப்போன, நெய்ந்துபோன, மோசமாக உடைந்துபோனஇராணுவம் உருவாகும். அதுவே பிரபாகரனின் நாளாக அமையும்.

– தாராகி
The Sunday Times.- 15 June

'ஜெயசுக்குறு' நடவடிக்கையின்போது ஏற்பட்ட இழப்புக்கள் வழமையிலும் மிக அதிகமானவை.இது தொடர்பான தகவல்கள் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த போதும். இப்போது (தாண்டிக் குளம்) இடம்பெற்ற புதிய எதிர்த்தாக்குதல்மூலம் ஏற்பட்ட இழப்புக்களானது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

– இக்பால் அத்தாஸ்
Sunday Times.- 15 June

'ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிராக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எதிர்தாக்குதல் நடவடிக்கை இராணுவ தரப்பில் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தி இருக்கினறது.

தாண்டிக்குளத் தாக்குதலில் *500* கோடி ரூபாவிற்கு மேல் நட்டம் ஏற்பட்டுவிட்டது என்பதை மூடிமறைக்கமுடியாது

– இரா. செல்வராஜா
வீரகேசரி *15* June

புளியங்குளம் நகரை இன்னும் ஓரிரு தினங்களில் கைப்பற்றி விடுவோம். புலிகளின் எறிகணைகள் வவுனியா நகரை எட்ட முடியாத அளவு தூரத்துக்கு அவர்களை ஓரங்கட்டிக் கொண்டிருக்கின்றோம் என படை அதிகாரிகள் பேசிக் கொண்டிருந்த வேளையிலேயே தாண்டிக்குளம் புலிகளின் பெரும் அதிரடித் தாக்குதல் காரணமாகத் தீப்பற்றி எரிந்து நாசமாகியது.

– பி. மாணிக்கவாசகம்
வீரகேசரி June

சிறீலங்காவின் மாதங்களாகும் இந்த இராணுவ நடவடிக்கையானது எதிர்பார்க்கப்பட்ட எதிர்ப்பிலும் கடுமையாக தாக்கப்படுடுள்ளது என இராணுவ உளவுத்துறையினர் கூறுகின்றனர்.

*15000* விடுதலைப்புலிகள் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் முன்னர் இராணுவத்தினர் குறிப்பிட்டபடி *8000* அல்ல.

விடுதலைப்புலிகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றதே தவிர குறையவில்லை என குறிப்பிடும் இராணுவ உளவுத்துறைக்கு நெருங்கிய .வட்டாரங்கள், இது அரசாங்கத்தின் மக்களை பாதிக்கும் தந்திர உபாயங்களினாலேயே நிகழ்கிறது என கூறியது.

– Asia Week



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



லும் சுற்றிவளைத்து முடக்கினர். ஓமந்தையில் இருந்து முன்னேற மூன்று முறை சிங்களப்படை எடுத்த முயற்சிகளும் முறியடிக்கப்பட்டன. இலக்கின் ஒரு சொற்ப வீதத்தைக்கூட நிறைவு செய்யமுடியாத நிலையில், விடுதலைப் புலிகளிடம் பெற்ற அடியால், பெரும் அளவிலான படையினரை இழந்துள்ளதுடன், பெரும் இராணுவத் தளபாட மற்றும் ஆயுத இழப்புக்களை சிறீலங் காப்படை சந்தித்துள்ளது.

### ஆட்பற்றாக்குறை

எதிர்காலத்தைக் கருத்திற்கொள்ளாது மேற்கொள்ளப்பட்ட இவ் இராணுவ நடவடிக்கையில் ஆரம்பத்திலேயே ஆட்பற்றாக்குறை ஒரு பிரச்சினையாகவே உருவெடுத்துள்ளது. இறக்கின்ற மற்றும் காயமடையும் இராணுவத்தினர் அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்த, கைப்பற்றிய இடங்களை கட்டுப்பாட்டில் வைத்திருக்க படையினர் தேவை என்பதும் பெரிய பிரச்சினையாக முன்னுள்ளது. இதனைத் தீர்க்க பொலிஸாரும் கடற்படையினரும் சண்டைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டனர். தரைச் சண்டையைச் சந்தித்திராத அதிலும் விடுதலைப் புலிகளுடன் மோதி அதன் அனுபவத்தைப் பெற்றிராத பொலிஸாரும் கடற்படையினரும் பொய்யாக நம்பிக்கையூட்டப்பட்டு களம் அனுப்பப்பட்டனர். இரண்டு தடவைகள் பெரும் எண்ணிக்கையிலான பொலிஸார் தலைமறைவாகியிருப்பதில் இருந்து, அவர்கள் பலவந்தமாகவே அங்கு அனுப்பப்படுகின்றனர் என்பது தெளிவாகின்றது.

### நிமிரமுடியாத அடி

வெற்றிநிச்சயம் என்ற திமிர்த்தனமான நம்பிக்கையுடன் மே மாதம் 13–ம் திகதி தனது ஆக்கிரமிப்பு அழிவு நடவடிக்கையை ஆரம்பித்த பெளத்த சிங்கள பேரினவாத இராணுவ இயந்திரம். விடுதலைப்புலிகளின் கடுமையான எதிர்த்தாக்குதலால் முழி பிதுங்கிப் போயிருக்கும் நிலையில், விடுதலைப் புலிகள் தமக்கே உரித்தான அலாதியான அற்புதமான அடி ஒன்றை, அது எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத வகையில் கொடுத்திருக்கின்றனர்.

இராணுவ நடவடிக்கை தொடங்கி 29வது நாளில் அவர்கள் புறப்பட்டு வந்த இடத்திலேயே ஒரு புயல்தாக்குதலை நடத்திமுடித்தனர். ஜெயசுக்குறு இராணுவ நடவடிக்கைக்காக கொண்டு வந்து குவிக்கப்பட்ட பெருந்தொகை ஆயுதங்களைச் சிங்களப்படை இழந்தது. டாங்கிகள் கவச வாகனங்களை இழந்தது. முகாமை இழந்தது. 55–வது பிரிகேட் தலையகத்தை இழந்தது. சில தினங்களிற்கு முன்னரேயே தாண்டிக் குளம் கொண்டுவரப்பட்ட புதிய ஆட்டிலறிகள் மூன்றை இழந்தது. 325 இராணுவத்தினரை இழந்தது.

### கட்டுப்பாட்டில்

இதோ புளியங்குளத்தை பிடித்துவிடுவோம், தரைப்பாதையை விரைவில் திறந்துவிடுவோம் என கொக்கரித்துக் கொண்டிருந்த சிங்களப்படைத்தலைமைக்கு, தரைப்பாதையமைக்கப் புறப்பட்ட இராணுவத்தினருக்கும், வவுனியா இராணுவத்தினருக்கும் இடையேயான தொடர்பை விடுதலைப்புலிகள் அறுத்தனர் என்பது பெரும் அதிர்ச்சியையும் அவமானத்தையும் அளித்தது. நொச்சிமோட்டைப் பாலத்தை புலிகள் தகர்த்தனர். தாண்டிக்குளத்தில் இருந்து நொச்சிமோட்டைப் பகுதிவரை எங்கும் விடுதலைப் புலிகளே, அதிலும் பெண்புலிகளே. 13–ம் திகதி அதிகாலை 2 மணியளவில் தாக்குதலை ஆரம்பித்து சில மணிநேரங்களில் நிலைமையை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த விடுதலைப்புலிகள், அன்று இரவு வரை அப்பகுதியை தமது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்து, தமது பணிகளை முடித்தபின்னரேயே அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அந்த பகுதி மீண்டும் தமது கட்டுப் பாட்டில் வந்துள்ளதாகவும், ஓமந்தை இராணுவத்துடன் தொடர்பை ஏற் படுத்திவிட்டதாகவும், அவர்களுக்கான உணவு மற்றும் விநியோகங்கள் செய் யப்பட்டதாகவும் பெரும் பிரச்சாரம் செய்யவேண்டிய நிலைக்கே ரத்வத்தை குழுவினர் தள்ளப்பட்டனர் என்பது அவர்களின் அவமானகரமான நிலையை நன்றாக தெளிவுபடுத்தியது.

### நடவடிக்கை தொடருமா?

விடுதலைப்புலிகளின் சிங்களத்தின் வாலறுத்த தாக்குதல் நடவடிக்கையால் இராணுவ உயர்பீடத்தின் உள்ளும் புற மும் பெரும் அதிர்வலைகள் ஏற்பட் டுள்ளன. இராணுவ இளநிலைத்தளப திகள் தொடர்ந்து நடவடிக்கை மேற் கொள்ள அஞ்சம்கொண்டுள்ளனர். சண்டைக்களத்தில் உள்ள இராணுவத் தின் மனோநிலை மிக மோசமாகப் பாதிப்படைந்துள்ளது. ஒவ்வொரு தாக் குதல்களிலும் விடுதலைப் புலிகளால் கவரப்படும் அல்லது அழிக்கப்படும் நவீன ஆயுதங்களால் ஏற்படும் பாதிப்பு, உயிரிழப்பு என்பன படையினரை கலவரத்துக்கு உள்ளாக்கியுள்ளது. தொடர்ந்து விடுதலைப்புலிகள் காட்டி வரும் உறுதியான எதிர்ப்பு ஜெயசுக் குறு இராணுவ நடவடிக்கையில் பெரும் தளம்பலை ஏற்படுத்தியுள்ளது என்பது சொல்லித் தெரியவேண்டிய விடய மேயல்ல.

ஆனால் தோல்வியால் முகம் சிவந்து போயுள்ள ரத்வத்தையின் அகங்காரம், அதிகாரம் என்பன மேலும் மேலும் யுத்தவெறியையே தூண்டும் என நம்ப லாம். சிங்களப்படையை எவ்வளவு இழந்தும் தனது கதாநாயக வேடத்தை தக்கவைத்துக்கொள்ள அவர் முயற்சிக் கக்கூடும்.

ஆனால் ஒன்று மாத்திரம் உறுதி யானது. சிறீலங்கா இராணுவத்தின் விநியோகப்பாதையமைக்கும் இராணுவ நடவடிக்கை எத்திசைநோக்கியும் முன் னேறலாம், ஆனால் அவர்களின் மோச மான உயிரிழப்பும் இராணுவதளபாட இழப்பும் உயர்ந்தே செல்லும்... வெற்றி நிட்சயம் என்ற பொருள்தரும் சிறீலங் காப்படையின் இராணுவ நடவடிக் கைக்கு இறுதியில் தோல்வி நிச்சயம் என்பது நிச்சயமானது.

— சுப்பு

## சர்வதேச சமூகமே துன்பப்படும் தமிழீழ மக்களின் துயர்துடைப்பிற்கு உதவுங்கள்

*1995, 1996, 1997*–ம் ஆண்டுகள் தமிழீழத்தைப் பொறுத்தவரையும் தமிழீழத் தில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையும் மிகவும் துன்ப துயரங்களைச் சந்தித்த ஆண்டுகளாகும்.

தமிழ் இனத்திற்கு எதிராக, குறிப்பாக இலங்கையின் வடபகுதியில் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய இராணுவ நடவடிக்கைகள் பெருந் தொகையான மக்களை இடம்பெயர வைத்தது. 1995– ஆடியில் யாழ் குடாநாட் டில் ஆரம்பிக்கப்பட்ட 'முன்னேறிப்பாய்தல்' இராணுவ நடவடிக்கையில் இருந்து 'ட்றகன்பயர்', 'கைகுலுக்கல்', 'இடிமுழக்கம்', 'சூரியக்கதிர் 1, 2, 3' இல் முடிந்து வன்னிப் பகுதியில் 'சத்ஜெய 1, 2, 3 இல் முடிந்து, வன்னிப் பகுதியில் 'எடிபல', 'ஜெயசுக்குறு' எனத் தொடர்ந்து கொண்டிருக்கிறது.

இடம்பெயர்ந்த மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இடம்பெயர்ந்ததனால் அவர்கள் வாழ்வு அடிப்படை வசதிகளற்று வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலையில் சூரியக்கதிர் 2,3 இராணுவ நடவடிக்கைகளிலும், சத்ஜெய இராணுவ நடவடிக்கைகளிலும் இடம்பெயர்ந்த 500,000–ற்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அரச உலர் உணவு நிவாரணம் பெறமுடியாதபடி அரசு தடைச்சட்டங்களை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தி வருகின்றவேளை, 1997 வைகாசியில் இதுவரை பல இராணுவ நடவடிக்கைகளிலும் இடம்பெயர்ந்து, உலர் உணவு பெற்றுவந்த 1,04,910 குடும்பங்களைச் சேர்ந்த 4,21,462 பேரில் 58,660 குடும் பங்களைச் சேர்ந்த 2,36,462 பேர்களின் உணவு முத்திரைகளை வெட்டி அவர் கள் உலர் உணவு நிவாரணம் பெற முடியாதபடி நடைமுறைச்சட்டத்தை அமு லாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது.

இந்த வகையில் வன்னிப் பகுதியில் நான்கு மாவட்டங்களான கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் வாழும் இந்த மக்கள் பெரும் பட்டினிச்சாவை எதிர்நோக்கும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

மேலும் இவ்வாறான தடைச் சட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ள அரசு, தொடர்ச்சியான பொருளாதாரத் தடைச்சட்டங்களையும் கடல்வலயத் தடைச் சட்டங்கள் போன்ற தொழில் வலயத் தடைச்சட்டங்களையும் நடைமுறைப் படுத்திவருவதோடு தனது அரச நிதியில் செயற்படுத்தப்படும் நிவாரணப் புனர் வாழ்வு அபிவிருத்தித் திட்டங்களையும் மட்டுப்படுத்தி மிகவும் குறைத்து, பாதிக் கப்பட்ட மக்களுக்கு சேவையாற்ற முன்வந்த சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங் களையும் அவற்றின் சேவைகளையும் மட்டுப்படுத்தியும், கட்டுப்படுத்தியும் வரு கிறது. இதனால் நிரந்தரமாக நிம்மதியாக வாழ்ந்த மக்கள் தொழில் இழந்து தொழில்வாய்ப்பு கிடைக்காத நிலையிலும் சமூக அபிவிருத்தியை அடைய முடி யாத நிலையிலும் தமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி வாழும் சூழ்நிலை உருவாகியுள்ளது. மேலும் சமூகத்தின் சுகவாழ்வுக்குத் தேவையான அடிப்படை சுகாதாரத்தைப் பேணும் குளோரின், மலத்தியன் போன்ற பொருட்களுக்கும், மருந்துப் பொருட்களுக்கும் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் விதித்துள்ள சிறீலங்கா அரசு, தமிழ் இனத்தின் சுகவாழ்வையே பாதிக்கும் சூழ்நிலையை உரு வாக்கியுள்ளது.

இந்த வகையில் அரசு தனது நிதி ஒதுக்கீடுகளையும் நிதிச்செயற்பாடுகளை யும் தமிழ் மக்களுக்கு மிகவும் குறைத்து சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளையும் மட்டுப்படுத்தியும் வரும் சூழ்நிலையில் தமிழீழப் பகுதியில் ஒரே ஒரு தேசிய அரசசார்பற்ற நிறுவனமான தமிழர் புனர்வாழ்வுக் கழகம், பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நிவாரண புனர்வாழ்வு அபிவிருத்திப் பணிக ளில் முன்னின்று உழைத்தும் சேவையாற்றியும் வருகிறது.

- புனர்வாழ்வுக் கழகம் தமிழீழத்தில் வெளியிட்ட (03. 06. 97) பிரசுரத்திலிருந்து...



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## புதுச்சேரியில்

# தமிழர் எழுச்சிப் பேரணி




ஈழமக்கள் ஆதரவு கூட்டமைப்பு சார்பில் கடந்த 24.05.1997சனியன்று புதுச்சேரியில் 'ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாடு' நடைபெற்றது. மாநாட்டையொட்டி தமிழர் எழுச்சிப் பேரணி நடைபெற்றது. பேரணி மாலை 5.30 மணிக்கு புதுச்சேரி எல்லப்பிள்ளைச்சாவடியில் இருந்து தொடங்கி, நகரின் முக்கிய வீதிகள் வழியாக மாநாட்டுத் திடலைச் சென்றடைந்தது. பேரணியை புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர், பாட்டாளி மக்கள் கட்சி பொருளாளர் சி.இராம்சிங் தலைமை ஏற்று நடத்தினார். பேரணியைத் தொடக்கிவைத்து தமிழ் வளர்ச்சி நடவடிக்கைக் குழுத் தலைவர் பேராசிரியர் ம.இலெ. தங்கப்பா உரையாற்றினார். பேரணியில் பெண்கள், மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு ஈழத்தமிழர்க்கு ஆதரவாக முழக்கமிட்டு வந்தனர். பேரணியில் தமிழர் பண்பாட்டை எடுத்துரைக்கும் வகையில் இசை முழக்கம் நடத்தப்பட்டன.

இரவு 7.30 மணியளவில், புதுச்சேரி பெரியார் திடலில் மாநாடு நடைபெற்றது. மாநாட்டில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மாநாட்டைத் தொடக்கிவைத்து புதுச்சேரி ஜனதா தளத்தைச் சேர்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மா. இளங்கோ பேசினார். மாநாட்டை, கூட்டமைப்பின் அமைப்பாளர் இரா. அழகிரி தலைமை ஏற்று நடத்தினார். அனைவரையும் மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் ந.மு.தமிழ்மணி வரவேற்றார். மாநாட்டில் பதின்னான்கு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து 'தாயகம்'– ஈழத் தமிழர் சிறப்பிதழ் வெளியிடப்பட்டது. பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ச. இராமதாஸ் இதழை வெளியிட வரவேற்புக் குழுத் தலைவர் ந.மு.தமிழ்மணி பெற்றுக்கொண்டார். மாநாட்டில் ஜார்ஜ் பெர்னாண்டஸ் [இந்திய பாராளுமன்ற உறுப்பினர், தலைவர், சமதா கட்சி,] டாக்டர் ச.இராமதாஸ் [நிறுவனர், பாட்டாளி மக்கள் கட்சி], பழ.நெடுமாறன் [தலைவர், தமிழர் தேசிய இயக்கம்], கோவை கு. இராமகிருட்டிணன் [பொதுச் செயலாளர், திராவிடர் கழகம்], தியாகு [பொதுச் செயலாளர், தமிழ் தமிழர் இயக்கம்], இரா. இராசேந்திரசோழன் [தமிழ்த் தேசப் பொதுவுடமைக் கட்சி], ப. அருளி [தமிழினத் தொண்டியக்கம்], கே.எஸ்.மணி [இந்திய கம்யூனிஸ்ட் கட்சி [ம.லெ], மு. காண்டீபன் [தலைவர், காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ்], சொ. கலியபெருமாள் [தலைவர், தி.க. [இரா] ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மாநாட்டின் முடிவில் வரவேற்புக் குழுச் செயலாளர் கோ. சுகுமாரன் [பொறுப்பாளர், தமிழ்நாடு இளைஞர் பேரவை] நன்றி கூறினார்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# விரைவில் ஈழப்பிரச்சினைக்காக டெல்லியில் மாநாடு
## ஜார்ஜ் பெர்னாண்டஸ் வேண்டுகோள்

ஈழத்தமிழர் பிரச்சினை தொடர்பாக டெல்லியில் மாநாடு கூட்ட வேண்டுமென ஜார்ஜ் பெர்னாண்டஸ் வேண்டுகோள் விடுத்தார். ஈழ மக்கள் ஆதரவு கூட்டமைப்பு சார்பில் புதுச்சேரியில் 24–ம் திகதி நடத்தப்பட்ட மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு அவர் தெரிவித்தார்.



### அவரது உரையிலிருந்து

“ஈழத்தமிழர் பிரச்சினாக்காக கூட்டப்படும் மூன்றாவது மாநாட்டில் நான் இப்போது கலந்து கொள்கிறேன். ஜனவரியில் பெங்களூரிலும், பெப்ரவரியில் பா.ம.க. சார்பில் சென்னையிலும் கூட்டப்பட்ட பிரமாண்டமான மாநாட்டிலும் நான் கலந்து கொண்டேன். இப்போது இங்கே வந்துள்ளேன். இப்படியான மாநாடுகள் நிறைய நடத்தப்பட வேண்டும்.

ஈழப் பிரச்சினை குறித்து ஒரு வினோதமான நிலையைப் பத்திரிகைகள் கடைப்பிடித்து வருகின்றன. அங்கே மக்கள் மீது இலங்கை அரசு நடத்திவரும் வன்முறைத் தாக்குதல் பற்றி அவை எதுவும் பேசுவதில்லை.

ஈழத்தமிழரின் உண்மையான பிரச்சினைகள் இந்திய மக்கள் முன் எடுத்துச் செல்லப்படவில்லை. எனவே, இத்தகைய மாநாடுகள் மூலம்தான் நாம் அவற்றை எடுத்துச் சொல்லமுடியும்.

இன்னும் இரண்டரை மாதங்களில் நமது நாடு தனது சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடவுள்ளது. அதற்காக ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை அது செலவிட உள்ளது. இலங்கையும் அதே காலத்தில்தான் சுதந்திரம் பெற்றது. அங்கே 1972 வரை இப்படியான விதத்தில் இனச்சிக்கல் இருக்கவில்லை. ஆயுதத் தாக்குதல்கள், உள்நாட்டு யுத்தம் எதுவுமில்லை. பிரச்சினைகள் இருந்தன. அதற்கான தீர்வுகள் பற்றியும் பேசப்பட்டன. டெல்லியில் உட்கார்ந்துகொண்டு ஈழமக்கள் போராட்டத்தைக் குறை சொல்பவர்கள் இதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

நமது அரசியல் சட்டம் நமக்கு சில அடிப்படை உரிமைகளை அளித்துள்ளது. அதில் மக்களிடையே பாராபட்சம் இருக்கக்கூடாது என வகுக்கப்பட்டுள்ளது. நமக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை ஒத்த உரிமைகளைத் தான் ஈத்தமிழர்கள் கேட்கின்றனர். அவர்களது போராட்டத்தை குறை கூறுபவர்கள் முதலில் நமது அரசியலமைப்புச் சட்டத்தைப் படிக்கட்டும்.

1972–ல் தான் இலங்கை அரசு தன் அரசியல் சட்டத்தைத் திருத்தி புத்த மதத்தை அரச மதமாக அறிவித்தது. அது இப்போது ஒரு மதச் சார்பற்ற நாடு அல்ல. அங்கே பல மதத்தவர்கள் வாழ்கின்றனர். அவர்கள் தாங்கள் இரண்டாந்தர குடிமக்களாக நடத்தப்படக்கூடாது எனக் கோருகின்றனர்.

இலங்கைக்குச் சிங்களம் முதலில் போனதா, தமிழ் முதலில் போனதா என ஆராய்ச்சி செய்பவர்கள் செய்து கொண்டிருக்கட்டும். அங்கே நடப்பவை பற்றி அக்கறை கொள்பவர்கள் முதலில் ஒரு விஷயத்தை நினைவில் கொள்ள வேண்டும். அங்கே ஒரு பாகுபாடான சூழ்நிலை நிலவி வருகிறது என்பதை உணர வேண்டும். மொழியில், மதத்தில், இனத்தில் இந்த பாகுபாடு காட்டப்படுகிறது. இது வேலை



மாநாட்டில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய திரு.பழ.நெடுமாறன் அவர்கள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வாய்ப்பில் எதிரொலிக்கிறது. சகல தரப்புகளிலும் தமிழர் உரிமை மறுக்கப் படுகிறது.

அடுத்து கலாச்சார ஆக்கிரமிப்பு. இன்று செயற்கைக்கோள் தொலைக் காட்சிகள் மேற்கத்திய கலாச்சரத்தை உலகெங்கும் திணித்துக் கொண்டிருக்கின்றன. முக்கியமாக அமெரிக்கக் கலாச்சாரம் திணிக்கப்படுகிறது என்பது பற்றி நாமெல்லாம் பேசி வருகிறோம். அதுபோலவே இலங்கையில் சிங்களக் கலாச்சரம், அனைத்து தரப்பு மக்கள் மீதும் திணிக்கப்படுகிறது.

அங்கு தமிழர்கள் நடத்தும் போராட்டம் தமது கலாச்சாரத்தை பாதுகாக்கும் போராட்டம். தமது குழந்தைகளுக்கு தமது மொழியைப் பயிற்றுவிக்க நடத்தும் போராட்டமாகும்.

நான் விடுதலைப் புலிகளை ஆதரிப்பதாகத் தொடர்ந்தும் குற்றம் சாட்டப்படுகிறேன். புலிகளை ஆதரிப்பதா இல்லையா என்பதல்ல கேள்வி. இலங்கையில் யார் யாரைத் தாக்குகிறார்கள், பாதிக்கப்படுவது யார் என்பதுதான் முக்கியம்.

இங்கேதான் ஒரு கட்டுரையில் இருந்து சில உண்மைகளை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இந்தக் கட்டுரையை எழுதியவர் பெயர் வசந்த ராஜா, ரூபவாஹினியின் இயக்குநராக இருந்தவர். அமைதிப் பேச்சுவார்த்தை களின்போது இலங்கை அரசு தரப்பில் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டவர்களில் இவரும் ஒருவர். அவர் குறிப்பிட்டுள்ளார், பேச்சுவார்த்தை முறிந்ததற்குப் புலிகளல்ல காரணம், இலங்கை அரசுதான் காரணமென்று எழுதியுள்ளார். ஆரம்பம் முதலே பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்வதிலேயே அரசு கவனமாயிருந்தது. பேச்சுவார்த்தை நாடகமும் கூட இலங்கை இராணுவம் தயாரித்துத் தந்த ஒரு தந்திரம்தான் என எழுதியுள்ளார்.

தொண்டமானை உங்களுக்குத் தெரிந்திருக்கும். மலையகத் தமிழர்களின் பிரதிநிதியாக இலங்கை அரசில் பங்கெடுப்பவர். தொழிற்சங்கத் தலைவர். அந்த மலையகத் தமிழர்கள் இரவு பகலாக அரசால் சுரண்டப்படுகின்றனர். அவர்களுக்கு வீடுகள் கிடையாது. தொண்டமான் வாதாடி மலையகத்தின் தோட்டத் தொழிலாளர்களுக்குச் சிறு சிறு குடியிருப்புகள் கட்டித்தர அரசு ஒப்புக்கொண்டது. ஆனால் அந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் தரக்கூடாது என சிங்கள வெறியர்கள் போராட்டம் நடத்தினார்கள். அந்தத் தொழிலாளர்களின் வீடுகளைப் பறிக்க இராணுவம் வந்தது. அவை சிங்கள இராணுவம் பெயரிலே பட்டா செய்யப்பட்டன. அங்கே யார் ஆயுத பலத்தைப் பிரயோகிக்கின்றனர். யாருடைய உரிமையைப் பறிக்கின்றனர் என்பதற்கு இது ஒரு உதாரணம்.



பேரணியில் கலந்துகொண்ட பெண்கள்

இலங்கையில் அமைதியை விரும்புவது யார், அதைத் தடுப்பது யாரென்பதை நாம் பார்க்க வேண்டும். பிரபாகரன் ஒரு அறிக்கை அளித்துள்ளார். நாங்கள் அமைதியை விரும்புகிறோம். ஆனால் அரசாங்கத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ள பௌத்த சிங்கள இனவெறி அமைதியை அனுமதிக்குமா? என பிரபாகரன் ஐயம் தெரிவித்துள்ளார்.



மாநாட்டில் கலந்துகொண்டு
சிறப்புரையாற்றிய
டாக்டர் ராமதாஸ் அவர்கள்

ஈழத்தமிழர் மீது எண்ணற்ற கொடுமைகள் ஏவப்படுகின்றன. சில ஆண்டுகளுக்கு முன் இந்திய அமைதிப்படையினர் வல்வெட்டித்துறையில் இருநூறுக்குமேற்பட்ட தமிழர்களைப் படுகொலை செய்தது பற்றிய உண்மைகளைத் தொடுத்து வெளியிடப்பட்ட ஒரு நூலுக்கு நான் முன்னுரை எழுதினேன்.

தற்போது பதினேழாயிரம் ரிசர்வ் போலீசாரைத் தமிழர் பகுதியில் இலங்கை அரசு நிறுத்தியுள்ளது. மிகப் பெரிய பீரங்கிகளை அவர்களிடம் கொடுத்துள்ளது. நான்கு கி.மீ. தூரம் சுடக்கூடிய பீரங்கிகள் அவை. தமிழர்களின் வீடுகள் உடைமைகள் யாவும் பீரங்கிக் குண்டுகளால் தரைமட்டமாகின்றன. இவ்வளவு செய்திகளும் இந்திய அரசுக்குத் தெரியும். ஆனால் இவற்றைக் கண்டித்து ஒரு சுண்டு விரலைக்கூட இந்திய அரசு அசைக்கவில்லை. இங்குநான் புலிகளைப் பற்றிப் பேசவில்லை. தமிழ் மக்களின் துயரை மனித உரிமை மீறல்கள் என்ற விதத்தில் பார்க்க வேண்டும் என்று கூறுகிறேன்.

இந்த மாநாட்டில் போடப்பட்ட தீர்மானங்களில் ஒன்று, ஐ.நா.சபை ஒரு உண்மையறியும் குழுவை இலங்கைக்கு அனுப்ப வேண்டுமெனக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கோரியது. அதுகூடத் தேவையில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த அஸொஸி யேட்டட் பிரஸ் (Associated Press) நிறுவனத்தின் செய்தியாளர் ஒருவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். இலங் கையில் உள்ள செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்திற்கு வாரம் ஒன்றுக்கு 600 பேர்களுக்குக் குறையாமல் வருகின்ற னர். தங்களது 'உறவினர்களை ராணு வம் பிடித்துச் சென்றது. அதன்பின் அவர்களைக் காணவில்லை என புகார் கொடுக்கின்றனர்' என அந்த செய்தியாளர் எழுதுகிறார். தினமும் நூறு பேர் காணாமல் போகின்றனர்.

இந்தக் கொடுமைகளையெல்லாம் பார்த்துவிட்டு கண்ணை மூடிக் கொண்டிருக்க வேண்டும் என இந்திய அரசு சொல்கிறது. ஏன்? ராஜீவ் காந்தி யின் விதவை மனைவி வருத்தப்படு வார் என்பதற்காக. இம்மாதிரியான கொடுமைகள் பாகிஸ்தானில், ஆப்கா னிஸ்தான், அல்லது ஆபிரிக்க நாடுகள் ஏதோவொன்றில் நடந்திருந்தால் ஐ.நா. சபையில் இந்தியப் பிரதிநிதி எழுந்து மனித உரிமைகள் பறிபோகி றதே என ஆவேசப்பட்டிருப்பார்.

இன்றுள்ள குஜ்ரால் அரசாங்கம் காங்கிரசின் ஆக்ஸிஜனால் உயிர் வாழ் கிற அரசாங்கம். அது என்ன செய்ய முடியும்? காங்கிரசுக்கு பயன்படுகிறது.

1992—ம் ஆண்டில் ஹாங்காங்கில் ஒரு மாநாடு நடந்தது. கிருஷ்ணய்யர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ஆசிய, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர்கள் வந்திருந்தனர். ஈழப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டத்தைத் தயாரித்து, நாங்கள் அதனை இந்திய அரசு, இலங்கை அரசு, புலிகள் ஆகிய மூன்று தரப்பினருக்கு அனுப்பினோம். புலி கள் மட்டும்தான் அதற்கு உடன்பட்டு பதிலனுப்பினார்கள். மற்ற இரண்டு அரசுகளும் பதில் பேசவில்லை. இதில் யார் அமைதியை விரும்புகிறார்கள்,



தாயகம் ஈழத்தமிழர் சிறப்பிதழை டாக்டர் ராமதாஸ் வெளியிட முதல் பிரதியை ந.மு.தமிழ்மணி பெறுகிறார். அருகில் ராம்சிங், கோ.சுகுமாரன்.

தீர்வினை விரும்புகிறார்கள் என்பது புரியவில்லையா?

தற்போது இலங்கையில் பல்வேறு நாட்டுப் படையினர் பயிற்சி தருகின்ற னர். அமெரிக்கா, இஸ்ரேல், பாகிஸ் தான் முதலிய நாடுகளின் ராணுவ கமாண்டோக்கள் அங்கு பயிற்சி தரு கின்றனர். இது ஈழமக்களுக்கு மட்டு மல்ல இந்திய அரசுக்கும் ஆபத்தான தாகும். இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலை உண்டாக்கியுள்ள விச யமாகும்.

இதைப்பற்றி நாம் பேசக்கூடாதா? ஒரு விதவைக்காக இதைப் பேசக் கூடாது என்றால், ஈழத்தில் பத்தாயிரக் கணக்கான தமிழ்ப் பெண்கள் விதவை களாகி உள்ளார்களே அது சரியா? இந்த விதவையாவது புன்னகை புரிந்த படி போஸ் கொடுக்கிறார். இவருக்கு பன்னாட்டு நிறுவனங்கள் கோடிக் கணக்கில் நன்கொடைகள் தருகின்றன. ஆனால் ஈழத்தில் விதவையாக உள்ள தமிழ்ப் பெண்கள் அடுத்தவேளை உணவுக்குக்கூட வழியின்றி தவிக்கின் றனர். அவர்களது வாழ்நாளில் புன் னகை பூக்கிற தருணம் இன்னொரு முறை வருமா என்பது நிச்சயமில்லை. எனவேதான் நான் கேட்கிறேன். ஒரு நாட்டின் வெளியுறவுக் கொள்கையை ஒரு விதவையின் பிரச்சினையை வைத் துத் தீர்மானிப்பதா என்று கேட்கி றேன்.

இந்தப் பிரச்சினையைப் பேச டெல்லியில் மாநாடொன்றை நாம் கூட்டுவோம். பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் ஜூலை 15—ல் தொடங்குகிறது. அந்த சமயத் தில் மாநாட்டினை நடத்துவோம். இங் கிருந்து எல்லோரும் திரண்டு வந்து இந்திய அரசின் கவனத்தை ஈர்ப் போம்.

இவ்வாறு பெர்னாண்டஸ் பேசி னார்.

★★★

**மீண்டும் எச்சரிக்கிறோம்!**

உங்கள் துப்பாக்கிகள்
எங்களைத் துளைக்கலாம்!

உங்கள் விமானங்கள்
குண்டுகள் பொழியலாம்!

எங்கள் படைகள்
உங்களை மன்னிக்கலாம்!

நாங்கள்.........
நாளை விடியும் போது
உங்கள் பிணங்களைத்தானும்
தோண்டி எடுத்துவந்து
தூக்கிலிடுவோம்!

– துறையூரான்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழர் தேசியப் போராட்டமும் மக்களின் சுயநிர்ணய உரிமையும்

## ஐ.நா. மனித உரிமைகள் மற்றும் துறை சார்ந்த மனித உரிமைச் சட்டங்களும்

சர்வதேச சட்ட விவகாரங்களுக்கான நிபுணர்
கரேன் பாக்கர் *[Ms.Karen Parker]*
அவர்களின் கட்டுரையில் இருந்து தொகுக்கப்பட்டது.

சுயநிர்ணய உரிமை என்பது அனைத்துலக மனித உரிமைச் சட்டத்தில் அடிப்படைக் கொள்கையாக உறுதி செய்யப்பட்டுள்ளது. துரதிஷ்டவசமாக இந்த சுயநிர்ணய உரிமை தமிழர் தேசிய போராட்டத்திற்கும் பொருந்தக் கூடியதாக சகலராலும் இன்னமும் பார்க்கப்படவில்லை. இருப்பினும் சிறீலங்காவின் அண்மைய நிகழ்வுகள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுமதிப்பீடு செய்வதற்கேற்ப வலிதே அமைந்துள்ளன.

**போர் வெற்றியின் காரணியத்தாலோ அல்லது அரசியல் பேச்சுவார்த்தைகளினாலோ தமிழர் பகுதி முழு அரசுரிமை பெறுவாரெனில் அதன் பின்னர் அவர்கள் தங்களுடைய சமூக பொருளியல் பண்பாட்டு முன்னேற்றங்களைத் தன்விருப்பின்படி தீர்மானித்து தன் முடிவுரிமையின் அடிப்படை நிலையைச் செயல்படுத்த இயலும்.**

இக் கட்டுரை தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றியும்— குறிப்பாக முன்பு நடைபெற்ற தமிழர்களின் போராட்டங்கள் நடைமுறை ஆய்வுக் கண்ணோட்டத்தில் சிறந்ததோர் இடத்தைப் பெரும்பாலும் இன்றைய நிகழ்வுகள் எவ்வாறு அவ்வாய்வுகளுக்கு ஏற்ப அமைந்துள்ளன என்பதையும் விளக்குகிறது.

### சுயநிர்ணய உரிமைச் சட்டம்

சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு இரண்டு பிரதானமான அனைத்துலக மனித உரிமை இயக்கங்களில் முதன்மையாக பாதுகாக்கப்பட்ட உரிமையாகத் திகழ்கிறது. அனைத்துலக அமைப்பின் பொதுமனித அரசியல் உரிமைப் பிரிவும் (THE INTERNATIONAL COVENANT ON CIVIL AND POLITICAL RIGHTS) அனைத்துலக அமைப்பின் பொருளியல் சமூகப் பண்பாட்டியல் உரிமைப் பிரிவும் (THE INTERNATIONAL COVENANT ON ECONOMIC, SOCIAL AND CULTURAL RIGHTS) – சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டைத் தன்னகத்தே கொண்டுள்ளன.

இருப்பினும்கூட இவ் உடன்பாடுகள் சுயநிர்ணய உரிமைத் தன்மையை வரையறை செய்து விளக்காமையால் பிற அனைத்துலகச் சட்டங்களையும் பகுப்பாய்வு செய்து ஒப்பு நோக்கியே தன் முடிவுரிமை என்னவென்பதை நாம் உறுதி செய்ய இயலும்.

"மக்கள்'' மீது பிரயோகிக்கப்படும் சுயநிர்ணய உரிமை எத்தகையோருக்குச் சார்புறத்தக்கது என்பதை வரையறை செய்வது முதல் தேவையாகும்.

இவ்வுரிமை அரசுக்கோ அன்றி தனியாருக்கோ சார்புற அமையாமல் பொதுவாக மக்கள் குழுமத்திற்கு மட்டுமே சார்புடையதாக அமைந்துள்ளது.

அனைத்துலக நீதி மன்றம் இவ் எதிர்பார்ப்பை சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டில் மக்களின் உரிமை *[1975 ICJ 12,31]* என்பதை "மேற்கு சகாரா" என்ற தமது வழக்கில் விவரித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சிறப்புத் தொடர்புத்துறை பணியாளர் [ U.N. SPECIAL RAPPORTEUR...] திரு





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஹெக்டர் கிரோஸ் எஸ்பிஸ் அவர்கள் தனது சுயநிர்ணய உரிமை என்ற அறிக்கையில் "தன் முடிவுரிமை என்பது மக்களிற்கான உரிமை..... பொதுவான தேவைகளை உள்ளடக்கி பொதுவான எதிர்காலத்தை உருவாக்கும் தன்மைகளைப் பெற்றுள்ள ஒரு குறிப்பிட்ட இனக்குழுவுக்கு அமையக்கூடியது" [U.N.DEC E/CN4/SUB2/ 405/ ROV1 [1980] at PA] எனத் தெளிவுபடுத்தியுள்ளார்.

மக்கள் என்ற சொல் மற்றுமொரு வரையறை சிக்கலை உருவாக்குகின்றது. மக்கள் என்போர் — சுயநிர்ணய உரிமையை, ஒரு நிலப்பரப்பில் அல்லது தாயகம் எனக் குறிப்பிடும் பகுதியில் ஏதோவொரு சூழ்நிலையில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ இழந்துவிட்ட ஒரு சிறுபான்மை இனமாகார்.

உரிமை என்பது தனது நிலப்பகுதியை அந்நிய ஆதிக்கத்தில் அல்லது காலனித்துவ வல்லாட்சியில் இழந்துவிட்ட மக்களுக்கே அடிப்படையில் உரித்தாகின்றது என பெரும்பாலான வல்லுனர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.

"விடுதலை" குறித்து விடுக்கப்பட்ட ஐக்கிய நாட்டு அறிக்கையில் — வேற்றின வல்லாதிக்கத்திற்குட்பட்ட நாடுகளுக்கும் வேற்றின ஆட்சிக்குட்பட்ட மக்களுக்குமே விடுதலை உணர்வு சார்புடையதாக அமைந்துள்ளது. [U.N.G.A. Res 1514, 15 U.N. GAOR SVPP [Ne16] at P66 [1961] அதன்படி அந்நிய வல்லாதிக்கத்திற்கு உட்பட்டுள்ள வரையிலும் மட்டுமே தன் முடிவுரிமையை அந்த அடக்கப்பட்ட மக்கள் அடைவர்.

அந்த வேற்று வல்லாதிக்க சக்திகள் வெளியேறிய பின்னர் தன் முடிவுரிமை காலவாதியாகிவிடாது. அவ் காலனித்துவ சக்தி அரசியல் வேற்றுமை, ஆளுகையைக் கொண்ட சில இனக்குழுக்களை ஒன்றிணைத்து செயற்கையாக ஒரு நாட்டினை உருவாக்கினாலும் அதற்கும் சுயநிர்ணய உரிமை சட்டம் செல்லுபடியாகாது.

பண்டுதொட்டு வாழ்ந்துவரும் தனிப்பட்ட இனக்குழுக்கள் சுயநிர்ணய உரிமைக்குத் தனியானதோர் வாய்ப்பினைப் பெறுவதற்கு ஏற்ப அச்சட்டம் அமையவில்லை.

அந்நிய வல்லாதிக்கம் ஒழிந்த பின்னர் மற்றுமொரு பிறிதொரு அந்நிய வல்லாதிக்கம் அம்மக்களின் மேல் ஏற்பட்டாலன்றி தன்முடிவுரிமை மீண்டும் அம்மக்களுக்குச் சார்பாக அமைய வழியில்லை. எடுத்துக்காட்டாக ஸ்பானிஸ் வல்லாதிக்கத்தினர் சகாராவை விட்டு நீங்கிய பின்னர் மொரொக்கோ சகாராவைக் கைப்பற்றியதைக் கூறலாம்.

வேறுபட்ட இனக்குழுக்களைக் கொண்ட கீழ்கண்ட நாடுகள் வேற்றின வல்லாதிக்க சக்திகள் வெளியேறிய பின்னர் பிளவுற்றன, பிரிவு முயற்சிகளை மேற்கொண்டன. பாகிஸ்தானும், நைஜீரியாவும் அரசியல் வேறுபாட்டால் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்களுக்கு உள்ளாயின. பங்களாதேசத்தைப் பொறுத்த வரையிலும் வங்காளிகளின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அவர்களுக்கு நாடு கிடைத்தது என்பதில்லை — அவர்கள் போரில் பெற்ற வெற்றியாலேயே நாடு பெறப்பட்டது. நைஜீரியாவின் இபோ (IBO) இன மக்கள் போரில் வெற்றி பெற்றிருந்தால் பிற நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நாட்டைப் பெற்றிருப்பர். போரின் தோல்வியால் அவர்கள் சுயநிர்ணய உரிமை உள்ளவர்களாக இப்பொழுது கருதப்படவில்லை.



**சுயநிர்ணய உரிமைக்குரிய அடிப்படை பொருள் கூறுகள்**

சுயநிர்ணய உரிமைக்கு உரிய அடிப்படைக் கூறுகள் பற்பல சிக்கல்களைக் கொண்டதாக அமையவில்லை. மக்கள் கன் முடிவுரிமையைப் பெறுவதென்றால் அவர்கள் தமது அரசியல் நிலைப்பாட்டையும் பொருளியல் சமூகவியல் பண்பாட்டியல் முன்னேற்றங்களையும் தன்னிச்சையாகவே செய்வதற்கும் முடிவெடுக்கவும் உரிமை உள்ளவர்களாவர்.

தன் முடிவுரிமைக்கு வழிகோளும் இன்றியமையாத பொருளியல் கட்டுப்பாடு, ஐக்கிய நாட்டு அறிக்கையில் இயற்கை வளங்களின் மேல் நிலையான அரசுரிமை [GA Res 1803 U.N. GAOR SUPP [Ne17] at P15] என்ற பொருளில் வலியுறுத்தப்படுகிறது.

**பங்களா தேசத்தைப் பொறுத்த வரையிலும் வங்காளிகளின் சுயநிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டதால் அவர்களுக்கு நாடு கிடைத்தது என்பதில்லை - அவர்கள் போரில் பெற்ற வெற்றியாலேயே நாடு பெறப்பட்டது.**

பண்பாட்டு உரிமைகள் மரபுமுறையில் கட்டப்படும் வீடுகள், மொழிகள், மதங்கள், பழக்கவழக்கங்கள் யாவும் தன் முடிவுரிமையினுள் அடங்குகின்றன. எடுத்துக்காட்டாக வளர்ந்து வரும் பாரம்பரிய பண்பாட்டு குடிகளின் உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் அவர்களின் பண்பாட்டு உரிமைகள் கீழ்கண்டவாறு குறிப்பிடப்படுகின்றது.

....... மக்களும், அகழ்பொருள் வரலாற்று மற்றும் போற்றுதற்குரிய இடங்கள், கலைப்பொருட்கள், அமைவுகள், அறிவு சார்ந்த கலைப்படைப்புகள் உள்ளிட்ட தங்களுடைய பொருள் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை உரிமையுடையதாகப் பெறவும், தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரவும் தொடர்ந்து செயற்படலாம்.

அவர்கள் தங்களது வரலாற்றுச் சின்னங்களில் பெரும்பான்மையைத் தாங்களே வைத்துக்கொள்ள உரிமை உள்ளவராவர். அரசுடன் தங்களின் தாய்மொழியில் தொடர்பு கொள்ளவும், கல்வி பயிலவும், தங்களது சொந்தக் கல்வி வாய்ப்புக்களை தாமே அமைத்துக் கொள்ளவும் உரிமை பெறுவர். [U.N. DOC E/CN4/SUB 2/ AC4/ 1985/ W.P5 and add 4]

**சுயநிர்ணய உரிமை என்பது இன்றியமையாத தன்மை பெற்றது**

சுயநிர்ணய உரிமையின் கோட்பாடு அதன் இன்றியமையாத தன்மையினால் வலுப்பெறுகிறது. அதன் பொருள் இவ்வுரிமை எந்தவொரு சூழ்நிலையிலும் மறுக்கப்பட முடியாத நிலையையும் தன்மையையும் கொண்டதென்பதாகும். இவ்வுரிமையின் செயல்தன்மையை எந்தவொரு ஒப்பந்தமுமோ, அனைத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

துலக அல்லது நாடு சார்ந்த இயக்கமு றையோ, சட்டமோ அன்றி அத் தன் மையை பின்படுத்தத்தக்க எதுவுமோ பாதிக்காது.

அனைத்துலக நீதிமன்றத்தில் நமீ பியா நாட்டு வழக்கில் நடுவர் அம்முன் அவர்கள் 'சுயநிர்ணய உரிமை இயற் கையின் தன்மையது. அதில் ஒவ்வொரு குறையும் ஏற்படுவதற்கு எத்தகைய சூழ் நிலையிலும் அனுமதிக்க இயலாது". [1971 ICJ 16-89-90 Ammoun J seperate Opinion] என்று தெளிவுபடுத்தியுள்ளார்.

பெரும்பான்மையான அனைத்து லக இத்துறை சார்ந்த வல்லுனர்கள் சுய நிர்ணய உரிமையானது மனித உரிமை ஒப்பந்தங்களிலும், அனைத் துலக அமைதி மற்றும் நாடுகளிடையே நட்புணர்வு போன்றவற்றில் மிகச் சிறப் பான இடத்தைப் பெறுவதால் அது இன்றியமையாத தன்மையுடையதாகி றது எனக்கருத்துக் கொண்டுள்ளனர்.

★★★

ஆங்கில வல்லாதிக்கத்திற்கு முன்பே வேறுபட்ட மொழி, மதம், நாடு, பண் பாட்டைக் கொண்ட வெவ்வேறு இன மக்கள் வாழ்ந்தாலும் விடுதலைக்குப் பின் புதிய அரசு தொல்குடி மக்களின் அரசாகவே கருதப்பட்டது. சிங்களப் பெரும்பான்மை அரசு—தமிழ் மக்க ளின் மேல் ஆதிக்கம் கொள்ளக்கூடிய வேற்றுநாட்டு அல்லது வல்லாதிக்க அரசாக அனைத்து தரப்பினராலும் கருதப்படவில்லை. மாறாக தமிழிரின் போராட்டம் விடுதலைப் போராக சிங்கள இன அரசுக்கு எதிரான போரா கக் கருதப்படாமல் — குடிமக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு எதிரான உள்நாட்டுக் குழப்பமாகவே சிலரால் கருதப்பட்டது.

அவ்வகையில் பார்த்தால் போர் வெற்றியின் காரணியத்தாலோ அல்லது அரசியல் பேச்சுவார்த்தைகளினாலோ தமிழர் பகுதி முழு அரசுரிமை பெறு வாரெனில் அதன் பின்னர் அவர்கள் தங்களுடைய சமூக பொருளியல் பண் பாட்டு முன்னோற்றங்களைத் தன் விருப்பின்படி தீர்மானித்து தன் முடி வுரிமையின் அடிப்படை நிலையைச் செயல்படுத்த இயலும்.

தமிழர்களின் மனித உரிமைகள் தொடர்ந்து மீறப்படுவதை அனைத்து லக மக்கள் குழுமம் ஒப்புக்கொண்டுள் ளது. 1983—இலிருந்து தமிழரின் நிலையை விரிவான சாட்சியங்களின் மூலமாக வும் தீர்மானங்கள் வாயிலாகவும் ஐக் கிய நாடுகளின் சிறுபான்மையினர் பாதுகாப்பு வேறுபாடு தவிர்ப்பு, மனித உரிமையின் பொறுப்பாணைக் குழுக் கள் தெளிவுபடுத்தியுள்ளன.

மனிதத் தன்மை சட்ட விண்ணப் பத்தை அனைத்துலக மக்கள் குழுமம் ஒப்புக் கொண்டுள்ளது.

இயல்பாக மனித உரிமை மீறல்கள் நாட்டில் ஒரு மக்கள் குழுவின் மீது தொடர்ந்து நடந்தாலும் தன்முடிவு ரிமைக் கொள்கையை செயல்படுத்த இயலாததாகின்றது.

**சிறிலங்கா அரசின் இணக்கமற்ற தன்மை**

தமிழரின் உரிமைகளை மதித்து இணங்கிப் போக சிறீலங்கா அரசு மறுத்ததன் விளைவால் நேரடியான ஆயுதப் போர் தலையெடுத்தது. பிற அனைத்து முயற்சிகள் யாவும் இணக் கமான போக்கிற்கு வழி வகுக்காததால் தமிழர் வேறு வழியின்றி ஆயுதப் போரில் ஈடுபட வேண்டியதாயிற்று.

அனைத்துலக மக்கள் குழு ஒடுக்கப் பட்ட மக்கள் தொடர்ந்து நசுக்கப் படுவதையும் அமைதிவழியில் எதிர்ப்பை ஆண்டாண்டாக காட்டுவதையும், அத னால் துன்பத்தில் உழலுவதையும் தேவை என்று கருதவில்லை. ஒடுக்கப் படும் மக்கள் திருப்பித்தாக்கும் காலம் வரும் என்பதை அவர்கள் அறிந்து எதிர்பார்த்தே வந்தனர். எதிர்பார்த்த படியே நிகழ்ந்த போது தமிழர்களுக்கு இதைத்தவிர வேறு மாற்றுவழி இல்லை என்பதையும் அவர்கள் உணர்ந்தே இருந்தனர். ஆயுதப் போராட்டம் என் பது தன்முடிவுரிமையை அடைவதற்கு ஒரு வழியே என்பதையும் ஒப்புக் கொண்டனர். 1975—ல் அனைத்துலக நீதிமன்ற நடுவர் அம்முன் அவர்கள் தன்முடிவுரிமையை அடைவதற்கு நடத் தப்பெறும் ஆயுதப்போராட்டத்தின் நேர்மையை ஒப்புக் கொண்டுள்ளனர். 1975 I.C.I 12304 (AMMON J.Seperate opinion)

அனைத்துலக சட்டத்துறை வல்லு னர் இயான் பிரவுன்லி அவர்கள், தன்முடிவுரிமையின் தவிர்க்க இயலா தன்மைகளில் அவ்வுரிமையைப் பாது காக்க ஆயுதமேந்தும் போராளிகளின் நிலையை வரவேற்றுள்ளார். (Be....... Principales of public Internatienal Law- 3rd edition 1977)

**இந்தியப் படைகளின் தலையீடு**

இந்தியப் படைகளின் தலையீட்டி னால் சிறீலங்காவின் உள்நாட்டுப் போர் அனைத்துலகக் கவனத்திற்கு இலக்காகியது. தமிழீழ விடுதலைப் புலி களுக்கும் இந்தியப் படைக்குமிடையே நடைபெறும் போர் அனைத்துலக ஆயு தப்போரின் சட்டவரம்பிற்குள் வருகின் றது. இந்திய ஒரு வேறு நாடு. அதன் தலையீடு வெளியார் தலையீடாகக் கருதி தமிழரின் தன்முடிவுரிமையை வலியுறுத்த இயலுகிறது.

கொழும்பு அரசு தானே இந்தியத் தலையீட்டை வரவேற்பதாகக் கூறி தன்முடிவுரிமையயின் அடிப்படைக் கொள்கையை ஒதுக்க முயலகிறது. இருப் பினும் அனைத்துலக மக்கள் குழும் இந்த விளக்கத்தை ஏற்கவில்லை. இதே போன்றதொரு நிலை 1980—ல் ஆப் கானிய அரசு தனக்கெதிரான புரட்சிப் படைகளை முறியடிக்க தன்நாட்டிற் குள் சோவியத் படைகளை வரவேற்ற தற்கொப்பாகும்.

இந்த நிகழ்ச்சியை ஐக்கிய நாடுகள் "தன்முடிவுரிமை" என்ற நிரலில் சேர்த்து ஆய்வு செய்தது. எண்ணிலடங்கா தீர் மானங்களின் வழி வேற்று நாட்டுப் படைகளின் தலையீட்டால் ஆப்கானிய மக்கள் தன் முடிவுரிமையை இழந்துள்ள னர் என அறிவித்தது.

**முடிவுரை**

தன் முடிவுரிமைப்படி தமிழ்மக்கள் தங்களது தன்முடிவுரிமையை எநத அளவிற்குச் செயல்படுத்த முன்வருகின் றார்கள் என்பதை முடிவு செய்யவேண் டும்.

சிலர் முழுமையான விடுதலை பெற்ற தனிநாடு கோருகின்றனர். சிலர் போதி யளவு மாநில தன்னாட்சி தமிழரின் முன்னேற்றத்திற்கு வேண்டியளவு இருப் பின் போதுமென்கின்றனர்.

சிலர் ஐக்கிய அமெரிக்க குடியரசில் இணைவுற்ற ஒரு மாநில ஆட்சியுரிமை அளவும் மற்றும் சிலர் கனடா நாட்டு மாநில ஆட்சியுரிமை அளவும் போது மென்கின்றனர்.

இறுதியில் தன் தீர்வுரிமை எவ்வாறு அமைவதாக இருப்பினும் அது போர் முனையில் பெற்ற வெற்றியினாலோ, அல்லது உடன்படிக்கையின்படியோ அல்லது இரண்டினாலும் அமைவதாக இருப்பினும்—தமிழ் மக்களின் கோரிக் கைகள் முழுமை பெற்றாலன்றி சிறீ லங்காவின் பூசல்களுக்கும் பிணக்குக ளுக்கும் எவ்வித முடிவும் ஏற்படாது. தமிழ் மக்களின் மனித உரிமைப் போராட்டத்திலும் விடிவு காணப்பட முடியாது. ★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்கள வான்படைக்கு இது இலையுதிர் காலம்

20 – வருடப் போராட்ட வரலாற்றில் முதற்தடவையாக, சிங்களப்படை பெரும் நெருக்கடி ஒன்றிற்குள் சிக்குண்டுள்ளது. மூன்றாம் ஈழப் போர் ஆரம்பமாகி, கடந்த 24 மாத காலத்தில் வான்படை தனது 16 வான்கலங்களை அடுத்தடுத்து இழந்துள்ளது. சுட்டு வீழ்த்தப்பட்டவை – காணாமற்போனவை தொழில் நுட்பக் கோளாறுகளால் வீழ்ந்தவை – என்று பல வகை மாதிரிகளுக்குள் அடங்கப்பட்டாலும், சிறீலங்காவைப் போன்ற சிறிய நாட்டின் விமானப்படைக்கு இது, பேரிழப்பு என்பதில் ஐயமில்லை.

குடாநாட்டைச் சிங்கள இராணுவம் கைப்பற்றிய பின்னர் அதற்கான இராணுவ விநியோகங்களை மேற்கொள்ளும் முக்கிய பணி விமானப்படையின் தலையில் சுமத்தப்பட்டிருந்தது. இதுவரை நாளும், போரில், வரையறுக்கப்பட்ட பாத்திரத்தை வகித்து வந்த வான்படை இப்போது, குடாநாட்டிற்கான கடல்வழி விநியோகத்தை மட்டுப்படுத்தப்பட்ட வகையிலும், மெதுவான வேகத்திலும் நடாத்தக்கூடிய நிலையிலேயே சிங்களக் கடற்படை உள்ளது. எனவே, வேகமான முறையில், நாள்தோறும் செய்யவேண்டிய இராணுவப் போக்குவரத்துக்கு தரைவழிப்பாதை ஒன்று இல்லாததால், வான்பாதையில் முழுமையாகத் தங்கியிருக்க வேண்டிய கட்டாயம் சிங்களப் படைக்கு எழுந்துள்ளது.

பலாலிக்கும் – கொழும்புக்குமான இருவழிப்பயணமாக, நாளொன்றுக்கு, இரண்டாயிரம் படையினரையும் – 700 அந்தர் எடையுடைய அத்தியாவசியப் பொருட்களையும், விமானங்கள், ஏற்றி இறக்குவதாக வான்படைத்தளபதி பத்திரிகையாளர்களிடம் கூறியுள்ளார். 'இப்போது அந்த வான் போக்குவரத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது' என முன்னாள் விமானப் படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

வான்படை இழந்த 16 விமானங்களின் மொத்தப் பணப்பெறுமதி சுமார் 350 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. புதிதாக இவற்றைக் கொள்வனவு செய்து வான்கல இழப்புகளை ஈடுசெய்யவேண்டுமாயின் 350 கோடி ரூபாய்களைக் கொடுத்து திறைசேரி உதவ வேண்டும். ஆனால் 'மேலதிக நிதியை ஒதுக்கத்தேவையான பணம் திறைசேரியில் இல்லை' என திறைசேரியின் பொருளாளர் பத்திரிகைகளுக்குத் தெரிவித்துள்ளார். இவ்வாண்டிற்கான பாதுகாப்புச் செலவீனமாக, ஏற்கனவே சுமார் ஐயாயிரம் கோடி ரூபாய்களை அரசு ஒதிக்கியுள்ளது. இராணுவ உபகரண இழப்புகளை ஈடுசெய்யவன மேலும் பல நூறு கோடி ரூபாய்களை ஒதுக்கவேண்டிய நிற்பந்தம் அரசுக்கு எழுந்துள்ளது. உபகரண இழப்புக்களை





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விரைவில் ஈடு செய்ய அரசாங்கம் முயலும் என்பது வெளிப்படை. ஆனால் அனுபவம் மிகுந்த விமானிகளின் இழப்பை மற்றும் தொடர்ச்சியான இழப்புகளால் வான்படையினர் மத்தியில் எழுந்துள்ள போர் உறுதிச் சீர்குலைவை இலகுவில் ஈடுசெய்யமுடியாது. 350 கோடி பெறுமானமுள்ள 16 வான் கலங்களுடன் சேர்த்து – விமானிகள், தொழில்நுட்பவியலாளர்கள் உட்பட 440 படையினர் அழிந்துள்ளனர்.

சிங்கள அரசின் முப்படைகளில் ஒன்று இன்றைய நிலையில், முடமாகிப் போயுள்ளதைச் சுட்டிக்காட்டி சிங்கள தேசத்துப் பத்திரிகைகள் படைத்தலைமையைக் கண்டிக்கின்றன. முதலாம் ஈழப் போர் காலத்திலும் – இரண்டாம் ஈழப்போர் காலத்திலும் சிங்கள வான் படையின் எட்டு வான்கலங்களை புலிகள், அழித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதேவேளை, முன்னர், சீனன்குடா வான்படைத் தளத்தில் நடந்த விபத்து உட்பட பல்வேறு எதிர்பாராத சம்பவங்களால் 7 இற்கும் மேற்பட்ட வான்கலங்கள் அழிந்திருந்ததும் சுட்டிக்காட்டத்தக்கது. இந்தவகையில் முன்னரும், சிங்கள வான்படை சுமார் 15 வான்கலங்களை இழந்திருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போதைய நிலையில், தரைப்படைக்கு உதவியாக தரைத்தாக்குதல்களில் ஈடுபடவோ, அல்லது விநியோகத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான பறப்புகளைச் செய்யவோ! சிரமமான நிலையில் சிங்கள வான்படை உள்ளது. என்று 'எயபோஸ் மந்திலி' என்ற பிரித்தானிய இராணுவ ஏடு செய்தி வெளியிட்டுள்ளது.

'தரைத்தாக்குதல்களில் ஈடுபடக் கூடிய தகைமையுடன் ஒரே ஒரு புக்காரா மட்டும் சேவையில் உள்ளது.'

விநியோகத் தேவைகளைப் பொறுத்தவரை நான்கு அன்ரனோவ் விமானங்கள் உண்டு. வான்படையிடமுள்ள மொத்தம் ஒன்பது வை – 12 விமானங்களில் 6 மட்டும் சேவையில் உள்ளது. அதேபோல, எம்ஐ: 17 வகை உலங்கு வானூர்திகள் பதினொன்றை வான் படை கொண்டுள்ள போதிலும் அதில் மூன்று மட்டுமே பறப்புக்கு உகந்ததாக இருக்கின்றன. உதிரிப்பாகப் பற்றாக் குறைகளினால், தொழில் நுட்பக் கோளாறுகளால், பாவனைக்காலம் முடிவடைந்தால்..... என்று பல்வேறு காரணிகளால், இருக்கின்ற வான்கலன்களைப் பயன்படுத்த முடியாது சிறீலங்கா வான்படை திண்டாடுகின்றது என்று அந்த இராணுவ ஏடு தெரிவித்துள்ளது.

'போர்க்களத்தில் உயிருக்கு அஞ்சுவதைவிட விமானப்பறப்பின் போதுதான் உயிரச்சம் ஏற்படுகின்றது.' என்று தரைப்படைச் சிப்பாய் ஒருவர் தன்னிடம் கூறியதாக முன்னாள் விமானப்படைத் தளபதி தனது இராணுவக் கட்டுரை ஒன்றில் எழுதியுள்ளார்.

அடுத்தடுத்தும், அதேவேளை, புதிரான முறையிலும் சிறீலங்காவின் வான் கலன்கள் அழிந்துபடுவதால் அரசபடையினர் மத்தியில் வான்படை தொடர்பாக எழுந்துள்ள அவநம்பிக்கையை முன்னாள் விமானப்படைத் தளபதியின் அனுபவம் அழகாகச் சுட்டிக் காட்டுகின்றது.

குடாநாட்டுப் படைக்கான இராணுவ விநியோகங்களை சுலபமாகவும் – செலவுக்குறைவாகவும் செய்வதற்கு ஒரு தரைப்பாதை அவசியம் என்பது படைத்தளபதிகள் வலியுறுத்தும் ஒரு விடயம். கடல்பாதை மூலம் குடாநாட்டிற்கான இராணுவத் தேவைகளை ஈடுசெய்யமுடியாதிருந்த சூழலில்தான் வான்பாதை மூலம் விநியோகங்களை வேகப்படுத்தி விநியோகப் பிரச்சினையைச் சமாளிக்க படைத்தலைமை முயன்றிருந்தது. ஆனால் வான்கல இழப்புக்களைத் தொடர்ந்து வான்போக்குவரத்து இடைநிறுத்திவைக்கப்பட்டிருக்கின்றது. அதேவேளை – அன்று கடற்படைமீது புலிகள் நடாத்திய ஒரு திகைப்பூட்டும் தாக்குதல் மூலம் கடல்வழி விநியோகத்தை கடற்புலிகள் மேலும் சிரமமாக்கியுள்ளனர்.

கடற்புலிகளின் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக கரையிலிருந்து 20 கடல்மைல்களுக்கும் அப்பால் பயணம் செய்த கப்பற் தொகுதி மீதே அன்றைய தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து கப்பற் தொகுதி தனது பயணத்தைத் தொடரமுடியாது திருகோணமலை திரும்பியதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்திருந்தன. இந்தக் கடற் சண்டைக்கு அரச தரப்பில் மிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருந்தது. 108 புலிகள் கொல்லப்பட்டனர் என சிங்களக் கடற்படைத் தளபதி அறிக்கை வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த தகவல் உண்மையல்ல. நான்கு கடற்கரும்புலிகள் உட்பட ஐந்து புலி வீரர்கள் அந்தக் கடற்சமரில் வீரச்சாவடைந்திருந்தனர். ஆனால் சிங்களக் கடற்படைத்தளபதியின் கணிப்பு கடற்சமரின் இராணுவ பரிமாணத்தை எடுத்துக் காட்டுகின்றது. அவர் கணக்கிட்டபடி புலிகள் தரப்பில் இழப்பேற்படாதது – கடற்சண்டை புலிகளுக்கு சாதகமாகவே முடிந்துள்ளது என்பதை நிரூபிக்கப் போதுமானது. அத்துடன் கடல் போக்குவரத்துக்குக் கொடுக்கப்பட்ட கப்பல் பாதுகாப்பை அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் அந்தக் கடற்சமர் கொடுத்துவிட்டது.

வான்படை விநியோகம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கின்ற சூழலில், கடல் வழி விநியோகம் மேலும் சிரமத்தைச் சந்தித்துள்ள நிலையில் குடாநாட்டுப் படைக்கான இராணுவ விநியோகம் மேலும் கடினமடைந்துள்ளது என்பதே இன்றைய இராணுவ யதார்த்தமாகும்.

★★

## சாபங்களின் பலிதம்



எரிமலையின் உச்சியை
ஏறிக் கடந்ததென
மனது பூரித் தெழுகிறது

வானத்தில் என்ன அதிசயம் நிகழ்ந்தது?
என்றும்
இரை தேடியபடி
காற்றை உதைத்து
அலைந்து திரிந்த கொடிய பறவைகள்
வாய் பிளந்து, உடலெரிந்து போனதென்னே!

சாபங்கள் பலித்துவிட்டன;
ஒன்றன் பின் ஒன்றாய்
எரிந்து வீழட்டும் அவை.

இனி,
பறவைகளின் எச்சமில்லை
என்போம் அச்சமின்றி

– சத்துருக்கன்
'வானம் எம் வசம்'



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தட்டப்படும் வவுனியா நகரின் கதவுகள்

**1987** ஜூன் 9–ம் திகதி சிறீலங்கா இராணுவம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தமது பாரிய இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்திக் கொண்டனர். ஏனெனில் இந்தியா அதன் போது தலையிட்டது. சரியாகப் 10 வருடங்களின் பின்னர் அதே தினத்தில் விடுதலைப்புலிகள் தமது சுய பலத்தினால் தற்காலிகமாகவே எனினும் சிறீலங்கா அரசாங்கத்தின் மற்றுமொரு இராணுவ நடவடிக்கையை இடைநிறுத்தியுள்ளனர். இவ் வருடம் ஏராளமான 10 வருட நினைவு விடயங்கள் விடுதலைப் புலிகளால் அனுஷ்டிக்கப்படவுள்ளன. இலங்கை இந்திய ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட ஜூலை 29–ஐ இவ் வருடம் புலிகள் கறுப்பு தினமாகக் கொண்டாடத் தீர்மானித்துள்ளனர். விடுதலைப் புலிகளின் அரசியல் பீடத் தலைவர் திலீபன் அவர்கள் 1987 செப்டம்பர் 28–ம் திகதி இந்திய இராணுவத்திற்கு எதிரான உண்ணாவிரதப் போராட்டத்தின்போது மரணமடைந்திருந்தார். மேலும், 1987 ஒக்டோபர் 5–ம் திகதி குமரப்பா புலேந்திரன் உட்பட 12 புலிகளின் ஞாபகார்த்த தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இப்படியான வருடத்தில் புலிகள் குறைந்தளவு எதிர்ப்பை இராணுவத்திற்குக் காட்டுவார்கள் என எதிர்பார்க்க முடியாது. குறிப்பாக முக்கியத்துவம் வாய்ந்த வவுனியா, கிளிநொச்சி நெடுஞ்சாலையை திறப்பதற்கான சிறீலங்கா இராணுவத்தின் 'ஜெயசுக்குறு' நடவடிக்கையின் போது இதனை எதிர்பார்க்கமுடியாது.

இதே பாதையை தமது கைகளுக்குள் வைத்திருப்பதே இந்திய அமைதிப் படைக்கு மிகக் கடுமையான காரியமாக இருந்தது. இதன்போது ஏராளமான துருப்பினரை இந்திய அமைதிப்படை இழந்திருந்தது. இன்று விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியாக வளர்ச்சியடைந்துள்ளனர். அவர்களது பலம் அண்மைக்காலமாக குறைந்து வருவதாக நம்பப்படுகின்ற பொழுதிலும் 1987–லும் பார்க்க 5 மடங்காவது அவர்கள் பலம்பெற்றவர்கள். 'ஜெயசுக்குறு' நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் தமது படைப்பலத்தை பாதுகாப்பதற்காக பின்வாங்குவார்கள் என்றே சகலரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவை தப்பானவை. ஏனெனில் இறப்பையும், தியாகத்தையும் ஒரு புனிதமான காரியமாக மதிக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பு சில நூறு வீரர்கள் போர்க்களத்தில் மடிவதை ஒரு உள்ளார்த்தமான உந்துதலாகவே எடுத்துக்கொள்ளும்; குறிப்பாக அவ் இறப்புகள் ஏதாவது ஒன்றைச் சாதிப்பதற்காகவெனில்.

> **இதே பாதையை தமது கைகளுக்குள் வைத்திருப்பதே இந்திய அமைதிப் படைக்கு மிகக் கடுமையான காரியமாக இருந்தது. இதன்போது ஏராளமான துருப்பினரை இந்திய அமைதிப்படை இழந்திருந்தது.**

இவ் நடவடிக்கையின் ஆரம்பத்தில் புலிகள் இராணுவத்திற்கு கடும் எதிர்ப்பைக் காட்டினர். எதிர்பாராத அளவில் ஏற்படுத்தப்பட்ட கடுமையான இழப்புகளால் இராணுவ நடவடிக்கை சற்று மந்தமாகியது. ஆனால் கடந்தவாரம் புலிகள் தொடுத்த பேரழிவைக் கொண்ட எதிர்த்தாக்குதல் நடவடிக்கையானது புலிகள் எதிர்பார்த்த சிறீலங்கா இராணுவத்தின் திட்டங்களை தற்காலிகமாகவேனும் இடைநிறுத்தும் விடயமாக அமைந்தது. இது இராணுவத்தின் மனோபலத்திற்கு வீழ்ந்த பேரிடியாகும். தற்காலிக இடைநிறுத்தத்தைத் தோற்றுவித்ததுடன் இப் புலிகளின் எதிர்த்தாக்குதல் நடவடிக்கையானது, சிறீலங்கா இராணுவத்தினரால் இலகுவாக எடுத்துக்கொள்ளப்பட்ட விடயமான, யுத்தமானது நிறுவப்பட்ட முன் காவல் அரண்களில் மட்டுமே இடம்பெறும் என்ற கோட்பாட்டைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. புலிகள் முன் காவல் அரண்களைத் தகர்த்து ஊடறுத்து தாண்டிக்குளத்தை தாக்கியதன் மூலம் வவுனியாவின் கதவுகளைத் தட்டியுள்ளனர். இங்கு வாழும் பொதுமக்கள், பலர் ஏலவே இடம்பெயர்ந்த மக்களாயினும், இன்னுமொரு இடப்பெயர்வுக்கு மனோரீதியாக தம்மைத் தயார்படுத்தி வருகின்றனர்.

இராணுவ ஆய்வாளர்களின் கருத்தின் படி சிறீலங்கா இராணுவமானது தீவின் மேற்குக் கரையோரமாகச் செல்லும் மன்னார், பூநகரி, யாழ்ப்பாண வீதியைப் பாதுகாப்பது இலகுவானதாக அமையும். ஏனெனில் புலிகளின் பிரசன்னம் இப்பகுதிகளின் ஒப்பீட்டளவில் குறைவதென்பதோடு கடற்புலிகளின் தளங்கள் சிறிதளவே இப் பகுதியில் காணப்படுகின்றது. அவர்களின் குறிப்பிடத்தக்களவு பலம் இப்பகுதிகளில் கிடையாது.

கடற் புலிகளை வெற்றி கொண்டால் சிறீலங்கா இராணுவமானது ஒருபகுதியில் மாத்திரமே எதிர்ப்பைச் சந்திக்கும். இதைவிட தமிழ் மக்கள் தமிழ்நாட்டுக்கு தப்பி ஓடுவதையும் தடுக்கலாம். தற்போது இடம்பெறும் நடவடிக்கை கடினமாக அமையின் சிறீலங்கா இராணுவமானது இந்த வழியையே கைப்பற்ற முயலும் என நம்பப்படுகிறது. விடுதலைப்புலிகளைப் பொறுத்தவரை எவ்விலை கொடுத்தாயினும் தற்போது இடம்பெறும் நடவடிக்கையை தடுக்கவே முனைவர். வன்னியில் ஒரு பகுதியை விட்டுக் கொடுப்பதானது மறுபகுதியை இழப்பதற்கு சமமானதாகும். எனவே இது எமது இறந்த உடல்கள் மீதுதான் இடம்பெற விடுவோம் என புலிகள் மக்களிடம் கூறி வருகின்றனர்.

மரபுரீதியான ஞானமானது விடுதலைப்புலிகள் பற்றிய ஊகிப்பு விடயத்தில் பிரயோசனமற்றதாகும்.

'இந்தியன் எக்பிரஸ்"
20 ஜூன் 1997



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

*இனத்துவ ஆய்வுகளுக்கான சர்வதேச மையத்தின் பணிப்பாளரான டாக்டர். ராதிகா குமாரசுவாமி "பெண் புலிகளும் பெண் விடுதலைப் பிரச்சனையும்" என்ற தலைப்பில் சிங்களத்தில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் சரிநிகர் ஜனவரி-8 இதழில் வெளிவந்ததைத் தொடர்ந்து மிகப் பெரிய விவாதத்தைத் தூண்டியுள்ளது. பலர் அவ் விவாதத்தில் தொடர்ந்து பங்கேற்று எழுதி வருகின்றனர். ஒரு பெண் போராளியின் பதிலாக வெளிவந்துள்ள இக்கட்டுரை பெண்நிலை வாதத்தை வேறொரு நோக்கிலிருந்து விளக்குகிறது.*

# நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல விடுதலைப் போராளிகள்!

வன்முறையினால் பாதிக்கப்படும் பெண்களைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபடும் மனித உரிமைப் போராளியாகத் தன்னை இனங்காட்டிக் கொள்ளும் ராதிகா அவர்களுக்கு, பால் வேறுபாடின்றி அனைத்துத் தமிழர்களுமே வன்முறைகளினால் பாதிக்கப்படாமல் நிம்மதியாகவும் கௌரவமாகவும் வாழும் பொருட்டு அவர்களுக்கென தனியாக நாடொன்றை உருவாக்கப் போராடிக்கொண்டிருக்கும் விடுதலைப் போராளியான நான் சில விடயங்களைக் கூற விரும்புகிறேன்.

மேசைமுன் இருந்து ஆய்வுகளைச் செய்வதன் மூலமோ அறிக்கைகளை விடுவதன் மூலமோ எல்லாப் பிரச்சனைகளையும் யாராலும் தீர்த்து விட முடியாது. ஒரு பெண் வன்முறையால் பாதிக்கப்பட்ட பின் 'அவள் பாதிக்கப்பட்டுவிட்டாள்' என்று அறிக்கை விடுவது அவளுக்கு எந்தத் தீர்வையும் தரப்போவதில்லை. வன்முறை பிரயோகிக்கப்பட முன் அதைத் தடுக்கக் கூடிய அல்லது முறியடிக்கக்கூடிய வகையிலான நடவடிக்கைகளில் நேரடியாக இறங்குவதே பெண்ணின் உரிமைகளை அல்லது மனித உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய ஒரே வழி. இதைத்தான் நாங்கள் செய்கிறோம். நாங்கள் வன்முறையாளர்கள் அல்ல. உரிமைக்காக உழைக்கும் போராளிகள்.

அதிகாரத்தையும் சமத்துவத்தையும் பெற வேண்டும் என்ற நோக்கில் நாம் போராட்டத்துடன் இணையவில்லை. சிறீலங்காப் பேரினவாத வன்முறையாளர்கள் எங்கள் பகுதிகளில் செய்த மனித உரிமை மீறல் சம்பவங்களே எம்மைப் போராடத் தூண்டின. நாம் நிம்மதியான கௌரவமான





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



வாழ்வை அமைப்பதற்காகவே போராடுகின்றோம். பெண் விடுதலை பெறாத மண்விடுதலையும், மண் விடுதலை பெறாமல் பெண் விடுதலையும் சாத்தியமில்லை என்ற உண்மையை உணர்ந்து கொண்டதால் நாம் பெண் விடுதலைக்காகவும் போராடுகின்றோம். போராட்டத்தில் இணைந்தால் தான் நாம் பெண் விடுதலை அடையலாம் என்ற எண்ணத்துடன் நாம் போராடப் புறப்படவில்லை.

எமது இராணுவ ரீதியிலான செயற்பாடுகள் சாதாரண பெண்கள் மத்தியில் பல கருத்தியல் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன என்பதை யாராலுமே மறுக்க முடியாது. பெண் உறுப்பினர்களின் கடல்சார் நடவடிக்கைகள் கரையோர மக்கள் சமுதாயத்திலே கருத்து மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதை இதற்கு ஒரு உதாரணமாகச் சொல்லலாம். பெண்கள் கடலுக்குப் போகக் கூடாது என்ற பரவலான மூடநம்பிக்கையை இன்றைய இளம் பெண்கள் துணிவாக மீறுகின்றனர்.

தாக்குதலில் ஈடுபடும் பெண்களின் உடல்கள் மோசமான நிலைக்கு ஆளாகிறது என்று குறிப்பிடுகின்றீர்கள். இங்கு அவர் 'பெண்' என்பதல்ல முக்கியம். அவர் ஒரு போராளி. தனது சாவு எப்படி அமைய வேண்டும் என்று தீர்மானிக்கும் உரிமையை அவர் தனதாக்கிக் கொண்டுள்ளார். தன்னைப் பற்றிய சிந்தனைகளைக் கடந்து தாய் நாட்டின் விடுதலைக்காக மனப்பூர்வமாகச் செயற்படும் ஒரு போராளியின் உடல் நிலைபற்றிய ஆய்வை விட சமூகத்தில் இருக்கும் பெண்களில் பெரும்பாலானோர் தமது கணவனின் மோசமான பாலியல் உறவுகளினாலும், வன்முறைகளாலும் உடல் உள ரீதியாகத் துன்பப்படுவதை ஆய்வு செய்தால் , அது அதிக பயன்தரும் ஒரு நடவடிக்கையாக அமையும்.

நீங்கள் குறிப்பிடுவது போல் இலங்கை – இந்திய ஒப்பந்தக் காலத்தில் ஏற்பட்ட ஆள்வளத் தேவைகளுக்காகப் பெண்கள் போராளிகளாக உள்வாங்கப்படவில்லை. 1984–லேயே 'சுதந்திரப் பறவைகள்' என்ற அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்த நூற்றுக் கணக்கான பெண்கள் அரசியல் வேலைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டனர். 1985–ல் தனது பயிற்சியை ஆரம்பித்த மகளிர் படையணி 1986ல் இருந்து சிறிய, பெரிய இராணுவ நிலைகள் மீதான தனது தாக்குதலைத் தொடர்ந்தது. 1987ல் இந்திய இராணுவம் கால் வைத்த போது, சிறு சண்டைகளாகவும், பெருந் தாக்குதல்களாகவும் பல களங்களைக் கண்டு போரனுபவம் மிக்க இராணுவ அணியாக அது வளர்ந்து விட்டிருந்தது. முன்னர் எப்போதும் இல்லாத வகையில் இந்திய இராணுவக் காலத்தில்

> பெண் விடுதலை பெறாத மண்விடுதலையும், மண் விடுதலை பெறாமல் பெண் விடுதலையும் சாத்தியமில்லை என்ற உண்மையை உணர்ந்து கொண்டதால் நாம் பெண் விடுதலைக்காகவும் போராடுகின்றோம். போராட்டத்தில் இணைந்தால் தான் நாம் பெண் விடுதலை அடையலாம் என்ற எண்ணத்துடன் நாம் போராடப் புறப்படவில்லை.

ஏராளமான பெண்கள் போராட்டத்துடன் இணைந்து கொண்டார்கள். அதற்குக் காரணம் மக்களின் சாதாரண வாழ் நிலையை அச்சுறுத்தும் வகையிலான இந்திய இராணுவத்தின் நடவடிக்கைகளே. விடுதலைப் போரின் விளைவாக தமிழ்ச் சமூகத்தில் ஏற்பட்ட இயல்பான மாற்றங்களைக் குறிப்பிடும் போது 'புனிதம்' என்ற பேச்சு முகாம்களிலோ, வீடுகளிலோ எடுபடுவதில்லை என்று குறிப்பிடுகின்றீர்கள். தூய்மையான மனவுணர்வுகளை, தன்னலம் கருதாத ஈகத்தை நாம் புனிதமாகக் கருதுகிறோம். நீங்கள் புனிதம் என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது புரியவில்லை.

எமது அமைப்பின் கட்டமைப்புகளுள் பெண்கள் இராணுவத்தலைமைகளைப் பெற்றிருப்பதும் நீதியை நிலைநாட்டுபவர்களாகச் செயற்படுவதும் அவர்களின் திறமையால் கிடைத்த உணர்வைத்தான் வெளிப்படுத்துகின்றது. இவையெல்லாம் அவர்கள் 'பெண்கள்' என்ற காரணத்தால் உண்டானவையல்ல.

நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்பட்ட பின்னரும் இந்நிலை தொடருமா என்ற கேள்வி தேவையற்றது. எந்தச் சமூகத்திலுமே எல்லாக் கட்டுப்பாடுகளும் இறுக்கங்களும் நிரந்தரமாக நிலைத்து நிற்பதில்லை என்பது வரலாறு எமக்குக் கற்றுத் தந்த பாடம். இம்மண்ணில் விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருப்பதால் வேகமாக ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் இப்படியொரு போராட்டச் சூழல் இல்லையெனில் சிறிது தாமதமாக ஏற்பட்டிருக்குமே தவிர மாற்றமே இல்லாமல் போயிருக்காது என்பது தான் நடைமுறை உண்மை.

லண்டனில் இருந்து வெளியாகும் தமிழ் ரைம்ஸ் [Tamil Times] இல் வந்த பூப்புனித விழா விளம்பரத்தை வைத்துக் கொண்டு மாற்றங்களெல்லாம் இடைக்கால மாற்றங்களே என்றும், அமைதியான வாழ்நிலை கிடைக்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கும் போது பாரம்பரியச் சடங்குகளே மேலோங்கும் என்ற முடிவுக்கும் வருவது தவறானது என்றே நான் கருதுகின்றேன். வெளிநாடுகளில் வாழும் தமிழர்கள் இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது தமது பாரம்பரியத்தைக் காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கினால் அல்ல. தமது கௌரவத்தை, பொருளாதாரத்தை ஏனையவர்களுக்கு உயர்த்திக் காட்டும் முயற்சியில் ஒன்றுதான் இதுவும் இந்தச் சடங்கிலிருந்த பாரம்பரியமான பல முறைகள் கைவிடப்பட்டுள்ள நிலையில் நிகழ்வைப் பதிவு செய்யும் ஒளிப்படப்பிடிப்பாளர்தான் இப்புனித நீராட்டுவிழாவின் நடைமுறைகளைத் தீர்மானிப்பவராக இன்று உள்ளார். நாளடைவில் இந்த நிகழ்வு தேவையா இல்லையா என்பதைச் சம்பந்தப்பட்ட பெண்ணே தீர்மானிக்கும் நிலை வரும். முற்றாக வேண்டாம் என்று நிராகரிக்கும் நிலைகூட நாளை வரலாம்.

போரில் ஈடுபடாமல் எஞ்சியிருக்கும் பெண்களுக்கே 'சீதாதேவி' நிலைக்குத் திரும்பவும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்கிறீர்கள். அதென்ன சீதாதேவி நிலை? புரியவில்லை. தனது தூய்மையில் ஐயப்படுபவனின் முகத்தில் காறி உமிழாமல், தமிழ்ப் பெண்கள் எல்லோரும் தீக்குளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றீர்களா? வேண்டாமப்பா. அப்படியொரு நிலை எங்கள் பெண்களுக்கு வேண்டாம். அவர்கள் அவர்களாகவே வாழட்டும். யாரோ போல மாறவேண்டாம்.

இலட்சியமும் வழிமுறைகளுமே முக்கியம் என்பதால் ஏற்பட்ட பெண் — ஆண் ஒருமை நிலை ஆண் நோக்கிலேயே உள்ளது. பெண்மையை ஆண்மை முற்றாகத் துடைத்தழித்துச் செல்கின்றது. இதுதானா இயக்கத்தில் பெண்களுக்கான சிறப்புரிமை என்று கேட்கும் உங்களிடம் நான் இரண்டு கேள்விகளைக் கேட்கின்றேன்.

அ. [சாதாரணப் பெண்கள் போல] தழையத் தழையக் கட்டிய சேலையுடன் கால்களில் கொலுசு கிலுங்க, கைவளை ஒலி எழுப்ப, கூந்தலில் சூடிய பூவின் வாசனை ஊரையே இழுக்க, அலங்காரமாக ஒரு பெண்கள் அணி நகர்ந்து எந்நேரமும் விழிப்புடன் இருக்கும் சிறீலங்கா இராணுவத்தின் படைத்தளம் ஒன்றைத் தாக்கப் போனால் எப்படியிருக்கும்?

ஆ. ஆண்களைப் போலப் பெண் போராளிகள் நீண்ட காற்சட்டையையும் மேற்சட்டையையும் அணிந்திருப்பதற்குப் பதிலாக, ஆண் போராளிகள் எல்லோரும் பெண்களைப் போல சேலை அணிந்து, கட்டுக் குடுமி முடிந்து, காதில் கடுக்கனும் அணிந்திருந்தால், உடனே நீங்கள் “ஆகா'' பாலற்ற நிலை [Androgyny] பெண் நோக்கிலே உள்ளது. ஆண்மையைப் பெண்மை முற்றாகத் துடைத்தழித்துச் செல்கின்றது'' என்று ஆனந்தக் கும்மியடித்திருப்பீர்களோ?

இலட்சியப் பெண் மாதிரியை எப்போதும் கன்னியாகவே காட்டுகின்றோம் என்ற கூற்றை நான் முற்றாக மறுக்கின்றேன். தமிழீழ விடுதலை நோக்கிய ஆயுதப் போரில் பெண்கள் இணைந்து கொண்ட சில வருடங்களிலேயே *1990*–ல் போராளிகளுக்கிடையிலான முதல் திருமணம் நடைபெற்றது. காதல் மணம் செய்து கொண்ட அந்த ஆண் போராளி *1991*–ல் வீரச்சாவடைய, பெண் போராளி பெண் குழந்தை ஒன்றுக்குத் தாயானார். இப்போது ஆறு வயதுக் குழந்தையுடன் வாழும் அந்தப் பெண் போராளி கடந்த வருடம் இன்னொரு ஆண் போராளியைக் காதல் மணம் செய்து கொண்டார். இதைவிட ஏராளமான பெண் போராளிகள் குடும்ப வாழ்வில் ஈடுபட்டுள்ளனர். பலருக்குக் குழந்தைகள் கூட உண்டு. போர்க்களங்களில் பங்கேற்பதால் எங்கள் பெண்மையை நாங்கள் கைவிடவில்லை. அது எங்களின் இயல்பு, நாங்கள் எப்போதுமே பெண்கள்தான்.

பாலியலை தளர்வூட்டும் கெட்ட சக்தியாக நாங்கள் நினைக்கவில்லை. அது ஒரு பலமாகவே கருதுகின்றோம்.



ஒரு பெண் போராளியின் திருமண நிகழ்வு எமக்குள் எவ்வாறு கொண்டாடப்படுகின்றதோ, அது போலவே அவர்களின் வீரச்சாவு நிகழ்வுகளும் எம்மால் மரியாதையான முறையில் கொண்டாடப்படுகின்றன. தன் தாய் மண்ணுக்காக உயிரைக் கொடுத்த பெண்களைக் கொண்டாடாமல் விடுவது அவர்களுக்கு நாம் செய்யும் அவமரியாதையல்லவா?

உங்களுக்கு நான் சொல்லும் கடைசி விடயம் இதுதான். பெண்களுக்கும் ஆண்களுக்கும் இடையிலே ஏற்படுகின்ற புரிந்துணர்வுதான் பெண் விடுதலையைப் பெற்றுத்தரும் என்று நாங்கள் நம்புகின்றோம். எங்களுடைய ஆளுமையையும், கௌரவத்தையும், பெரும்பாலான ஆண் போராளிகள் மதிப்பதால் தான் நாம் இன்றும் இயக்கத்தின் கீழ் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றோம். எங்களுக்குப் போர் முகம் மட்டுமல்ல, புன்னகை முகமும் உண்டு. அதை நீங்கள் பார்க்க வேண்டும். எங்களின் உணர்வுகள் மென்மையானவை. அதை நீங்கள் புரிந்து கொள்ளவேண்டும். 'நான்', 'எனது குடும்பம்' என்ற சிறுவட்டத்திற்கு அப்பாற்பட்டு 'எனது மக்கள்', 'எனது நாடு' என்று பரந்துபட்டு அன்பு செலுத்துவது மென்மையான உள்ளங்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். போர் எமது விருப்புக்குரிய ஒன்றல்ல. எமது மக்களின் நிம்மதியான வாழ்வுக்காக ஆயுதம் ஏந்திப் போராடுவதைத் தவிர, வேறெந்த வழியையும் சிறீலங்காப் பேரினவாதிகள் விட்டுவைக்கவில்லை என்பதுதான் வரலாறு எங்களுக்குச் சொல்லித்தந்த பாடம்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மொறவேவா - ஆக்கிரமிக்கப்பட்ட பூமி

**மொறவேவா. தமிழர்களின் சொந்த பூமி. சிங்கள இனவாத அரசின் சிங்களக் குடியேற்றத் திட்டம் என்ற பூதத்தினால் கொள்ளையிடப்பட்ட பூமி. ஆயுதம் தரித்த சிங்களக் குடியேற்றவாசிகள் பொலிஸ் இராணுவப் பாதுகாப்புடன் தமிழர் பூமியை ஆக்கிரமித்து தமிழர்களை விரட்டியடித்து 'உரிமை' நிலைநாட்டிய இடம்.**

**இன்று விடுதலைப் போராளிகளினால் இப்பகுதிக் காவலரண்கள் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டு தீயிடப்பட்டது. சிங்களக் குடியேற்றம் என்ற கோட்பாட்டின் அடிப்படையான பாதுகாப்பு என்ற விடயம் கேள்விக்குறியாக்கப்பட்டதால், சிங்களக் குடியேற்றவாசிகள் தம்மை அரசு பாதுகாக்கமுடியாது என்று உணர்ந்துள்ளனர்.**

**மொறவேவின் இன்றைய நிலைபற்றி கொழும்புப் பத்திரிகையான "Mid Week Mirror" பத்திரிகையில் வெளியான கட்டுரையின் சாராம்சம் இது.**

பல விடயங்கள் இப் போரால் சீரழிந்த கிராமத்தில் கண்டு கொள்ள முடியாமல் போய்விட்டது. இங்கு சூழ்ந்திருக்கும் பச்சை வெளிகள் பல விடயங்களைத் தன்னகத்தில் மறைத்து வைத்திருக்கிறது. அவை புலிகளை, உள்ளரங்க அரசியலை, ஊக்கமிழந்து செல்லும் பொதுமகனை அவனால் பாதுகாக்கப்படும் பதுங்குகுழிகளையும், காப்பரண்களையும் தன்னகத்தே மறைத்துக் கொண்டுள்ளது. அப் பிரதான வீதியெங்கும் மனித சஞ்சாரமற்றுக் காணப்படுகின்றது.

ஒரு சிறிய எண்ணிக்கையிலான சிறுவர்கள் இராணுவத்தின் பாதுகாப்புடன் கல்விக்கூடங்களுக்குச் செல்கின்றனர். தனித்த ஒரு விவசாயி இராணுவத்தினாலோ அல்லது பொலிசாரினாலோ பாதுகாக்கப்படும் பகல் வேளையில் தனது நிலத்தை உழுகின்றார். பொதுமக்களிடம் அதிகளவில் சொத்துக்கள் ஒன்றும் காணப்படவில்லை. ஏனெனில் தாக்குதல்களை எதிர்கொண்டு தப்பி ஓடும்போது சொத்துக்களை கொண்டு ஓடமுடியாத காரணத்தினால் சிறு வீடுகளில் வசிக்கும் மக்கள் தங்க நகைகளை விரும்புகின்றனர். ஏனெனில் அவை தப்பி ஓடும்பொழுது கொண்டு செல்வதற்கு இலகுவானவை.

இவ்வாறு புலிகளின் அடுத்த தாக்குதலுக்கு இலக்காகும்வரை இக்கிராமங்களின் வாழ்க்கை இயங்குகின்றது.

பொலிசாருடைய மனோபலமானது குறைந்து கொண்டே வருகின்றது. அவர்களிடம் முறையிடுவதற்கென ஏராளமான விடயங்கள் உள்ளன. சாதாரண சிகரட்டிலிருந்து ஆயுதங்கள் வரை, கட்சி அரசில் இருந்து பழிவாங்கும் இடமாற்றங்கள் வரை ஏராளமான விடயங்கள் இவர்களிடம் உண்டு.

புலிகளினால் இம்மாத ஆரம்பத்தில் நடாத்தப்பட்ட பொலிஸ் நிலையம் மீதான மோசமான தாக்குதலுக்குப் பின் அப்பகுதி மக்கள் பொலிசார் தம்மைக் கைவிட்டுவிட்டதாகக் கருதுகின்றனர். பொலிசார் எந்தவித எதிர்ப்பும் இன்றி புலிகளின் தாக்குதலைக் கண்டு தப்பி ஓடிவிட்டதாகக் கருதுகின்றனர். ஏறத்தாள 150 பொலிசார் இப் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போதும் அவர்களில் பெரும்பான்மையானோர் தப்பி ஓடிவிட்டார்கள் என இப்பகுதி பொதுமகன் ஒருவர் குற்றம் சாட்டியுள்ளார்.

காலம் காலமாக இப்பகுதி மக்கள் பொலிஸ் நிலையம் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். சிறு திரளாக அமைந்திருந்த இப்பகுதி மக்களின் வீடுகள் பொலிஸ் நிலையத்தின் நிழலிலேயே தங்கியிருந்தன. தந்தைமார், மகன்மார், கணவன்மார் எனப் பல தரப்பட்டோரும் ஆயுதம் தரித்து இரவுக் காவலில் ஈடுபட்டிருந்தனர். ஆனால், புலிகளின் நடவடிக்கைக்குப் பின் பல பொலிசார் தமது ஆயுதங்களைக் கைவிட்டுவிட்டு வெளியேறிவிட்டனர்.

சோர்வு அவர்களது பலமான எதிரியினால் மட்டும் ஏற்படவில்லை. மொறவேவாவிலுள்ள இராணுவச் சிப்பாய் கூட புலிகளின் ஆயுதப் பலத்திற்கு முன் பொலிசாரால் ஈடுகொடுக்கமுடியாது என ஒத்துக் கொள்கின்றனர். புலிகளின் எறிகணைத் தாக்குதல் பொலிஸ் நிலையத்தை செயலற்றதாக்கிவிட்டது. புலிகளின் எல்.எம்.ஜி. தாக்குதல் பொலிசாரின் ஆயுத பலத்தை கீழ்ப்படிய வைத்துவிட்டது.

இச் சூழ்நிலை மோசமடைவதற்கு இப் பொலிஸ் நிலையத்தில் கடமை புரியும் பொலிசார் தண்டனை இடமாற்றத்தில் இப்பகுதிக்கு வந்தனர் என்பதும் ஒரு காரணமாகும். இப் பகுதி சிறீலங்காவின் 'சைபீரியா' என வர்ணிக்கின்றார் ஒரு பொலிஸ் அதிகாரி.

பொலிஸ் பயிற்சிக் கல்லூரி தற்போது பழைய விமான நிலையத் தளக் கட்டிடத்தில் அமைந்துள்ளது. இக் கல்லூரியிலுள்ள பயிலுனர்கள் அனைவருமே 50 வயதுக்கு மேற்பட்டவர்களாகக் காணப்படுகிறார்கள். அவர்கள் அனைவருமே உயிராபத்து மத்தியிலும் பதவி உயர்வுக்காக அங்கு வந்தவர்கள். ஆனால் உண்மையில் புலிகளின் ஊடுருவல்களில் இருந்து தப்புவதற்கான ஒரு தடை அரணாகவே இக் கல்லூரி அவ்விடத்தில் நிறுவப்பட்டுள்ளது.

ஆனால் புலிகள் வித்தியாசமானவர்கள். அவர்களுக்கு அப் பகுதி முழுவதுமே பரீட்சயமானது. திரியோயா காட்டுப் பகுதியில் நடமாடும் விடுதலைப் புலிகள் மொறவேவாவை தமது பிறப்பிடமாகக் கொண்டவர்கள் என பேசிக்கொள்ளப்படுகின்றது. வீதியின் இருபுறங்களிலும் காணப்படும் பாழடைந்த கட்டிடங்கள் இங்கு தமிழ்ச் சமூகம் முன்பு வாழ்ந்ததற்கான அடையாளமாகக் காணப்படுகின்றது. முன்பு இங்கு ஏராளமான தமிழர்கள் வாழ்ந்தார்கள். படிப்படியாக அவர்கள் முழுவதுமாக அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். சில தமிழர் கொல்லப்பட்டனர் பலர் விரட்டியடிக்கப்பட்டனர். மோசமான பயங்கரவாதம் இந்திய அமைதிப்படை இங்கு வந்தபோது தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பபட்டிருந்தது. இப் பகுதிகளில் இந்திய இராணுவம் தேடிக் கொல்லல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

மொறவேவா பொலிஸ் நிலையத் தாக்குதலில் பங்குபற்றிய புலிகள் தமது காட்டு குகைகளுக்குள் செல்வதற்கு முன்னர் இப்பகுதி பாழடைந்த தமிழர் குடியிருப்புக்களில் வாழ்ந்தவர்களே (சொந்தமானவர்கள்) ஆவர்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யசீர் அரபாத்தும் சிங்களப் பேரினவாதமும்

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்தை ஒடுக்கும் நாசகார நோக்குடன் சிங்கள அரசு நடாத்தும் இந்தப் போருக்கான சர்வதேச அபிப்பிராயம் தனக்குச் சார்பாக உள்ளது என்று காட்ட, சிங்கள அரசு பெருமுயற்சி செய்கின்றது.

உலகத் தலைவர்கள் அல்லது சர்வதேச இராஜதந்திரிகள் இலங்கையின் இனப் போர் தொடர்பாக– பட்டும் படாமலும் ஒரு அபிப்பிராயத்தை வெளிப்படுத்தினால், அதை புலிகளுக்கு எதிரான பூடகமான கண்டனமாக திரிபுபடுத்திக் காட்டுவது சிங்களப் பேரினவாதிகள் கடைப்பிடிக்கும் ஒரு பிரச்சார யுக்தியாகும்.

அண்மையில், கொழும்பு வந்து திரும்பிய பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவரும் பலஸ்தீனத்தின் ஜனாதிபதியுமாகிய யசீர் அரபாத் அவர்கள், புலிகள் இயக்கம் தொடர்பாகவும், இலங்கைத் தீவின் இனச்சிக்கலுக்கான தீர்வு தொடர்பாகவும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்திருந்தார். அதில் ஒரு விடயத்தை, சிங்களப் பேரினவாதம் தனக்குச் சார்பான வகையில் அர்த்தப்படுத்தி புலி எதிர்ப்புப் பிரச்சாரம் செய்துள்ளது.

'விடுதலைப் போராட்டத்தை நடாத்துகின்ற இயக்கங்கள் என்ற வகையில் பலஸ்தீன விடுதலை இயக்கத்தைப் போன்றே புலிகள் இயக்கத்தையும் நோக்குகின்றீர்களா?' என்ற பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு "இல்லை, பெரிய வித்தியாசமுண்டு" என்று யசீர் அரபாத் பதிலளித்திருந்தார். இந்த யதார்த்தபூர்வமான பதிலை தவறாக விளங்கிக் கொண்ட பேரினவாத சக்திகள், அதை புலிகளுக்கு எதிரான பூடகமான கண்டனம் என்று அர்த்தம் கற்பித்து பிரச்சாரம் செய்தன. புலிகள் இயக்கத்தையும் – தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும், அரபாத், நிராகரித்துவிட்டார் என்று எம்பிக்குதித்தன. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தை தேசிய விடுதலைப் போராட்டமென்றும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதப் போராட்டமென்றும், அரபாத் வகைப்படுத்தியுள்ளார் என்று விளக்கம் கொடுத்தன. இந்த விளக்கங்களும் – வியாக்கியானங்களும் தமிழரின் போராட்டத்தைக் கொச்சைப் படுத்தும் நோக்கம் கொண்டவை என்பதில் ஐயமில்லை.

எனினும் இரண்டு போராட்ட இயக்கங்களுக்குமிடையில் 'பெரிய வித்தியாசமுண்டு' என்ற அரபாத்தின் மதிப்பீடு சரியானதாகும். அவரின் மதிப்பீடு புலிகள் இயக்கத்திற்கும் உடன்பாடான விடயமேயாகும்.

உலகின் ஒவ்வொரு விடுதலைப் போராட்டமும் ஒன்றிலிருந்து மற்றையது வேறுபட்டு தனித்துவமாகவே

**இலங்கையின் இனப்போரை நிறுத்தி சமாதானத்தைக்காண "அரசும் – புலிகளும் பேசவேண்டும்" என்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார். ஆலோசனையுடன் நின்றுவிடாது அரசு–புலிகள் பேச்சுவார்த்தைக்கு தேவையாயின் "நான் மத்தியத்துவம் செய்யவும் தயார்"**

மிளிர்கின்றது. ஒவ்வொரு போராட்ட இயக்கமும் அதற்கே உரித்தான வரலாற்றுச் சூழலை மையமாகக் கொண்டு தத்தமது கொள்கைகளை – அணுகுமுறைகளை – வகுத்து போராட்டங்களை வழிநடாத்துகின்றன. இதனால் ஒவ்வொரு போராட்ட இயக்கமும், இயல்பாகவே ஒன்றிலிருந்து மற்றது வேறுபட்டிருக்கின்றது. இந்த நடைமுறை



உண்மையையே அரபாத்தும் சுருக்கமாக வெளிப்படுத்தியிருந்தார்.

அதேவேளை புலிகள் இயக்கத்திற்கு சார்பாகவும் – புலிகள் தொடர்பான அரசின் கடுமையான நிலைப்பாட்டை சூசகமாக நிராகரித்தும் அரபாத் கருத்து வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. இலங்கையின் இனப்போரை நிறுத்தி சமாதானத்தைக்காண "அரசும் – புலிகளும் பேசவேண்டும்" என்று அரசுக்கு ஆலோசனை கூறியுள்ளார். ஆலோசனையுடன் நின்றுவிடாது அரசு – புலிகள் பேச்சுவார்த்தைக்கு தேவையாயின் "நான் மத்தியத்துவம் செய்யவும் தயார்" என்றும் – அரபாத் – அறிவித்திருந்தார். புலிகள் இயக்கத்தைத் தவிர்த்துவிட்டு மற்றைய குழுக்களுடன் பேசமுயலும் அரசின் சூழ்ச்சிகரப் போக்கை நிராகரித்து புலிகளுடன் அரசு பேசவேண்டுமென்று ஆலோசனை கூறியதன் மூலம் தமிழ் மக்களின் அரசியல் தலைமையாக புலிகள் இயக்கத்தை அரபாத் நாசுக்காக அங்கீகரித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால், அரபாத் கூறிய அரசியல் ஆலோசனைகளையும் – அவர் வெளிப்படுத்திய மத்தியத்துவ விருப்பையும் அவரின் முன்னிலையிலேயே சிங்கள வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் நிராகரித்து – அரபாத்தை அவ



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மானப்படுத்திவிட்டார்.

இந்தக் கொழும்பு விஜயத்தின் போது "ஆயுதங்களைக் கைவிடும்படி, நீங்கள், புலிகளுக்கு ஆலோசனை கூறுவீர்களா" என்று அரபாத்திடம் கேட்கப்பட்ட போது, சிங்களப் பேரினவாதிகள் விரும்பியதுபோலப் பதிலளிக்காது, "புலிகள் அமைதிவழியை நாட வேண்டும்" என்று ராஜதந்திர ரீதியில் பதில் அளித்து, கேள்வியை தட்டிக்கழித்தார்.

இந்த வகையில், சிங்கள அரசின் விருந்தினராக கொழும்பு வந்திருந்த யசீர் அரபாத், தமிழரின் இனப்பிரச்சனையைத் தீர்க்க புலிகளுடன் பேசவேண்டும் என்று வலியுறுத்தியும் – இதன் மூலம் புலிகள் இயக்கத்தை, தமிழரின் போராட்ட சக்தியாக அங்கீகரித்தும்: ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டுமென்ற அரசின் நிபந்தனையை தட்டிக் கழித்து புலிகளின் ஆயுதப் போராட்டத்தை ஏற்றுக்கொண்டும்: பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சார்பிலும் பலஸ்தீன மக்கள் சார்பிலும் கருத்து வெளியிட்டுள்ளார் என்பதே உண்மையாகும். ஆனால் இந்தப் பேருண்மைகளை சிங்கள அரசு திரிபுபடுத்தியும் – தட்டிக் கழித்தும் நிராகரித்துவிட்டது. எனினும் தமிழர் – சிங்கள இனப்போர் தொடர்பாக அரபாத் வெளியிட்டுள்ள கருத்துக்கள் நடுநிலையுடனும் நேர்மையுடனும் அமைந்திருந்தன. போரை நிறுத்தி – பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தைக் காணவேண்டும் என்ற அவரின் விருப்பத்தை புலிகள் இயக்கம் மதிக்கின்றது. அரசிற்கும் புலிகளுக்குமிடையில் மத்தியத்துவத்தை வகிக்கத்தயார் என்ற அரபாத்தின் நிலைப்பாட்டை புலிகள் இயக்கம் வரவேற்கின்றது. எனினும் தமிழர் இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வை நோக்கிய அரபாத்தின் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை சந்திரிகா அரசு ஏற்றுக்கொள்ளாது நிராகரித்ததன் மூலம் "போர் மூலம் சமாதானம்" என்ற தனது இராணுவ நிலைப்பாட்டையே தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடிவெடுத்துள்ளது என்பது தெளிவாகின்றது.

ஒட்டுமொத்தத்தில் இலங்கையின் இனப்பிரச்சினை பற்றி அரபாத் வெளியிட்ட கருத்துக்கள் முற்றுமுழுதாக தமிழரின் விடுதலைப் போருக்கு சாதகமாகவே அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

★★★

# உயர் நீதிமன்றத்தடை

சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கம் மற்றுமொரு தடவை அரசியல் யாப்பிற்கு விரோதமான நடவடிக்கையில் இறங்கி மூக்குடைபட்டுப் போயுள்ளது, "தனியார் ஒலி, ஒளி பரப்புக்களைக் கட்டுப்படுத்தும் முகமாகச் சந்திரிகா அரசாங்கம் கொண்டுவர இருந்த 'சிறிலங்கா ஒலிபரப்பு அதிகாரசபை சட்டமூலம்' அரசியல் யாப்பிற்கு முரணானது" என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தமையே இம் மூக்குடைவிற்குக் காரணமாகும்..

அரசியல் யாப்பு வியாபாரத்தில் சந்திரிக்கா அரசாங்கம் மூக்குடைபடுவது இதுதான் முதற்தடவை என்பதல்ல. ஏற்கனவே ஐ.தே.க. வின் கீழ் இருந்த வடமத்திய மாகாணசபை பொ.ஐ.முன்னணி அரசாங்கம் கலைத்தமை அரசியல் யாப்பிற்கு முரணானது என உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது. இதேபோன்று இல்லாதுவிடிலும் வடக்கு–கிழக்கு புனரமைப்பு அதிகாரசபை ஒன்றை உருவாக்கி அதன் தலைவராக அம் மாகாணங்களின் ஆளுநரான காமினி பொன்சேகாவை நியமித்தபோதும் அரசியல் யாப்பிற்கு முரணாக சந்திரிகா அரசு நடந்துகொண்டது. பின்னர் இது குறித்து கருத்துக்கள் வெளிவந்ததும் அதனை மாற்றிக் கொண்டது. இந்த வகையில், அரசியல் யாப்பு விவகாரத்தில் சந்திரிகா அரசாங்கம் அடிக்கடி முரண்பட்டுக் கொள்வதானது, அரசியல் யாப்புக் குறித்து அது தெளிவாக அறிந்திருக்கவில்லை என்பது மட்டுமல்ல, அரசியல் யாப்பைப் பொருட்படுத்தவேண்டும் என்ற சிந்தனை அதற்கு இருப்பதாகவும் இல்லை என்பதையும் கூறவேண்டும். அவர்களின் பார்வையில், நிறைவேற்று அதிகாரங்கள் கொண்ட ஜனாதிபதியின் விருப்பு வெறுப்பு அரசியல் யாப்பிற்கு அப்பாலும் செல்லமுடியும் என்பதாகும். இந்தரீதியில், மேற்கொள்ளப்பட்டதன் காரணமாகவே மேற்கூறப்பட்ட விடயங்களில்அரசாங்கம் அவமானப்படவும், தோல்வியடையவும் வேண்டி வருகின்றது.

ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அரசியல்வாதிகளும், கட்சிகளும் பல வாக்குறுதிகளை அளிக்கின்றன என்பது உண்மைதான். எடுத்துக்காட்டாகக் கூறுவதானால், இன்று ஆட்சியிலுள்ள பொ.ஐ.முன்னணி தேர்தல்காலத்தில் நிரம்பவே வாக்குறுதிகளை மக்களுக்கு அளித்திருந்தது. இதில் முக்கியமானது மக்களின் அடிப்படை உரிமைகள் பேணப்படுவதோடு அவர்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்படும் என்பதாகும். இதில், ஐ.தே.க காலத்தில் இல்லாது ஒழிக்கப்பட்ட செய்தித்துறைக்கான சுதந்திரம் முக்கியமானது எனக்கூறியது.

ஆனால், ஆட்சிக்கு வந்த பின்னர் அரசாங்கத்தின் நிலைப்பாடு முற்றிலுமாகவே மாறியது. இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்தை மூலம் தீர்வு காண்பேன் எனக்கூறி பதவிக்கு வந்த அரசாங்கம் யுத்தத்தை ஆரம்பித்ததோடு ஏனையவற்றை மறந்தது. அதிலும், குறிப்பாக செய்தித்துறையின் சுதந்திரம் பறிக்கப்பட்டதோடு, அச்சுறுத்தலும் விடுக்கப்பட்டது

குறிப்பாக யுத்தகளச் செய்திகளில் அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தியது. இதன் காரணமாக சிறிலங்காவில் நீண்டகாலம் செய்தித்தணிக்கையை அமுல்படுத்திய அரசாங்கம் என்ற பெயரை தனது இரண்டு வருடகால ஆட்சிக்குள்ளேயே பெற்றுக் கொண்டது. அத்தோடு இலங்கையின் வடக்கு–கிழக்குப் பகுதிகளுக்குப் பத்திரிகையாளர் செல்வதற்கு முற்றிலுமாகத் தடை விதித்துள்ள அரசாங்கம், சில மாதங்களுக்கு ஒரு தடவை, தான் விரும்பிய இடங்களுக்கு மட்டும் செய்தியாளர்களைக் கூட்டியும் சென்றது.

இவைதவிர சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் ஆட்சியை விமர்சனம் செய்யக்கூடிய காலப்பகுதியும் ஆரம்பமாகிவிட்டது. அதாவது, ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் கழிந்துவிட்ட நிலையில் பலவிமர்சனங்களை எதிர்கொள்ள வேண்டிய நிலை சந்திரிகா அரசாங்கத்திற்கு எழுந்துள்ளது. இந்த நிலையில், அரசாங்கத்தின் மீதான விமர்சனத்தைத் தடுக்கும் முகமாகவே இவ் மசோதாவை சந்திரிகா அரசாங்கம் கொண்டுவர முனைந்தது.

ஆனால், சந்திரிகா அரசாங்கத்தின் இத்தீர்மானத்திற்கு உயர்நீதிமன்றம் தடையாக எழுந்துள்ளது. சகல அரசியல்வாதிகளுக்கு தமது ஆட்சியை கால வரையறையின்றி நீடித்துச் செல்வதற்கும் தமக்கு எதிரான விமர்சனத்தை தவிர்ப்பதும் விருப்பமானதொன்று தான் ஆனால், அதற்காக எழுதப்பட்ட அரசியல் யாப்பிற்கு மாறாக ஆட்சியை நடத்திச் செல்லலாம் என எண்ணுவது ஆட்சியாளரின் சர்வாதிகாரப் போக்கின் வெளிப்பாடே ஆகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பலதும்

## சரியான பே(ா)ட்டி

ஈ.பி.டி.பி. இல் இருந்து வெளியேற்றப்பட்ட ராமேஸ்வரன் பேட்டி (சரிநிகருக்கு)

- டக்ளஸின் அரசியலானது கஜானாவை நிரப்புவதற்கான சந்தர்ப்பவாத அரசியலே. அதற்காக யாருடனும் அவரால் சேரமுடியும். ஆனால் பணம் கிடைக்கும் வழி அதுமட்டுமல்ல. இன்று யாழ் மாவட்டம் முழுவதுமாக தீவுப்பகுதி உட்பட நூறுக்கும் குறைவான தோழர்களே கடமையில் உள்ளனர். ஆரம்பத்தில் 400 பேர் இருந்தார்கள். இவர்கள் எல்லோருக்கும் சிறீலங்கா பாதுகாப்பு அமைச்சால் இராணுவத்துக்குக் கொடுக்கப்படும் அளவு சம்பளம் வழங்கப்படுகின்றது. ஒருவருக்கு 7000ரூபாவரையில் கிடைக்கும். அதைவிட வேறு வசதிகளும் உண்டு. இவர்களுக்கான பணம் அத்தனையும் டக்ளசே பெறுகின்றார். 400 பேருக்கு 600 பேர் என்று பட்டியல் அனுப்பிப் பெறும் பணத்தில் சிறிதளவு தொகையே அங்கு பணிபுரியும் தோழர்களுக்கு அனுப்பப்படுகிறது.

- நோக்கம் ஒன்றாக இருந்தபடியால் பிரேமதாசவின் உதவிகளாலேயே ஈ.பி.டி.பி இயங்கமுடிந்தது.

- எந்தத் தமிழ் அமைப்பு தமிழ்மக்களின் நலன்களுக்காக தொழிற்படுகின்றது? எல்லோருமே ஆளும்கட்சியைச் சார்ந்து தானே இருக்கின்றனர்.

- நாங்கள் செய்ததும் செய்யப்போவதும் பூச்சியம் தான்

- ஈழம்.....புரட்சி... சேச்...சே அப்படியொன்றும் இருக்கவில்லை தேசிய அரசியல் நீரோட்டத்தில் கலக்கவே செயற்பட்டோம்

## கொள்(கை)ளை

"இந்தியாவில் இருந்து உடுத்த உடையுடன் வந்த டக்ளஸ் தேவானந்தாவின் சுவிஸ் வங்கிக் கணக்கில் நூறுகோடி ரூபாய் உள்ளது. இப்பணம் பொது மக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்டது."

- அண்மையில் ஈ.பி.டி.பி உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள ஆர்.இராமமூர்த்தி பாராளுமன்ற உறுப்பினர்

"கட்சிக் கொள்கையையும், தங்களது கடமையையும் ஒழுங்காக கடைப்பிடிக்காததால் ஆர்.இராமமூர்த்தி, ஆர். இராமேஸ்வரன் ஆகிய இருவரும் கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்."

- டக்ளஸ் தேவானந்தா

## வெங்காயம்

கடந்த இரு மாதங்களுக்கு முன் யாழ்ப்பாணத்தில் இருந்து கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட சின்ன வெங்காயத்தின் பெரும்பகுதி பாவனைக்கு ஒவ்வாத நிலையில் அழுகிவிட்டது. ஆகையால் தரைப்பாதையை திறக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

– பொதுசன ஐ.முன்னியைச் சேர்ந்த அமைச்சர் டி.எம். ஜயரத்னா, வவுனியா–கிளிநொச்சி பாதைதிறப்பிற்குக் கொடுத்த விளக்கம்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பத்தும்

## ஒட்டுண்ணிகள் அல்லது வாலாட்டம்

சிறீலங்கா ஒரு நாடு. அது எக்காரணம் கொண்டும் இரண்டாகப் பிரிவடைவதை நான் அனுமதிக்கமாட்டேன் நாட்டைப் பிரிக்க முயலும் விடுதலைப்புலிகளுக்கு முகங்கொடுக்க நான் எப்போதும் தயாராகவே உள்ளேன்.

— டக்ளஸ் தேவானந்தா
சிங்களப் பத்திரிகையில்

***

ஜனாதிபதி சந்திரிக்காவிற்கு பணிசெய்வதற்காகவே நான் அரசியலுக்கு வந்தேன். அவருக்கு பணி செய்வதே எனது மேலான பாக்கியம்.

— லக்ஸ்மன் கதிர்காமர், அமெரிக்காவில்

## பேச்சும் செயலும்

**பேச்சு**

"பள்ளிக்கூடங்களைத் தரமுயர்த்துவதற்காகவும், கல்வியைச் சீர்திருத்துவதற்காகவும் எல்லா உதவிகளையும் வழங்க அரசு தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது.

– சி.சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா

**செயல்**

"ஒருமாணவனுக்கு இந்தியா 16 டொலரும், பாகிஸ்தான் 10 டொலரும் செலவிடுகின்றது. ஆனால் எமது நாடு 7 டொலர் வரையே செலவிடுகின்றது. ஆனால் யுத்த செலவு ஒரு ஆளுக்கு 2350 ரூபாவாகும்"

– பாராளுமன்ற உறுப்பினர் பரராசசிங்கம்.

## சரியான பேச்சு

***

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் ஒருபோதும் ஆயுதங்களை ஒப்படைத்து பேச்சுக்கு வருவார் என யாரும் எதிர்பார்ப்பது தவறு. நியாயமான அரசியல் தீர்வு கிடைக்கும் வரை விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் முடிவடையப் போவதில்லை.

– வடக்கு கிழக்கு மாகாண ஆளுனர்
காமினி பொன்சேகா

***

வடக்கு–கிழக்கு தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைகள் ஹிட்லரின் கொடூரங்களுக்கு எவ்விதத்திலும் சளைத்ததல்ல. ஆண், பெண், சிறுவர், வயோதிபர் எனும் வேறுபாடுகளில்லாது பல்லாயிரக்கணக்கானோரைப் பலியெடுத்தும், லட்சக்கணக்கானோரை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகளாக்கியும் தொடருகின்ற இப்படுகொலை யுத்தம் யாருக்காக நடத்தப்படுகின்றது?

– நவசமசமாசக் கட்சித் தலைவர்
விக்கிரமபாகு கருணாரத்ன, மேதினக்கூட்டத்தில்

***

இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வுகாணும் விடயத்தில் அரசாங்கம் அக்கறையுடன் ஈடுபடவில்லை.
அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை வெளியிடலாம், பிரச்சாரம் செய்யலாம். ஆனால் விடுதலைப்புலிகள் இன்றி சமாதானம் காணமுடியாது.

– பாராளுமன்றத்தில் அநுரபண்டாரநாயக்கா

***



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கிழக்கு யுத்தமுனை



## புதிய பரிமாணங்களூடு விரியும் களம்

மணலாற்றில். வெலிஓயா ஆக்கிரமிப்புச் சிங்களக் குடியேற்றத் திட்டத்தின் மூலம் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதி அபகரிக்கப்பட்டதுடன், அதன் நிலத் தொடரைத் துண்டித்து வடக்கிலிருந்து கிழக்கை வேறாக்க சிங்களம் முயன்றுள்ளது.

இன்னொரு புறத்தே, கிழக்கில்– அல்லை – கந்தளாய் ஆக்கிரமிப்புச் சிங்களக் குடியேற்றத்தின் மூலமாக திருகோணமலை – மட்டக்களப்பு மாவட்டங்களின் நிலத்தொடரைத் துண்டிப்பதற்கான சதி முயற்சி ஒன்று அரங்கேற்றப்பட்டதுடன்–மட்டக்களப்பு – அம்பாறை மாவட்டங்களுக்கு இடையில் இன்னொரு ஆக்கிரமிப்பு சிங்களக் குடியேற்றத்தை நடாத்தி, மாவட்டங்களுக்கிடையிலான எல்லைக்கோட்டை மாற்றியமைத்து, தமிழரின் தாயக நிலத்தை சிதிலமாக்கும் மற்றமொரு சூழ்ச்சித் திட்டத்தையும் சிங்களம் நடைமுறைப்படுத்தியது.

நில அபகரிப்பு நடவடிக்கைகள் இவவாறு தொடர, மறு புறத்தே தமிழர் தரப்பின் ஐக்கியத்தைக் குலைக்கும் சதி நகர்வுகளையும் சிங்களப் பேரினவாதம் கிழக்கில் களத்திலிறக்கியது.

தமிழ் மக்களுக்கு விரோதமான கருத்துகளை முஸ்லிம்களுக்குள்ளும், முஸ்லிம்களுக்கு எதிரான, கருத்துகளை தமிழர்களுக்குள்ளும் விதைத்தது. தமிழ்த் தரப்பினுள் முரண்பாட்டை வளர்த்தது, கலவரங்களும் மோதல்களும் நிகழ்வதற்குத் தூண்டியது. அடுத்தடுத்திருந்த தொடரான ஊர்களில், ஆண்டாண்டு காலமாகக் குடும்ப உறவுகளாகக் கூடி வாழ்ந்த மக்கள் சமூகங்களுக்குள் வெறுப்புணர்வை உருவாக்கியது. பின்னொரு காலத்தில் அவர்கள் வரலாற்றுப் பகைவர்கள் போலப் பகைத்துக் கொள்ளும் அளவுக்கு சிங்களப் பேரினவாதிகள் வஞ்சக ஊக்கிகள் செயற்பட்டனர்.

அதேபோல–

வடக்கோடு இணையாமல் கிழக்குத் தனித்திருந்தால், அதற்கு மேம்பாட்டு அனுகூலங்களும், முன்னேற்றத்திற்கான சாதகத் தன்மையைகளும் உண்டு என்று வடக்கு, விரோதக் கருத்தைக் கிழக்கு வாழ் தமிழர்களுக்குள் பரவச் செய்யும் சூழ்ச்சிப் பணியிலும் சிங்களப் பேரினவாதிகள் ஈடுபட்டனர்.

இவ்வாறாக–

தமிழர் தாயகம் கோட்பாட்டை அர்த்தமற்றதாக்கி, தமிழினத்தின் தனித்துவத் தேசியத் தன்மையைச் சிதைத்து, தமிழர்களது விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையைத் தகர்த்துவிட வேண்டுமெனில், கிழக்கை முழுமையாக அழித்துவிடுவதே ஒரே வழி என்று தீர்மானித்ததோடு சிங்கள ஆளும் வர்க்கத்தினர் முனைப்போடு செயற்பட்டனர்; செயற்பட்டு வருகின்றனர்.

இந்த நடவடிக்கைத் தொடரின் இப்போதைய இறுதிக் கட்சியாக இனப் பிரச்சினைதான் 'தீர்வுத்திட்டம்' என்ற போர்வையில் தமிழரின் தாயகப்பூமியை சட்டபூர்வமாகக் கூறுபோடும் கைங்கரியத்தில் இன்றைய சந்திரிகா அரசாங்கம் மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

முதலில் 'தனிமாகாணம்' என்ற பெயரில் கிழக்கை வடக்கிலிருந்து பிரித்தெடுத்துவிட்டு பின்பு–

தமிழர்கள், முஸ்லீம்கள், சிங்களவர் ஆகிய மூவின மக்களும் தனித் தனியான வெவ்வேறு நிர்வாக அலகுகள் என்று மூடு திரைக்குப் பின்னால், கிழக்கை மூன்று துண்டிடும் ஒரு கபடத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தவும், சிங்கள ஆட்சியாளர்கள் துடியாத் துடிக்கின்றனர்.

இவ்வாறு–



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



தமிழரின் பூர்வீகப் பூமியை துண்டாடி அதன் ஒருமைப்பாட்டைச் சிதறடித்து முழுமையாக அதனைக் கபடகரம் செய்துவிடுவதென்பது சிங்களப் பேரினவாதிகள் ஒருபோதுமே கைவிடாமாட்டாத, தமிழர் சுதந்திரப் போருக்கு எதிரான அரசியல் மூலோபாயமாகவே திகழ்கின்றது.

**தமிழீழ தேசியப் புரட்சியின் ஆயுதப் போரரங்கில், எப்போதும் தாக்கம் மிகுந்த, அரசியற் கேந்திர முக்கியத்துவம் மிக்க போர்க்களமாக கிழக்கு முனை விளங்கி வருகின்றது**

நுட்பமான, அதேவேளை நாசகாரத் தன்மை மிக்க இந்த அரசியல் மூலோபாயத்தை வெற்றிகரமாக நடைமுறைப் படுத்த வேண்டுமெனில், கிழக்கைத் தமது முழுமையான படை பலகட்டுப்பாட்டு ஆதிக்கத்தினுள் வைத்திருந்தே ஆக வேண்டும் என்பதைத் தீர்மானித்த சிங்களத் தரப்பு கிழக்கில் தமது போர்வலுவின் உறுதிப்பாட்டை மிகுந்த இடர்களுக்கு மத்தியிலும் தொடர்ச்சியாகப் பேணிவருகின்றது.

இந்த வகையில் இப்போது—

அத்துமீறிக் குடியமர்த்தப்பட்ட பல பத்தாயிரம் சிங்கள மக்கள் வாழும் ஒரு குடியேற்றப் பிராந்தியம் என்பதாலும்—

தமிழ் தேசிய இனப்பிரச்சினையின் அங்கமாகி, இலங்கை அரசியலின் சர்ச்சைக்குரிய ஒரு மக்கள் சமூகமாகத் திகழும் முஸ்லீம்கள் தமது பாரம்பரிய வாழ்விடமாகக் கொண்டு அதிக தொகையில் வாழும் பிரதேசம் என்பதாலும்—

சிங்கள தேசத்தோடு தரைத்தொடர்ச்சியுடைய நீண்ட எல்லையைக்கொண்ட மாகாணம் என்பதாலும்—

பெரும் கடற்பரப்பையும், வளம் நிறைந்த பெரும் விவசாய நிலப்பரப்பையும் மட்டுமன்றி, திருகோணமலையின் புகழ்பூத்த துறைமுகத்தையும் தன்னகத்தே உடைய பொருண்மிய அனுகூலப் பகுதி என்பதாலும்—

தமிழீழத் தேசியப் புரட்சியின் ஆயுதப் போரரங்கில், எப்போதும் தாக்கம் மிகுந்த, அரசியற் கேந்திரம் மிக்க போர்க்களமாக கிழக்கு முனை விளங்கிவருகின்றது.

இராணுவ ரீதியாகப் பெரும் விளைவுகளைத் தரும் பொருது களமாக தற்போதைய நிலையில் வட போரரங்கே திகழ்கின்றது. யுத்தத்தின் போக்கை தீர்மானிக்கவல்ல சமர் முனையாகவும் அதுவே உள்ளது. இதேவேளையில்—

சிங்களத் தரப்பை இறுக்கமான நெருக்கடிக்குள் சிக்க வைக்கக்கூடிய அரசியல் ரீதியான விளைவுகளைத் தரவல்ல களமாக, கிழக்குப் போரரங்கே விளங்குகின்றது.

எனவே, நுட்பமான புதிய புதிய யுத்த வியூகங்களை வகுத்து, தலைவர் பிரபாகரன் அவர்கள், களச் சூழ்நிலைக்குப் பொருத்தமான வழிமுறைகளினூடாக கிழக்கு முனையை தொடர்ச்சியாக நெறிப்படுத்திச் செல்கின்றார்.

புளுகுணாவி அதிரடிப்படை முகாம் அழிக்கப்பட்டதன் தொடராக, வவுணதீவுப் படைமுகாம் மீது நிகழ்ந்த பெருந்தாக்குதல், கிழக்கில், புலிகள், யுத்தத்தை இன்னொரு கட்டப் பரிமாணத்துக்குள் நகர்த்துவதை தெளிவாக்கியுள்ளது.

விகிதாசார ரீதியாக, எதிரிக்கு எம்மைவிடப் பெரும் இழப்பைக் கொடுத்தல், அதே வகைப்பட்ட தொகையில் போர்க் கருவிகளைக் கைப்பற்றுதல், பகைத்தளத்தை அழித்து, நிலத்தை மீட்டுத் தக்க வைத்திருத்தல் போன்ற பெறுபேறுகள் இந்தத் தாக்குதலின் முடிவாக விளையாதபோதும்—

தாக்குதலின் போரியற் பரிமாணம்





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கிழக்குக் களத்திற்குப் புதியது; பெரியது.......

மட்டக்களப்பு வாவிக்கு மேற்குக் கரையில் உள்ள நகர்ப்புறப் பிரதேசம்— எழுவான் கரை— சிங்களப் படையின் கட்டுப்பாட்டின் கீழும்—

வாவிக்கு மறு கரையில் உள்ள மருத நிலப்பெரும் பரப்பு— படுவான்கரை— சிங்களப் படையின் கட்டுப்பாட்டில் இல்லாமலும் உள்ள மட்டக்களப்புத் தளப் பிராந்தியத்தின் இன்றைய கள நிலவரத்தில்—

வாவிக்கு மேலாக எழிவான் கரையோடு தரைத்தொடர்பு படுத்தும் வலையிறவுப் பாலத்தை மட்டும் நம்பி படுவான்கரைப் பகுதிக்குள் வவுணதீவு முகாமை அமைத்தது சிங்களப் படை.

முன்பொரு தடவை வட போரரங்கின் துருப்புக்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக வவுணதீவிலிருந்து முகாம் அகற்றப்பட்டபோதும், அவசியத் தேவை கருதி மீண்டும் அமைக்கப்பட்டது.

மாவட்டத்தின் கள நிலைமையில், வவுணதீவு முகாம், சிங்களப் படைக்கு காத்திரமான பயன்பாட்டைத்தான் வழங்கியது.

நீரேரியைக் கடந்து, நகர் பிரதேசத்திற்குள் புலிகள் ஊடுருவுவதைத் தடுப்பதற்காக, பதுங்கித் தாக்கும் பிரிவுகளையும், வேறு பிரிவுகளையும் கொண்டு வாவியின் மறு கரையோரத்தை தொடர்ச்சியான கண்காணிப்பின் உள் வைத்திருப்பது அந்தத் தளத்தின் முதன்மைப் பணிக்குள் ஒன்று. அத்தோடு—

தமது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத— புலிகளின் நிர்வாகத்திற்குட்பட்டிருந்த – பெருநிலப்பரப்பினுள் நாசகாரத்தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதையும், புலனாய்வு வேலைத் திட்டங்களை நகர்த்துவதையும், சிங்களத் தரப்பு இந்த முகாமைச் செயற்பாட்டை மையமாகக் கொண்டே நடைமுறைப்படுத்தியது.

இன்னொருவகையில் மட்டுநகர்ப் பிரதேசம் மீது புலிகள் பெரும் தாக்குதல் நடவடிக்கை ஒன்றைத் தொடுப்பார்களாயின் அதனை அவர்கட்குச் சாத்தியமற்றதாக்கி நகருக்கு வெளியே வாவிக்கு மறு கரையில் பெருஞ் சண்டைக் களத்தைச் சந்திக்க வைப்பதற்காகவும், அந்த முகாம் முன்னரங்கத் தளமாக அமைக்கப்பட்டிருந்தது.

முகாம் தாக்குதலுக்குள்ளாகுமிடத்து, ஒரு கிலோ மீற்றர் தூரத்திலிருக்கும் மறு கரையிலிருந்து உடனடியாக உதவி வழங்கி தாக்குதலை முறியடித்து முகாமை முழுமையாகக் காப்பாற்ற முடியும் என்ற உறுதியான நம்பிக்கையோடுதான் எதிரி அங்கு முகாமை இட்டிருந்தான்.

அது துணிகரமான, கிழக்கின் கள நிலவரத்தைப் பொறுத்தவரை, இது ஒரு ஆச்சரிய அடி, கேள்விக்கிடமற்ற பலத்துடனான பின்னணித் துணையோடு வீற்றிருந்த முன்னணித் தளத்தை எதிர்கொண்ட சவால்ச் சண்டை. மட்டக்களப்பு நகரத்திலிருந்து மாவட்டத்தில் நிறுத்தப்பட்டுள்ள மூன்றாவது டிவிசன் படையணியின் கட்டளைப் பணியகத்திலிருந்தும் ஐந்தே கிலோ மீற்றர் வான்படைத் தளத்திலிருந்து மூன்றே கிலோ மீற்றர் தூரம். 120–மில்லி மீற்றர், 81–மில்லி மீற்றர் எறிகணை மோட்டார்களாலேயே குறிவைக்கக் கூடிய வீச்சுத்தூரம். தளத்தின் இந்த அமைவிடம், தாக்குதலின் தாரப் பாரியத்தை எடுத்தியம்பும்.

**கிழக்கின் கள நிலவரத்தைப் பொறுத்தவரை, இது ஒரு ஆச்சரிய அடி, கேள்விக்கிடமற்ற பலத்துடனான பின்னணித்துணையோடு வீற்றிருந்த முன்னணித் தளத்தை எதிர்கொண்ட சவால்ச் சண்டை**

தாக்க முயலமாட்டார்கள் என நம்பியிருந்த போதும், புலிகள் தாக்கவிருக்கின்றார்கள் என தகவல் அறிந்த எதிரி தயார்ப்பட்டு நிற்க—

கம்பீரமாக வீற்றிருந்த வவுணதீவுத் தளத்தின் கம்பி வேலி கடந்து புலிகள் புகுந்தபோது, கிழக்கு களம் அதுவரையில்லாப் பெரும் சண்டையரங்கைச் சந்தித்தது.

முதுநிலைப் படைத்துறை ஆணையாளர்களுள் ஒருவரான கருணாம்மான் அவர்களின் கண்காணிப்பின் கீழ் முதன்மைக் கள வழிநடத்துனர்களுள் ஒருவரானாராம். அவர்களால் நெறிப்படுத்தப்பட்ட தாக்குதலை, கிழக்கின் முன்னணித் தளபதிகளுள் ஒருவரான பிரபா நேரடியாகக் களத்தில் வழிநடத்தினார். மகளிர் படையின் மட்டக்களப்பு— அம்பாறை சிறப்புத் தளபதி லெப். கேணல் மதனா, மேஜர் சைலன், மேஜர் குட்டி மற்றும் நாதன், சுது ஆகியோரது தாக்குதலணிகள் நேரடியாகவே பிரதான முகாமைத் தாக்க—

லெப். கேணல் பாலேந்திரா மற்றும் தாத்தா ஆகியோரது தாக்குதல் அணிகள் பாலத்தடி உப முகாமை வீழ்த்தி, எதிரிக்கு உதவி கிடைப்பதைத் தடுப்பதற்காக பாலத்தையும் தகர்த்தபின், பிரதான முகாமை வீழ்த்தும் முக்கிய சண்டையின் களத்தில் இறங்கினர்.

நள்ளிரவு கடந்து ஒரு மணியளவில் ஆரம்பித்த சண்டை காலை பத்து மணி வரை நீடித்தது, ஊகித்திருந்ததை விடவும் களம் சற்று மாறுபட்டதாக அமைந்துவிட்டது. திட்டமிடலின் சண்டை—கடுமையானதாக இருக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான். ஆனால் எதிர்பார்த்ததை விடவும் சண்டை கடுமையானதாக இருந்தது. கணிப்பீடு செய்து வைத்திருந்ததை விடவும், எதிரியிடமிருந்து சற்றுக் கூடுதலாக எதிர்ப்பைச் சந்திக்கவேண்டி நேர்ந்தது. வான் போரூர்திகளினதும் நகர்ப்பிரதேசத் தளங்களிலிருந்த எறிகணை மோட்டார்களினதும் படு தாராளமான தாக்குதல் உதவியுடன் தாக்குப் பிடித்த எதிரி. முகாம் புலிகளிடம் வீழ்வதைத் தடுப்பதற்காக தன் னாலான உச்சக்கட்ட முயற்சியைச் செய்தான். மொறக்கொட்டாஞ்சேனை முகாமிலிருந்த ஆட்லறி பீரங்கியும் புலிகளின் அணிகள் மீது சாவினைப் பொழிந்தது. எனினும் தளத்தை முழுமையாக வீழ்த்தி வெற்றி கொள்ள வேண்டும் என்ற உறுதிப்பாட்டுடன் வீரர்கள் விழவிழவும் வியூகமிட்டு வியூகமிட்டு முன்னேறிய புலி வீரர்கள் முகாமைப் பூரணமாக அழித்தொழித்த பின்னரே களத்தை விட்டு வெளியேறினர்.

விடுதலைப் புலிகளின் 94 வீரர்கள் இந்த வெற்றியின் மடியில் வீழ்ந்தனர். முகாம் மீதான தாக்குதலிலும் நகர்ப் பிரதேசத் தளங்கள் மீதும் முகாம் படையினருக்கு உதவிக்காக, வாவிக்கு மறு கரையில் உலங்கு வானூர்திகளில் தரையிறக்கப்பட்டர்கள் மீதும் வான் படைத்தளம் மீதுமான மோட்டார் எறிகணைத் தாக்குதல்களிலும் குறைந்தது 160 சிங்களத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாக நம்பகமாக அறியக் கிடைக்கின்றது.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நாட்டார் இலக்கியம் உலகின் எல்லா இனங்களிடையே யும் பேணப்பட்டு வருகிறது. பாரம் பரிய கலைவடிவங்கள் இந்த நாட்டார் இலக்கியங்களில் இருந்தே பிறந்துள்ளன.

தமிழீழத்தின் நாட்டார் இலக்கியங் கள், இசை, நாடகம், கூத்து, கதை, பழ மொழி, விடுகதை என பல வடிவங்க ளில் பேணப்பட்டு வருகின்றன. தமிழர், இசையோடு பிறந்து, இசைபட வாழ்ந்து இசையோடு இறக்கும் மாண்புள்ளவர் கள். பிறந்தபோது தாலாட்டு, தவழும் போதும், நடக்கும் போதும் பாட்டு, பாலர் பாட்டு, கும்மி, கோலாட்டம், பந்தாட்டம், ஊஞ்சலாட்டம், வேலை செய்யும்போதும் பாடல், கல்யாணப் பாடல், வாழ்த்துப் பாடல், வழிபாடல், இறந்தால் ஒப்பாரி இப்படி இறுதி வரை பாடல் தமிழரின் உயிரோடு ஒன்றி யுள்ளது.

இசையோடு பிறந்த அசைவே நாட கமாகி துடிப்பான அசைவில் கூத்தாக மருவியது.

பாடசாலைகள் இல்லாத காலத்து, குருகுல முறைக்கல்வியின் எச்சமாகவே இவை இருந்தன எனலாம். நமது தமி ழீழப் பாரம்பரியத்தில் வளர்ந்த நாட் டார் இலக்கியங்களுள் பல, சரித்திர



# இடர் நடுவே எழும் கலைகள்

நிகழ்வுச் சான்றுகள் பொதிந்தவை. காலங்காலமாக எம்மை அடக்கி ஆண்ட அந்நியர்களின் செயற்பாடுக ளால் இற்றுப்போன கலை வடிவங்க ளுடன், ஆவணங்களும் அடங்கிப் போயின. ஆனால் வாய்வழி பேணப் பட்ட இலக்கியங்களே இவற்றைப் பாதுகாத்து எமக்களித்தன என்பது ஒரு உண்மை. இது இப்படியிருக்க, வாய்மொழி இலக்கியம், வாய்மொழி யாகவே இருக்க வேண்டும் என்ற கருத்தும், இதுவே நாட்டார் இலக்கியத் துக்கான வரையறை என்பதும் நிலவி வருகிறது.

**தமிழ்க்கவி**

இவை வளரும் களங்களாக, கோவில் கள், வீதிகள், வேலைத்தலங்கள் என் பன அமைந்தன. நாட்டு நடப்புக்கள் பெரும்பாலும், பாடல்களாயின. வெள் ளையர் ஆட்சியிலேயே அதிக பாடல் கள் உருவாயின. தொடர்ந்து மலையக மக்களின் துயரங்கள் பாடல்வரிகளா யின.

சுன்னாகச் சந்தையிலே – பறங்கி
சுங்கானைப் போட்டுவிட்டான்.
................................................
முந்திரிச் சாராயம் பறங்கிக்கு
முன்னூறு கோழிமுட்டை.

போன்ற பாடல்கள் வெள்ளையரின் வரவை வியந்தும்

பாசிமணி ஊசியெல்லாம்
வாங்கலையோ ஆயாளு—

என்ற பாடல்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்த மக்களையும் குறிப்பது போல், உழைக்கும் மக்களின் அக வாழ்வுச் செம்மையின் சான்றாக பள்ளு இலக்கி யங்களும் எழுந்தன. இலங்கை சுதந்தி ரம் பெற்றது. தொழில் தேடியும் வெள் ளையரால் அழைத்து வரப்பட்டும் ஆயிரக்கணக்கான மக்கள் மலையகத் தில் குடியேறினர். இவர்களை சிறி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

மாவோ அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் நாட்டிலிருந்து வெளியேற் றும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. நூறு வருடங்களுக்கு முற்பட்ட பரம் பரையினர் பலர் இலங்கைப் பெண்க ளையோ ஆண்களையோ திருமணம் செய்து குழந்தைகளும் பெற்றிருந்தனர். அவர்கள் ஈவிரக்கமின்றி பிரிக்கப்பட்ட னர். இலங்கையில் பிறந்த குழந்தைகள் இலங்கையிலும், இந்தியாவில் பெற்ற குழந்தைகள் இந்தியாவுக்கும் அனுப் பப்பட்டனர். இது சார்பாக ஏராள மானநாட்டார் பாடல்கள் உருவாயின. காதலன் ஒருவன் 'கள்ளத்தோணி' என பிடிக்கப்பட்டு இந்தியாவுக்கு அனுப் பப்படும் நேரம், தன் காதலியிடம் விடைபெறுகிறான். கப்பல் துறைக்கு மன்னார் ரயிலில் புறப்பட மனமில் லாமல் பாடுவதாக அமைந்த பாடல்.

மன்னாருக்கோச்சியேற
மனசு சரியில்லே— என்
மனசுக்குகந்த கண்ணே உன்னை
மறக்க முடியவில்லை — அடி

வாழ வந்த பெண்ணே— என்னை
மதி மயங்கிய கண்ணே
பூமரத்துச் சிட்டே — என்
புனுகு சாந்துப் பொட்டே......

எனத் தொடர்கிறது. இவை காலத்துக்குக் காலம் இயற்றப்பட்ட பாடல்களேயாம். சமூகச்சீர்திருத்தக் கருத்துக்கள், கூத்துக்களின் இடையே வரும் பாத்திரங்களால் பாடப்பட்டு பரப்பப்பட்டன.

கள்ளுச் சாராயம் குடியாதே— அபின்
கஞ்சா மதுவையும் கொள்ளாதே
உள்ளம் மயங்கிடும் கண்ணும் சிவந்திடும்
ஓட்டாண்டியாகுவாய் மானிடனே.

— மானிடக்கும்மி என்ற பாடல் வரிசையில் வரும் பந்தியாகும். அம்பாப் பாடல்கள், கடற்றொழில் சார்ந்த பாடல் கள். 'அம்பி' என்பது படகினைக் குறிக் கும் சொல் படகுத் தொழில் பாடல் கள் 'அம்பிப் பாடல்' என வழங்கி அம்பாப்பாடல் என மருவிவிட்டது. தொழில் சார்பாடல்களில் சந்தம், தரு என்பன தொழிலின் இசைவுக்கேற்ப அமைந்து வரும். வலையிழுக்கும் போது 'ஏலையா' 'ஐலசா' போன்ற தரு ஒலி கள் வருவதுண்டு. அந்தோனி, சந்தியா போன்ற பெயர் இறுதிகளும் பாடல் களில் அமைந்துள்ளன.

கிராமியப் பாடல்களில், வன்னி வள நாட்டின் படல்கள் குறிப்பிடத் தக்கவை. வனத்தை அடிப்படையாகக் கொண்டெழுந்த பாடல்கள் தொழில் சார் பாடல்களாக வழக்கிலிருந்தன. அருவிவெட்டுப்பாடல், ஏற்றப்பாடல், வண்டிப்பாடல், உழவுப்பாடல், சூடு மிதிக்கப் பாடல் என ஏராளமாக உண்டு. வன்னி வழக்கிலுள்ள பாடல் கள் பல தொகுக்கப்பட்டு புத்தக வடி விலும் வந்துள்ளன. இப்பாடல்களில் ஏராளமான சரித்திரச் சான்றுகளும் உள. உதாரணமாக குருவிச்சிந்தில்

கொச்சிமல குடகுமலை கோல மலை நீலமலை
கொக்குளாய் செம்மலை
குருந்துமலை கண்டல் — என்றும்
கொட்டிக் கிணற்றடிப் பிள்ளை யார் கும்மியில், கோட்டக் கேணி விநாயகர் தானுமோ
கொக்குத் தொடுவாயின் அந்தமடி — என்றும்
........கோதையே சொல்லின் அமரி வயல் — என்றும்
........ கோதையே சொல்லிக் குமுழ முனை — என்றும்

பல இடங்களில் எமது கிராமங்க ளின் சிறப்பு பேசப்படுகிறது. சமயவழிப் பாட்டோடமைந்த நாட்டார் இசைகளே மிகுதியாகக் காணப்படுகிறது.

யாத்திரை செய்வது பண்டைத் தமிழர் பண்பாடு, தமிழீழத்திலும், புளி யம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவதினத்தில் அங்கே யாத்திகர் கூடி வைகாசி விசாக தினத்தில் வற் றாப்பளை அம்மன் சந்நிதியில் சேர்ந்து கரையோரமாக குமணை, உகந்தை வழியே கதிர்காமக் கந்தனை தரிசிக்கச் செலவார்கள். அந்தச் சம்பவங்களும் இன்று கனவாகிவிட்டாலும் பாடல் கள் உண்டு.

ஆண்:—கதிர்காமத்துக்கு காவடி எடுத்து
காது குத்தி மொட்டையடித்து
கடன் செலுத்திப் போகவேண்டும்.
கண்ணே ரஞ்சிதமே— விரைந்து
கட்டுச் சோற்று மூடையை
கட்டு மனோ ரஞ்சிதமே!

பெண்:—இருக்கிற பிள்ளை இடுப் பிலுமுண்டு
நடக்கிற பிள்ளை கையிலிருக்கு
சுமப்பதும் நடப்பதும் கஷ்டம்
தானே அத்தானே
ஒரு காரு பிடிச்சாப் போவது சுகம் தானே

ஆண்:— கால் நடைப்பயணம் யாத்திரைக்கழகு
காரு பிடிச்சா காசுக்குச் செலவு
கைவீசி நடந்து போவோம் கண் ணே ரஞ்சிதமே
கவலையும் வேண்டாம் கடுகி நடப் போம் மனோரஞ்சிதமே.

கதிர்காம யாத்திரை பற்றியது போலவே மலையக மக்களும் தம் வழி வழி வரும் துன்பதுயரங்களைப் பாடி வைக்க மறக்கவில்லை. இந்த வரிசை யில் சிவனு, லட்சுமணன் போன்ற தியாகிகளின் வரலாறும் பாடப்பட் டுள்ளன.

திரைப்படங்கள், தொலைக்காட்சி கள், வானொலி போன்றவற்றின் தோற் றமும் வளர்ச்சியும், எமது பாரம்பரிய வழக்கிலிருந்த தாலாட்டு, ஒப்பாரி, வேலைப்பாடல்கள் என்பவற்றின் மாறான வடிவங்களுக்கு முக்கியத்து வம் கொடுத்த போதிலும், காலப்போக் கில அவ்வூடகங்களே அவற்றைப் பயன் படுத்துவதும் எமது போராட்டச் சூழ லில், தமிழர் கலைகள் புனரமைப்பு அதாவது மறுபிறவி எடுத்துள்ளதும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். போராட் டச் சூழலில் கூத்து வடிவங்களில் 'களத்தில் காத்தான்', 'வெற்றிக்களத் தில் வீரவேங்கைகள்' யாழ், வன்னியி லும் மன்னாரின் 'வேங்கை மைந்தர்கள்' பாஷையூர் 'இரத்தச் சுவடு' போன் றவை உருவாகி வெற்றி பெற்றன. வீதி நாடகங்கள் ஏராளமானவை உருவாகி அரங்கேறி வந்தன, வருகின்றன. இவற் றில் காலத்துக்குக் காலம் ஏற்பட்டு வரும் போர்க்கள நிலைகளும், மக்கள் நிலையும், தெளிவாக சித்தரிக்கப்பட் டன. சில பாடல்கள் சிரஞ்சீவியாக வும் மாறிவிட்டன. குறிப்பாக

— போராடு போராடுதமிழீழ நாடு
— என்ன வளம் இல்லை எங்கள் தமிழீழ மண்ணில் இன்று....
— வேலி போட்ட கறளிரும்பு......
— பூநகரி வெற்றியைப் பாடிக் கொண்டாடு.....
— இது எங்கள் சமுதாயம்.....

போன்ற நாடகப்பாடல்களும், புதுவை அன்பனின் புகழ் பெற்ற இசைநாடகமான 'கதியை வென்ற சாவுகள்' நாடகப் பாடல்களும் நினைந்து போற்றத்தக்கவை. கேணல் கிட்டு அவர்களின் மரணம், அதன் தன்மை, இந்தியப் படையின் 'அக்கிர மம்' என்பவை பாரம்பரிய நாட்டார் இசை மெட்டிலும் நாட்டார் கலைக ளான 'கும்மி', 'அம்பா' கூத்து வடிவங் களிலும் பூரணமான மண்வாசனை யைக் கொண்டிருந்தது. நாட்டின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பட்டி தொட்டிகளில் எல்லாம் பரி மாறப்படும் கலை வடிவம் வீதி நாடகம், அரங்குகளைத் தேடி மக்கள் வராமல், அரங்கேற்றம் மக்கள் கூடுமிடங்களில் நடத்தப்படுவதால் பெருந்தொகையான மக்களால் கண்டு ரசிக்கப்படுகிறது. இவை மட்டக்களப்பு, மன்னார், வன்னி, முல்லைமணலாறு, யாழ்ப்பாணம் என எங்கும் பரந்துள்ளது.

மட்டு நகரின் கூத்து, இசை என்பன புகழ்பெற்றவை. இவை தனித்துவமான உணர்வாழம் மிக்க மொழி நடையைக் கொண்டனவாகவும் உள்ளன. இவ்வகைக் கூத்துக்களில் இன்று எழுத்து வடிவில் அச்சேறியுள்ளது விஷ்ணுபுத்திர வெடியரசன் வரலாறு. மேலும் தெம்மாங்கு, ஒப்பாரி, தாலாட்டு வசந்தன் என்பவையும் இங்கு பாடப்படுகின்றன.

மன்னாரின் கூத்துக்கள் பெரும்பாலும் கத்தோலிக்கக் கூத்துக்களாகும். எனினும் இன்றைய காலகட்டத்தில் புலவர் குழந்தை, புலவர் கோமேதகம், கலைமேகம், ஞானசீலன் போன்றோர், அரிய கிராமிய இலக்கியங்களை ஆக்கி வருகின்றனர். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தமட்டில் நவீன உத்திகளாலும், பெரும்பாலும் மரபு சார்ந்த படிமங்களூடான படைப்புகளாகவும் இருப்பதால் அவை எமது மண்வாசனையை புதிய வடிவங்களில் வெளிக்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. நாட்டார் கலை என்பதைத் தனித்துப் பார்க்கின் பூரணா வேலுப்பிள்ளை, புதுவை அன்பன் ஆகியோருடன் வடமராட்சிக் கலைஞர்களையும் அது உள்வாங்கியுள்ளது.

முல்லை, மணலாறு, வன்னி என்பவற்றின் பாரம்பரியம் இன்றும் கெடாதுள்ளது. அண்ணாவி முறைகள் அழியாது பேணப்பட்டு வருகின்றன. முல்லை மாவட்டக் கலைப் பண்பாட்டுக் கழகத்தினரால் வீதி நாடகங்கள் கூத்துக்கள் நடாத்தப்படுகின்றன. முல்லைச் செல்வனின் அருமையான பாடல்களும் சரித்திர சான்றாகப் பேணக் கூடியவையே. இன்னும் கிளிநொச்சி. பரந்தன் போன்ற இடங்களிலும் இவை வளர்ந்துள்ளன.

இப்படியான அரிய கலை வடிவங்களைக் கொண்ட நாட்டார் இலக்கியங்கள் வரலாற்றைச் சுமந்து வந்தாலும், வெள்ளையர் போன பின் இன்று வரையான காலப்பகுதியில் தோன்றியிருந்த சகல நாட்டார் இலக்கியங்களும் பத்தறுந்து போயிற்று. இதற்கு நாட்டார் இலக்கியம் என்பதற்கு நாங்கள் விதித்திருந்த தவறான வரையறையும் ஒரு காரணமாகும். தொடர்ந்தும், எதிரிகளால் எத்தனை நூலகங்கள் எரிந்தாலும், எத்தனை கோவில்கள் இடிந்தாலும், எவ்வளவு நகரங்கள் அழிந்தாலும், கிராமிய மக்களின் உணர்வுகளில் கலந்துவிட்ட இக் கலைப் பண்பு அவற்றை மீட்டுத்தர வல்லதாய் என்றும் நிலைத்திருக்கும். ஆனாலும் இவை அச்சுவாகன மேறி பவனி வருதலும் அவசியமாகும். நாமும், எமது அருமையான வாழ்நிலத்தின் வரலாற்றிலிருந்து தோற்றம் பெறும், செப்பரிய மண்வாசனையோடு கூடிய இலக்கியகலை வடிவங்களைப் பாதுகாப்பது எம் சந்ததிக்கு செய்ய வேண்டிய முக்கிய கடமையாகும்.

★★★

# எமது பிள்ளைகள் எங்கே?

அன்புக்குரிய எங்களுடைய பிள்ளைகள் இராணுவத்தினால் கைது செய்யப்பட்டு ஒருவருடத்திற்கு மேலாகியும் அவர்கள் எங்கு இருக்கிறார்கள் என்பது பற்றி எவ்விதத் தகவலும் இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

கைது செய்யப்பட்டவர்களின் பெயர், விபரம் கூட உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எங்கள் பிள்ளைகள் எத்தகைய மனநிலையில் இருக்கிறார்கள் என்பது கூட எமக்குத் தெரியாது. நாங்கள் மிகுந்த மனவேதனையுடன் இந்த விடயத்தைத் தங்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

இராணுவத்தினால் கைது செய்யப்பட்டவர்களில் அரசாங்க தனியார் நிறுவனங்களில் கடமைபுரிபவர்கள், பாடசாலை மாணவர்கள் என பலதரப்பட்டவர்களும் அடங்குகிறார்கள்.

கைது செய்யப்பட்டவர்களின் சுமார் 800 பெற்றோர்கள் உடல் உளரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களது வாழ்க்கை அர்த்தமற்றதாகி விட்டதுடன் வாழ்க்கைக் காலமும் குறைக்கப்பட்டுவிட்டது.

குறைந்த பட்சம் எங்கள் பிள்ளைகள் எங்களுடன் கடித மூலமாகத் தொடர்பு கொள்வதற்கேனும் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அது எமக்கு ஓரளவுக்கேனும் நிவாரணத்தைத் தரும்.

உங்கள் மீதும் இலங்கை இராணுவத்தின் மீதும் வைத்த நம்பிக்கையின் பேரிலேயே பலதரப்புக்களில் இருந்து வந்த எச்சரிக்கை ஆலோசனைகளுக்கு மத்தியிலும் நாம் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் தொடர்ந்து வாழ விரும்பினோம். ஆனால் எங்கள் வாழ்க்கையில் நாம் என்றுமே எதிர்பாரத வகையில் அவலங்களையும் துன்பங்களையும் அனுபவிக்க நேர்ந்துள்ளது. எங்களிடமிருந்து பிரிக்கப்பட்ட பிள்ளைகள் மீண்டும் எம்முடன் வந்து சேர்வதற்கு உதவுமாறு தங்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அரசாங்கம் எங்களுக்கு நன்மை செய்யும் என்று நம்பி அதற்கு எங்களாலான ஒத்துழைப்புக்களை வழங்கினோம்.

உலகத்திலுள்ள ஏனைய பிள்ளைகள் போல எங்கள் பிள்ளைகளும் எங்களுடன் மகிழ்ச்சியாக வாழ உங்களாலான நடவடிக்கைகளை எடுப்பீர்களென நம்புகிறோம்.

எங்கள் பிள்ளைகள் பாடசாலை சென்ற நாள்களிலும் பணிபுரிந்த நாள்களிலும் இராணுவத்தினரால் அவர்களின் தடைமுகாம்களிலேயே எங்கள் கண்முன்னாலேயே கைது செய்யப்பட்டார்கள். அவர்கள் வெளிநாடு செல்லவுமில்லை; விடுதலைப்புலிகளுடன் சேரவுமில்லை.

(ஆக்கிரமிக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டில் சிங்கள இராணுவத்தினிடம் தமது பிள்ளைகளை இழந்த தமிழ்ப் பெற்றோர் சிறீலங்கா ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்திலிருந்து...)



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அன்னியமாகிப்போன நண்பர்கள்

இராணுவ வண்டி பிரதான வீதியில் ஏறுவதற்காக அவர்கள் வசித்த வீட்டின் ஒழுங்கையால் சென்று கொண்டிருந்தது. அந்த ஒழுங்கையிலிருந்த வீடுகள் அனைத்துமே ஒருவருக்குச் சொந்தமானது. கிழவர் தனது நான்கு புதல்வர்களுக்கும் மூன்று பெண்களுக்குமாக ஏழு வீடுகளை அந்தப் பெரியவத்தையில் கட்டிக்கொடுத்திருந்தார். அவரது பேரர்கள், இராணுவ வண்டியில் பலமாகத் தட்டியும், பெரிதாகச் சிரித்தபடியும், அதன்பின்னே விரைந்து நடைபோட்டுக்கொண்டிருந்தனர். ஒழுங்கை சற்றுக் குறுகலானதால் இராணுவ வண்டியின் வேகம் அவர்களது நடையுடன் ஒத்திருந்தது. அவன் தலையைக் கவிழ்ந்தபடி வண்டிக்குள் இருந்தான். அவர்கள் அனைவருடைய பார்வைகளும், வண்டிக்குள் இருந்த அவனையும் அவனது சுற்றத்தவர்களையும் குறிவைத்துப் பார்த்தபடி இருந்தன. அவன் அவர்களைக் கடைக்கண்ணால் ஒருமுறை பார்த்தான். அவர்களது முகத்தில் கடுஞ்சினம் தெரியவில்லை. ஆனால் அவற்றில் கேலியும் கிண்டலும் இருந்தன.

"ராஜ கமேட்ட ஜனவத" என ஒரு குரல் கேட்டது. "ஒக்கமலா ஜனவத" வேறொரு குரல் சிரிப்பு அட்டகாசமாக மாறியது. இராணுவ வண்டி ஊர்ந்து கொண்டிருந்தது. அவனுக்கு ஒருயுகம் கழிவது போலிருந்தது.

கடைசியில் ஒரு வழியாக வண்டி ஒழுங்கையை விட்டு விலகி வலப்புறமாகத் திரும்பி, பிரதான வீதியில் ஏறி விட்டது. கிழவரின் பேரன்மார் மெயின் வீதியில் சிறிது தூரம் இராணுவ வண்டியின் பின்னால் ஓடிவந்தார்கள். வண்டியின் வேகம் மேலும் அதிகரிக்கவே, அவனுக்கு அவர்களது உருவங்கள் தொலைவாகி கடைசியில் வீதியின் ஒரு வளைவில் மறைந்தும் விட்டன. அவன் சற்று நிம்மதியடைந்தான்.

அந்த வீட்டிற்கு மாமாவின் குடும்பம் வந்து ஒரு வருடமாகிறது. கிழவரின் கடைசி மகனான இராஜபக்ஷ, மாமாவின் கந்தோரில் வேலை செய்பவர். அந்தப் பழக்கத்தால் கிடைத்த வீடு. கிழவரின் கடைசி மகளுக்கு எனக் கட்டியது. அவளுக்குத் திருமணம் ஆகும் வரை இருக்கலாம். அதுதான் ஏற்பாடு.

வீட்டிற்கு வந்த அன்றே கிழவரின் பேரன்மார்களில், அவனது வயதை ஒத்தவர்கள் எல்லோரும் அவனுடன் ஐக்கியமாகிவிட்டார்கள். அவர்கள் கிழவரது வத்தை சற்று விசாலமானது. கொழும்பில் அவ்வளவு பெரிய வத்தை இருப்பது அபூர்வம்தான். சுனிலின் வயதை ஒத்த பேரப்பிள்ளைகளைத் தவிர வேறு பராயங்களிலும் கிழவருக்கு பேரப்பிள்ளைகள் இருந்தனர். அவனுக்கு



ஐந்து பேரோ, ஆறு பேரோ அவனுக்கு சரியாக ஞாபகமில்லை. சுனில் மட்டுமே உருவத்திலும் சரி, பெயரிலும் சரி அவனுக்கு இப்போது ஞாபகத்தில் இருக்கிறான். தறுத்த உருவமும், உருண்டை முகமும், உருண்டைக் கண்களும், முள் போல் நிற்கும் மயிர், படியவே படியாது. வெதமாத்தையாவான அந்தக்

**சு. மகேந்திரன்**

அவர்கள் பலருடைய உருவங்களை இப்போது நினைவுக்குக் கொண்டு வர முடியவில்லை. அவர்களில் ஒருவனது ஞாபகம் சற்று இருக்கிறது. அந்தப் பேரன் கிரிக்கட் பந்தை துணியில் சுற்றி, அதனை ஒரு வளைந்த மரத்தில் கயிற்றில் தொங்கவிட்டு, பின் கிரிக்கட் மட்டையால் அதனை ஒரு மணிக்கணக்காக அடித்தபடி இருப்பான். வத்தை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

விசாலமானது ஆயினும், வீடுகளும் அவற்றினைச் சூழ அடர்த்தியான மரங்களும் இருந்ததால், கால் பந்தோ அல்லது கிரிக்கெட்டோ அங்கு விளையாட முடியாது. ஒழுங்கையில் மட்டும் ஓட்டப் பந்தயங்கள் நடத்தலாம். அங்கு கூட கிரிக்கெட் விளையாட முடியாது, ஒருமுறை விளையாடி கிழவரின் மூத்த மகனின் வீட்டின் ஜன்னல் கண்ணாடி உடைந்து, பெரிய ரகளையாகிப் போய்விட்டது. பந்தை அடித்தவன் அவன் என்பதால், மாமா புதிதாகக் கண்ணாடி போட்டுக் கொடுத்தார்.

தோட்டத்தின் நடுவே கிழவரது வீடு. இறாக்கைகளில் அடுக்கடுக்காக பச்சைநிற வழுவழுப்பான எண்ணை வகைகள் பெரிய போத்தல்களில் அடுக்கப்பட்டிருக்கும். அந்தப் பெரிய வீடும் சுனிலுக்குத்தான் சேருமாம்; மற்றப் பேரப்பிள்ளைகள் சொல்வார்கள். அதில் அழுக்காறு இருந்ததை அவன் அவதானித்திருக்கிறான். சுனிலின் தகப்பனார் ஒரு விபத்தில் இறந்துவிட்டாராம். கிழவரின் அனுதாப அலை சுனிலின் மேல்தானாம். அந்தப் பகுதி இப்போது பெரிதும் மாறுபட்டிருக்கும். வேறு பல வீடுகளும் கிளை ஒழுங்கைகளும் அங்கு உருவாகி இருக்கும். வைத்தியசாலை கைவிடப்பட்டிருக்கும். சுனில் பெரிய வீட்டில் பிள்ளை குட்டிகளுடன் இருப்பான்.

சுனில் பலமுறை அவனைக் கிழவரது வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கிறான். "ஆ புத்தா" இந்த இரண்டு சொற்களுமே கிழவரிடமிருந்து அவனை நோக்கி வரும். கிழவரிடம் வைத்தியம் செய்ய தூர இடங்களிலிருந்து எல்லாம் வருவார்கள். ஓய்வே இல்லாமல் இருப்பார் வைத்தியர்.

ஒரு வருடத்திற்கு முன் அவனது ஊரின் பழைய விதானையார், கால் முறிவுக்கு வைத்தியம் செய்ய அங்கு வந்திருந்தார். எப்போதும் பூட்டியே வைத்திருக்கும் "கொமேட்" வைத்த மலசல கூடத்தை, அவரது காலின் நிலைமை கருதி மாமி திறந்துவிட்டாள். "இது என்ன ஊறுகாய்ச் சாடி போல் இருக்கிறது, இதற்குள்ளா கக்கூசுக்குப் போவது" என்றார் விதானையார். அவர் ஊருக்குச் சென்று பல காலம் சென்றும்கூட, ஞாயிற்றுக் கிழமைகளில் சீட்டு விளையாட வரும் தன் நண்பர்களிடமெல்லாம் தொடர்ந்து இந்தச் சம்பவத்தை மாமா சொல்லுவார். ஆரம்பத்தில் எல்லோரும் சிரித்தார்கள். நாட்கள் செல்ல தானே ஜோக் சொல்லி தானே சிரிப்பார் மாமா. மற்றவர்கள் இதனைப் பொருட்படுத்தாமல் சீட்டில் கவனம் செலுத்துவார்கள்.

சுனிலும் அவனும் எப்போதும் ஒன்றாகவே திரிவார்கள். சுனிலின் அம்மா ஒரு சில்லறைக் கடை வைத்திருந்தாள். தகப்பன் இல்லாததால் கண்டிப்புக்கள் அற்ற நிலையில், அவனது தாயார் எவ்வளவுதான் நாயாகப் படிக்கும்படி கத்தினாலும், அவை எதுவுமே சுனிலின் காதுகளில் ஏறாது. எந்த நேரமும் அந்தப் பெரிய வத்தையிலுள்ள 'ஜம்பு' மரங்களிலோ 'அம்பரெல்லா' மரங்களிலோ அவன் இருப்பான். மற்ற வீட்டுப் பையன்கள் பின்னேரங்களில் மட்டுமே, இராணுவ வாகனம் வந்த அந்த ஒழுங்கைக்கு வருவார்கள்.

அவன் ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியே வரமுடியாது. மாமா கணித வாய்ப்பாடு கேட்டுக்கொண்டோ, ஆங்கிலச் சொற்களுக்கு 'ஸ்பெலிங்' சோதனை வைத்தபடியோ இருப்பார். சனிக்கிழமைகளில், அந்தக் காலத்தில் கந்தோர்கள் அரை நேரமாக இயங்கிக்கொண்டிருந்தன. அவனை மாமா தனது கந்தோருக்கு கூட்டிக்கொண்டு போய் விடுவார். சும்மா இருப்பதற்காக அல்ல. கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் கணக்குகள் செய்வதற்காகத்தான் பத்துமணிக்கு கந்தோரிலிருந்து 'கன்ரீனி'ல் இரண்டு வடையும் பால்தேனீரும் மாமா வாங்கித் தருவார்.

'ஒப்ஸேவர்' 'சண்டே ரைம்ஸ்' என்பன மட்டுமே வந்துகொண்டிருந்த அவர்களது வீட்டிற்கு, 'கான்சாட்' என்ற ஆங்கிலப் புத்தகம் வரத்தொடங்கி இருந்தது. 'சூரியக்கதிர்' இராணுவ நடவடிக்கையால், அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு இடம் பெயர்ந்து வரும்வரை, அந்தப் புத்தகங்கள் அடங்கிய தொகுப்பு ஒன்று அவனது மாமாவிடம், பல இடப் பெயர்வுகளின் மத்தியிலும் பாதுகாப்பாக இருந்தது. அந்தக் காலங்களில், பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு பேசிய பேச்சுக்களைக் கொண்டு அந்தத் தொகுப்பை மாமாவும், சித்தப்பாவும் ஆழ்ந்துபடித்து விவாதங்கள் செய்ததாக ஞாபகம். இராஜபக்ஷவோ அல்லது வேறு சிங்களவர்களோ வீட்டிற்கு வந்தால் விவாதத்தை சட்டென முடித்துவிடுவார்கள். மாமா, 'கான்சாட்' வாங்கிய காலத்திலிருந்து மாமாவுக்கும் இராஜபக்ஷவுக்கும் இடையே ஒரு திரை விழுந்துவிட்டதையும், இருவரும் பொய்யாகவே சிரிப்பதையும் அவன் அவதானித்திருக்கிறான். 'பண்டார நாயக்க' என்ற பெயர் வீட்டில் அடிக்கடி பேசப்பட ஆரம்பித்தது.

பின்னேரங்களில் இராஜபக்ஷ அடிக்கடி வீட்டிற்கு வருவார். அவரது வருகை வெள்ளிக்கிழமைகளில் தப்பாது. மாமி, வெள்ளிக்கிழமைகளில் தவறாது தோசை சுடுவா. இராஜபக்ஷவுக்கு தோசை என்றால் அலாதியான ஆசை. சாப்பிட்டுவிட்டு நீண்டநேரம் கதைத்துக் கொண்டிருப்பார்கள்.

சுனிலும், அவனும் சேர்ந்து திரிவது பாடசாலை நாட்களில் அதிகம் சாத்தியமாவதில்லை. தவணைப் பரீட்சைகளில் நல்ல புள்ளிகள் பெற்றுவிட்டால் போதும். லீவில் படிபடி என மாமா தொந்தரவு செய்யமாட்டார். இரவில் படித்தால் போதும் சுனிலும் அவனும் லீவு நாட்களில் ஒன்றாகவே திரிவார்கள். ஒழுங்கைக்குப் பக்கமாக ஒரு வாய்க்கால் ஓடியது. அதில் எந்த நேரமும் தண்ணீர் ஓடியபடி இருக்கும். தண்ணீர் எங்கிருந்து வருகிறது என அறிய இருவரும் முற்பட்டார்கள். போகப்போக பாதை மேடாகிப் போய்க் கொண்டிருந்தது. ஒரு மைல் போயிருப்பார்கள். ஒரு வீட்டின் பூந்தோட்டத்தில் 'சீனியாஸ்', 'செவ்வந்தி' என பூமரங்கள் பூத்துச் சொரிந்து கொண்டிருந்தன. தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்பதை அறிய வந்தவர்கள், அதனை மறந்துவிட்டனர். வீட்டுக் 'கேற்' திறந்தே கிடந்தது. இருகைகளிலும் நிறைந்த பூமரங்களைப் பிடுங்கிக்கொண்டு, அவர்கள் ஓட்டம் பிடித்தனர். வேர்களில் நிறைந்த மண்கட்டிகளுடன் கூடிய பூமரங்களுடன் அவர்கள் ஓடுவதைப் பார்த்த பக்கத்துக் கடைக்காரர்களும், சிறிய வீட்டு வாசிகளும் அவர்களது ஓட்டத்தை வேடிக்கை பார்த்தனர். நல்லவேளையாக அவர்களை ஒருவரும் வீட்டுக்காரனிடம் பிடித்துக் கொடுக்கவில்லை. "துவண்ட துவண்ட" எனக் குரல்கள் கேட்டன. பின் நாட்களில் அவனது வீட்டை அம்மாவை ஏமாற்றி அறுதியாக எழுதிக் கொண்ட அவனது ஊரின் பெரிய வீட்டுக்காரன் போன்றவனோ இவனும். ஏதோ முரண்பாடு அயலவர்கட்கும், அந்த வீட்டுக்காரனுக்கும் இருந்ததால்தான் அவர்கள் அன்று தப்பித்தார்கள்.

வாடிப்போய்விட்ட பூஞ்செடிகளுடன் வீடு வந்து சேர்ந்தார்கள். நட்ட எவையுமே திரும்பவும் பூக்கவில்லை. ஆணிவேர் அறுந்துவிட்டது எனச்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சுனில் சொன்னான்.

ஒருமுறை மட்டுமே சுனிலும் அவனும் சண்டையிட்டிருக்கிறார்கள். 'ரஞ்சன்' நடித்த 'மங்கம்மா சபத 'த்தின் சிங்கள மொழியாக்கம் தான் 'மாத்தளங்' ஒரே வாள் சண்டைகள் நிறைந்தபடம். வகுப்பில் எல்லாளன் துட்டகைமுனு யுத்தம் பற்றி சுனில் படித்திருக்கிறான் போலிருக்கிறது. ஒருநாள் இரண்டு தடிகளை எடுத்தான். சுனில் தன்னை துட்டகைமுனு என வரித்துக் கொண்டான். இவன் எல்லாளன். அவர்கள் 'தடிகளால்' வாள்சண்டை செய்தனர். சண்டை விளையாட்டாக ஆரம்பித்துப் பின் சீரியசாகப் போய்விட்டது. சூது செய்துதான் துட்டகைமுனு, எல்லாளனை கொன்றதாகச் சொல்வார்கள். சுனில் அவனைக் கொல்லவில்லைத்தான். ஆனால் இந்தச் சண்டை அவர்களது மனதில் ஒரு வகையான வேறுபாட்டை ஏற்படுத்திவிட்டது. சண்டை முற்றி வாக்குவாதச் சத்தம் கேட்டு, மாமி அவனை வீட்டுக்குள் அழைத்துச் சென்று மாமா வரும்வரை ஒரு அறையில் பூட்டி வைத்தாள்.

இது நடந்த அடுத்த நாளும் அவன் சுனிலுடன் சுற்றியபடியேதான் இருந்தான். அப்படித் திரிந்தாலும் கூட சுனில் அவர்களுடையவன் அல்ல. அன்னியன் என்ற உணர்வு அந்தச் சண்டையின் பின் அவனுக்கு சுனில் பற்றி ஏற்பட்டிருந்தது.

நல்லவேளை பெரிய சித்தப்பா போன கிழமை யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து வரும் போது ஒரு காலுடன் வந்தார். போகும் போது இரண்டு கால்களும் இருக்கவில்லை. புதுமையான வியாதி அவருக்கு. 'கங்கரின்' வருத்தம் இலட்சத்தில் ஒருவருக்குத்தான் வருமாம். 'சுலைமான்' ஆஸ்பத்திரியில் ஒப்பரேசன் நடந்தது. மாமியின் கழுத்திலிருந்த இரண்டு செயின்களில் ஒன்றைக் காணவில்லை.

சில நாட்களாக நிலைமை வழமையானதாக இல்லை எனத் தெரிந்தது. ஓட்டப் பந்தயங்கள் ஒழுங்கையில் நடந்தன. மாமி அவனைப் போக விடவில்லை. எல்லோரும் இடைவிட்டு நின்று ஓடுவதற்கு அந்த ஒழுங்கையில் இடம் இல்லை. சில காலமாக (முன்பெல்லாம் இல்லை) விளையாட்டுக்காகச் செய்வதுபோல், ஓடும் போது அவனை நெரித்துத் தள்ளுவது, கால் தடக்குப் போடுவது போன்றவை நடைபெறுகின்றன. ஓட்டப் பந்தயங்களை வேடிக்கை பார்க்கும் கிழவரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும், முன்பு போல் அவனுடன் பழகுவதில்லை என்ற ஒரு ஐயப்பாடு அவனுக்கு சமீபகாலமாக ஏற்பட்டிருந்தது. சென்ற கிழமை அவன் வீழ்த்தப்பட்டபோது அந்தப் பெண்கள் சிரித்தார்கள். நொண்டியபடி வீடு போய்ச் சேர்ந்தான். முழங்காலில் சிராய்ப்பு ஏற்பட்டால் இலேசில் மாறாது. மாமி காயங்களுக்கான சர்வரோக நிவாரணியான பொரித்த எண்ணையை அவனது கால்களுக்குப் போட்டு வருகிறாள். முறுகல் நிலை மாறினால் இரண்டு நாட்கள் கழித்து ஓட்டப் பந்தயங்களில் கலந்து கொள்ளலாம் என அவன் நினைத்தான்.

முந்தநாள் நிலை மேலும் மோசம் அடைந்தது. புறக்கோட்டையிலுள்ள தமிழ்க் கடைகள் எரிக்கப்பட்டதாக வேலையிலிருந்து வந்த மாமா சொன்னார். இருவரும் வியர்த்து விறுவிறுத்து வந்தனர். பார்க்கப் பாவமாக இருந்தது. தமிழர்களும் சும்மா இருக்கவில்லையாம். எண்ணெயைக் காச்சி ரவுடிகளின் முதுகில் ஊற்றினார்களாம். பஸ்களில் தலையை முகர்ந்து பார்த்து நல்லெண்ணெய் மணம் அடித்தால் தாக்குகிறார்களாம். (சிங்களவர்கள் தேங்காய் எண்ணெய் வைப்பவர்கள்). மாமாவும், சித்தப்பாவும் 'யாட்லி வஸ்லின்' தலைக்கு வைப்பவர்கள். பெரும்பாலான உத்தியோகம் பார்க்கும் சிங்களவர்கள் போல், இருவரும் 'கிளீன் சேவ்' செய்பவர்கள். அது தமக்கு அனுகூலமாக இருந்தது எனப் பேசிக் கொண்டார்கள். பஸ்சில் தம்மையும் விசாரித்தார்களாம். இருவரும் வாளிக்குரிய சிங்களச் சொல்லை பிழையின்றி உச்சரிக்கத் தெரிந்திருந்தது. நல்ல வேளையாக தம்மை பௌத்த மதபாளிப் பாராயணங்களை ஒப்புவிக்கச் சொல்லவில்லை என்றார்கள். பலர் 'டயர்' போட்டு எரிக்கப்பட்டதாகப் பஸ்சில் பேசிக் கொண்டார்களாம். மாமா சொன்னார்.

நேற்று எல்லோரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடந்தார்கள். சுனில், தோட்டத்தில் இருந்த மரமுந்திரிகை மரங்களில் ஏறி முந்திரிப் பழங்களைச் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். கால் சட்டைப் பைகள் இரண்டிலும் முந்திரிகைக் கொட்டைகள் நிறைந்து அவை பிதுங்கிக் கொண்டிருந்தன. இனி, முந்திரிகைக் கொட்டைகளைச் சுட்டு பாலையும் தோலையும் நீக்கி உண்பான். வீட்டைவிட்டு வெளியேறாமல் இருந்த அன்று அவனுக்கும் சுனிலுக்கும் இடை





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வெளி மிகவும் பெரியது என்ற எண்ணம் ஏற்பட்டது. அன்று ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்ததால் யாருமே பாடசாலைக்குச் செல்லவில்லை. சுனிலிற்கு அது ஒரு ஞாயிற்றுக் கிழமை போல் இருந்திருக்கும். இவனோ, வீட்டைச் சிறைக்கூடமாக்கி உள்ளே இருந்தான். மாமா சிறு துயில் கொள்ளும் மத்தியான நேரங்களில் அவனை விளையாட அழைக்கத் தயங்கி வீட்டுக்கு வரும் சுனில், அன்று அவர்கள் வீட்டுப் பக்கம் வரவேயில்லை.

முந்தநாள் இரவிலிருந்து அவனுக்கு அந்த ரயில் பயணத்தின் நினைவுகள் அடிக்கடி ஞாபகத்திற்கு வந்துகொண்டே இருந்தன. அதில் தான் அவன் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்தான். ஏழு பேருடன் கூடப் பிறந்த அவனுக்கு மட்டும் தான் குடும்பத்தில் படிப்பு வரும் போலிருந்தது. படிப்புடன் கடுமையான குழப்படி காரனாகவும் அவன் இருந்தான். கண்டிப்புக்கார மாமனாருடன் இருந்தால் முன்னுக்கு வந்துவிடுவான் எனஅனுப்பி வைத்தனர் அவனது பெற்றோர்கள். நீராவியில் இயங்கும் அந்த ரயில் காலை ஆறுமணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டது. மாலை ஆறு மணிக்குத்தான் கொழும்புக்கு ரயில் வந்து சேர்ந்தது. வாழை இலையில் சுற்றப்பட்ட இடியப்பமும், 'உருளைக்கிழங்குப் பிரட்டல்' கறியும் அலாதியான சுவையுடையதுதான். நிலைமையைப் பார்த்தால் எல்லோரும் ஊருக்குப் போவதைத் தவிர வேறு வழியில்லைபோல் இருக்கிறது. தன்னுடன் 'பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் படிக்கும் சக மாணவர்கள் ஒவ்வொருவரையும் அவன் நினைத்தான். மொரட்டுவைப் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாக வீட்டில் கதைக்கிறார்கள். முருகானந்தம் அங்குதான் வசிக்கிறான். வகுப்பில் பக்கத்திலிருந்து கற்பவன். அவனது இணைபிரியா பள்ளி நண்பன். அவனுக்கு என்ன நடந்ததோ. இங்குகூடப் பாதுகாப்பு இல்லை. ஒன்றும் இல்லாமல் சகஜமாக இருந்த காலத்திலேயே கிழவரது தோட்டத்திற்கு சற்று அப்பால் வாழ்ந்து வந்த முரடர்கள் போல் தோன்றும் அந்தச் சிங்களவர்களைப் பார்த்தாலே அவனுக்கு பயமாக இருக்கும். அத்துடன் அயலில் உள்ளவர்களில் பலர் கிழவருடன் தீராத பகைமை கொண்டவர்கள். அவர்களும் கிழவரும் அரசியல் எதிரிகளாம்.

அவர்கள் இந்த இடத்திலிருந்து எப்படி ரயில் நிலையத்துக்குப் போய், ஊருக்கு போகப்போகிறார்கள். அதை நினைக்க அவனுக்குப் பயமாக இருந்தது. போகும் வழியில் எப்படியும் அடித்துக் கொன்று விடுவார்கள். தப்பித் தவறி ரயில் நிலையத்தை அடைந்து விட்டாலும் கூட, யாழ்ப்பாணம் எங்கே? கொழும்பு எங்கே? ரயில் செல்லும் இடமெல்லாம் சிங்கள ஊர்கள். அவர்கள் தப்பவே முடியாது. இது முடிவுதான். அப்பா அனுப்பும் 'அம்புலி மாமா' புத்தகத்தில் வரும் தேவதை ஒன்று வந்து அவர்களைக் காப்பாற்றினால்தான் உண்டு. எதற்கும் நாளை காலையில் தலையில் முழுகிவிட வேண்டும். நல்லெண்ணெய் மணம் போய்விடும். மாமாவுக்குத் தெரியாமல் வஸ்லின் வைக்கலாம். அல்லது மூலிகைகள் போட்டு கொதிக்க வைத்த மாமியின் தேங்காய் எண்ணெயை வைக்கலாம். சித்தப்பாவிடம் துருவித் துருவிக் கேள்விகள் கேட்பவன் அன்று பேசாமல் இருந்தான். அவர்களே என்ன செய்வது எனத் தெரியாது இருக்கும் இந்த நேரத்தில் கேள்விகள் கேட்டால், அடிகூட விழலாம். அம்மாவின் நினைவு அவனுக்கு அடிக்கடி வந்தது. இங்கு நடப்பது அவர்கள் எல்லோருக்கும் தெரிந்திருக்கும். வழமையாக ஒன்பது மணிச் செய்தியை மட்டுமே தவறாமல் கேட்கும் மாமா, நேற்று ரேடியோவின் பக்கத்திலேயே கிடந்தார். மிகவும் மெல்லிய தொனியிலேயே ரேடியோ கலவரம் பற்றிய செய்திகளைக் கூறிக்கொண்டிருந்தது. ரேடியோவை பலமாக வைக்கக்கூடாதாம். பக்கத்தில் வசிக்கும் முரடர்களுக்கு நன்கு தெரியும். மாமா கூறுவதும் சரிதான். சும்மா இருப்பவர்களை பலமான தொனியில் தமிழ் ஒலிபரப்புகளை வைப்பது உசுப்பியும் விடலாம். அம்மாவும் பெரிய சித்தப்பா வீட்டுக்குப் போய் ரேடியோ கேட்டுக்கொண்டிருப்பாள். அவனை அம்மா கொழும்பிற்கு அனுப்பிவைத்த போது, "நான் சொல்வதைக்கேள் எந்தக் கஷ்டத்திலும் பிள்ளைகள் பெற்றோரிடம்தான் இருக்க வேண்டும்" என சின்னம்மா கூறிக் கொண்டே இருந்தாள். இப்போது அம்மாவை ஏசியபடி இருப்பாள் சின்னம்மா.

நேற்று இரவு குண்டுச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின. "எட்மண்டன் தெருவில் வீடுகளை எரிக்கிறார்கள் போல் இருக்கிறது" என்றார் ராஜபக்ஷ, "லைற்றை அணைத்து விட்டு இருங்கள் விடிந்ததும் ஏதாவது செய்யலாம்" எம்மைப்பற்றியும் தங்களது வீடு பற்றியும் அவருக்கு கவலை வந்துவிட்டது என்பது அவரது பேச்சிலிருந்து தெரிந்தது. எட்டு வீடுகளின் நடுவே அவற்றில் எல்லாம் மின்விளக்குகள் பளிச்சென்று ஒளிர அவனது வீடு மட்டும் இருளில் அமிழ்ந்திருந்தது.

அன்று எல்லோரும் மாமாவின் அறையில் ஒன்றாகப் படுத்தனர். எல்லோரும் ஒன்றாக இருந்தால் பயப்பிராந்தி குறையும் என்ற உணர்வோ என்னவோ, அன்று மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் சோறு சாப்பிட்டார்கள். அவர்கள் அந்த வீட்டுக்கு வந்த காலத்திலிருந்து அன்று மட்டும் தான் வெள்ளிக் கிழமைத் தோசை சாப்பிட ராஜபக்ஷ வரவில்லை.

காலையில் ராஜபக்ஷ வந்தார். "மிஸ்ரர் அருணாச்சலம் ஐ மேட் ஓல்தி அரேஞ்மென்ற்ஸ் வித் கிரேட் டிபிக்கல்றி" என்றார். தளபாடச் சாமான்கள் அப்படியே இருக்கட்டும் நாங்கள் பார்த்துக்கொள்வோம். பெறுமதியானவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும் சிறிது நேரத்தில் இராணுவ வாகனம் வரும். வெள்ளவத்தைக் கோயிலை 'ரிபூயீஸ்காம்' பாக மாற்றி உள்ளார்கள். நேற்றிரவு எட்மண்டன் தெருவில் நான்கு ஐந்து பேரைக் கொன்று விட்டார்கள். நீங்கள் இங்கிருப்பது பாதுகாப்பானதல்ல. அவர் அதற்குப் பின் கதைத்தது இந்த வகையில் இருந்தது. 'நீங்கள் இங்கிருப்பது எங்கள் வீட்டிற்கும் பாதுகாப்பானது அல்ல.' ஆனால் இதனை அவர் வெளிப்படையாகச் சொல்லவில்லை. பக்கத்திலிருக்கும் முரட்டு மனிதர்களைப் பற்றி மட்டும் கூறினார்.

சிறிது நேரத்தின் பின் இராணுவ வண்டி வந்தது. வண்டியின் பின் கதவை ஒரு இராணுவத்தான் திறந்துவிட்டான். படாரென்ற சத்தத்துடன் அது விழுந்தது. எப்படி ஏறப் போகிறோம் என அவன் நினைத்தான். ஒருவன் மாமாவையும் சித்தப்பாவையும் தூக்கி விட்டான். அவனையும், மாமியையும் ராஜேஸ்வரியையும் மாமாவே தூக்கி வண்டிக்குள் விட்டார். நல்லவேளை அன்னியனான அந்த இராணுவத்தான், எங்கே மாமியையும் ராஜேஸ்வரியையும் கைதொட்டு தூக்கி எடுக்கப் போகிறானோ எனச் சடுதியாக, ஆனால் இயல்பாகவே அவனுக்கு ஏற்பட்ட எண்ணம் நடைபெறவில்லை.

தொடராக வந்த சிந்தனையிலிருந்து அவன் விடுபட்டபோது, இராணுவ வண்டி அகதி முகாமுள் நுழைந்து கொண்டிருந்தது.

★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# நான் நலம்; மிகுதி நேரில்!

"அன்பின் அப்பா அம்மா அக்கா பிள்ளைகள் யாவருக்கும் எழுதிக் கொள்வது. நான் சுகமே உள்ளேன் தங்கள் நலனுக்கும் முதலைக்குழி முருகன் அருள் புரிவாராக. மேலும்......"

பேனா அதற்கு மேல் எழுது தாளில் ஓட மறுக்கிறது. எதை எழுதுவது? எப்படி எழுதுவது?

ஏராளமான விசயங்கள் மனதுக்குள் எழுந்து நிற்பதும், ஒன்றுடன் ஒன்று பிணைபட்டு மோதித் தெறித்து சிதைந்து போவதுமாக மனம் குழப்பத்தால் நிறைக்கப்படுகின்றது.

'கடிதம் எழுதுவது எப்படி, என்று எட்டாம் வகுப்பில் பொன்னையா வாத்தியார் சொல்லித் தந்தவை இன்னும் அவன் மனதில் பசுமையாக நிற்கின்றன. ஆனால் அவையெல்லாம் இன்று இக்கடிதத்தை ஏன் எழுத உதவ மறுக்கின்றன?' "எமது வாழ்வும் கல்வி முறையும் ஒன்றுடன் ஒன்று தொடர்பற்றே இருக்கின்றன" என்று யாரோ சொன்னது உண்மையாக இருக்கும் எனவும் ஒரு எண்ணம் அவன் மனதில் எழுந்து மறைகின்றது.

காலில் ஏதோ ஊருவது போன்ற உணர்வு; திடுக்கிட்டு எழுந்து உள்ளங் காலைப் பார்க்கிறான் அவன். எதுவுமில்லாததால் மனம் சற்று நிம்மதியடைகின்றது. நைந்து போன பாயின் மூலையில் கிளம்பிக் கிடந்த ஒரு ஓலை தான் அவன் உள்ளங்காலை வருடியிருக்க வேண்டும் என்ற எண்ணம் அங்கு உலவும் முன்பின் அறியாத ஜீவராசிகள் பற்றிய பயத்தைப் போக்க, மீண்டும் பாயில் முகங்குப்புறப் படுத்துக் கொள்கிறான். தலையைத் தாங்க வேண்டிய தலையணை நெஞ்சுக்கும் பாய்க்கும் இடையில் ஒரு உயரத்தை ஏற்படுத்த, பாயின் நுனியில் வைத்திருந்த எழுதுதாள் மீது உறங்கிக் கொண்டிருந்த பேனாவை அவன் மீண்டும் கையிலெடுக்கிறான்.

மீண்டும் எதை எழுதுவது என்ற பிரச்சனை பூதாகாரமாக எழுந்து நிற்கின்றது.

கடிதத்தில் எழுதும் விஷயங்கள் சில சமயங்களில் கொடிய பூகம்பமாயும் உருவெடுக்கலாம்; ஆள் விழுங்கிப் பேயாகவும் மாறலாம் அல்லது யாராவது ஒருவரைக் காணாமற் போன பட்டியலில் சேர்க்கவும் செய்யலாம்.

வீட்டுக் முன்னால் நின்ற பாலை மரத்தில் கண்களிற் படாமல் குடியிருந்து சீழ்க்கை அடிக்கும் சில் வண்டின் ஒலி காதைத் துளைக்கிறது. பாலை மரத்திற்குக் கீழ் மலைச் சிகரங்களைப் போல் ஒழுங்கற்று வளர்ந்து கிடந்த புற்றுகளை வெட்டிச் சமன்படுத்திக் கொண்டிருந்த போது சீறிப்பாய்ந்த பாம்பை மண்வெட்டியால் அடித்துக் கொன்றது ஏனோ நினைவுக்கு வருகின்றது. கண்டங்கருவளை அடுத்த கொட்டிலில் குடியிருக்கும் ராமையா, "ஒரு கண்டங்கருவளையை அடித்தால் ஏழு பாம்புகள் வரும்'' என்று சொன்னதும் உண்மையாயிருக்கும் போலவும் தோன்றியது. ஏதோ சிறு தகரப் பேணியை எடுத்து சைக்கிள் வால் கட்டையை அதன் மூடியில் செருகித் திரி போட்டுக் கொழுத்திய அக்கை விளக்கின் ஒளியில் குடிசையின் மூலை முடுக்குகளைப் பார்த்தான். ஆனால் கிடுகுச் செத்தைக்குள்ளும் பாம்புகள் இருக்கக் கூடும் என்ற பயமும் இடையிடையே தோன்றாமலில்லை.

பாம்புகளும், நுளம்புகளும், மழையும், காட்டு வாழ்வும் மனத்தை அலைத்த போதிலெல்லாம் அவன் பல சமயம் சலிப்புக்குள் தள்ளப்படுவதுண்டு. அப்படியொரு நாள் மனஞ் சோர்ந்து கதைத்துக் கொண்டிருந்த போது தான் சிவலிங்கம் சொன்னான். "மச்சான் வவுனியாவுக்குப் போய் அதாலை திருகோணமலையிலை கப்பலேறி யாழ்ப்பாணம் போகலாமாம்''.

பிறந்த மண்ணுக்குப் போக உறவுகளுடன் கூடி வாழ யாருக்குத் தான் ஆசையில்லை?

அவன் சிவலிங்கத்தை நிமிர்ந்து பார்த்தான்.

மாயமானாகக் காட்டுக்குள் வந்து இராமனை எங்கெங்கோவெல்லாம் கொண்டலைந்த மாரீசனின் ஞாபகம் வந்தது, சீதை இராமன் கீறிய கோட்டைத் தாண்டவில்லை. அவனது குடும்பத்தினரும் தங்களுக்குத் தாங்களே கீறிய கோட்டைத் தாண்டவில்லை. என்றாலும் இப்போ இரு பகுதியினரும் அசோகவனத்தில்!

இராமன் தானும் போய் அசோக வனத்திற்குள் மாட்டுப்பட்டிருந்தால் எப்படியிருக்கும் என்பதை நினைத்த போதே பயம் மனத்தை உலுப்பியது.

ஒரு பெரும் காவியமே இல்லாமல் அல்லவா போயிருக்கும்.

விஷப்பாம்புகள் எவ்வளவோ பரவாயில்லை போலவும் தோன்றுகின்றது. பாம்பு கடித்தால் வைத்தியம் செய்யலாம், உயிர் தப்பவும் முடியும், சாக வேண்டியும் ஏற்படலாம். செத்துப் போனாலும் உறவுகள் ஊரவர்கள் அழுது ஒப்பாரி வைத்து ஊர்வலமாகக் கொண்டு சென்று சிதையில் வைத்துத் தீ முட்டி எரிக்கலாம். ஆனால் ஊரிலுள்ள உறவுகளைச் சுற்றிலும் ஒரே பாம்புகள். அவை இங்குள்ள பாம்புகளைப் போல் புற்றுக்குள் ஒளித்து வாழ்வதில்லை. சுதந்திரமாக திரிகின்றன. யாரையும் எந்நேரமும் தீண்டலாம்; சில சமயம் அப்படியே முழுதாகவும் விழுங்கி விடலாம்.

ஏனோ இந்நேரத்தில் அவனுக்கு அவனுடைய பூட்டி சிறுவனாயிருக்கும் போது சொன்னகதை நினைவுக்கு வருகின்றது. கோட்டை முனியப் பரிலிருந்து புறப்படும் முனி தன் பரிகலங்களுடன் வல்லைவெளிக்கு வந்து உப்புவெளி தாண்டி உயிலங்கன்றடியில் இளைப்பாறி தங்களது ஒழுங்கையால் பருத்தித்துறையைச் சென்றடையுமாம். ஒழுங்கை என்று சொல்லப்படும் அந்த வெள்ளவாய்க்கள் பரிகலங்கள் "செம் மறி ஆட்டு" உருவத்தில் செல்லுமாம். இதில் உள்ள ஆபத்து என்னவென்றால் இந்த முனி ஊர்வலத்தின் போது யாராவது குறுக்கே வந்தால் முனி அடித்து விடும் அடிவாங்கியவர் இரத்தம் கக்கிச் சாகவேண்டியதுதான்.

பூட்டி இந்தக்கதையைத் திருப்பித் திருப்பிப் பலமுறை சொன்னாலும் கூட அவன் "காக்கிவளவு" பெரியம்மாவின் செம்மறி ஆடுகளைத் தவிர வேறு எதையும் கண்டதில்லை. அதனால் அவன் சிறுவயதில் முனியை நினைத்துப் பயந்தாலும் காலப்போக்கில் அவையெல்லாம் நம்பமுடியாத கதைகளாக அவனளவில் மாறி விட்டிருந்தன.

இப்போ பரிகலங்களின் ஊர்வலம் பற்றிய நம்பிக்கை சிறிது சிறிதாக மீண்டும் துளிர் விட ஆரம்பித்தது. முன்னைய பரிகலங்களுக்குக் குறுக்கே போனால் மட்டும் தான் ஆபத்து.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இப்போதெல்லாம் பரிகலங்கள் வீடுகளுக்குள் புகுந்துமனிதர்களை இழுத்துச் செல்வதாக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. வேம்படி வீட்டு வெள்ள வாய்க்காலால் பரிகலங்கள் மணலை வாரியிறைத்துப் புழுதிப் படலமாகக் கிளப்பிக் கொண்டு செல்வது அவன் மனதில் தெரிகின்றது.

எப்படியும் இன்று கடிதத்தை எழுதி முடித்து தபாலில் சேர்த்து விடவேண்டும் என்ற வலுவான எண்ணம் அடி மனதிலிருந்து விடாப்பிடியாக கெம்பிக்கொண்டிருக்கிறது.

அவன் எவ்வளவு சிரமப்பட்டு அதை எழுதினாலும் இடைவெளியில் அதன்வாய் கிழிக்கப்படும். எழுத்தெழுத்தாக வாசிக்கப்பட்ட பின்பு விலாசதாரருக்கு சிலவேளைகளில் போய்ச் சேருவதை எவ்விதத்திலும் நிச்சயப் படுத்தி விடமுடியாது.

அவன் இதுவரை மூன்று கடிதங்கள் போட்டுவிட்டான். பதில் கடிதம் ஒன்று கூட வரவில்லை. போய்ச்சேராமலும் இருக்கலாம். சிலவேளை போய்ச் சேர்ந்தாலும், அவனது உறவுகள் கடிதம் போடுவதில் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை எண்ணிப் பதில் போடாமலும் இருந்திருக்கலாம். எப்பிடியிருப்பினும் தொடர்புகள் அறுந்து தனித் தனித் தீவாகி மனிதர்கள் தவிப்பது மட்டும் நிதர்சனமானது. ஆங்கிலேயர் எமது நாட்டைக் கைப்பற்றிய பின்புதான் தபால் போக்குவரத்து இங்கு ஏற்பட்டதாகப் படித்திருக்கிறான். என்றாலும் அன்னத்தைத் தூதுவிட்டதும், ஒருவருக்கொருவர் ஓலையனுப்பித் தகவல்களைப் பரிமாறிக் கொண்டதும் இலக்கியங்களில் படித்தது நினைவுக்கு வந்து போனது. அதிலும் அக்பர் ஆட்சிக் காலத்தில் அவருக்குக் குழந்தை பிறந்த செய்தி ஒரு மைலுக்கு ஒரு முரசம் வைக்கப்பட்டு அதில் எழுதப்படும் ஒலி மூலம் நூற்றுக்கணக்கான மைல் தொலைவிலிருந்த அவருக்கு அறிவிக்கப்பட்டதாம்.

அப்படியானால் குடாநாட்டிற்குள் நடக்கும் கொலைகள், கைதுகள், காணாமற் போதல்கள் எப்பிடிப்பரவுகின்றன. அக்பரின் முறை நடைமுறைக்கு வந்து விட்டிருக்கலாம் என அவனுக்குத் தோன்றியது. முரசிலிருந்து முரசுக்கு செய்தி போனது போல் காதிலிருந்து காதுக்கு போகக் கூடும்.

ஆனால் அவனும் அவனுடைய உறவுகளும் இப்போ தொடர்பு கொள்ள உடைக்கப்படும், போய்ச்சேராத கடிதங்களையே நம்ப வேண்டியுள்ளது. கிளாலிக் கடலேரியும், ஆனையிறவுத் தளமும் குறுக்குச் சுவராக இல்லாமலிருந்தால் வேறு ஏதாவது ஒரு வழியிலாவது முயற்சிக்கலாம்.காந்தனை நினைக்கும் போது இனம் புரியாத பதட்டம் ஒன்று ஏற்படுவதையும் நெஞ்சு "படபட" வென்று அடித்துக் கொள்வதையும் அவனால் உணர முடிந்தது. காந்தன் வேறுயாருமல்ல; அவனுடைய சகோதரியின் மகன்தான்.

தகப்பன் வெளிநாட்டிலிருந்து காசு காசாக அனுப்ப தாய் ஊட்டி ஊட்டி வளர்த்த உடம்பு. படிப்பிலும் அவன் கெட்டிக்காரன், பள்ளிக்கூடம் போய் வருகிறானா என்பது பற்றி எவ்வித விபரமும் தெரியவில்லை. சிலவேளை காணமற் போயிருந்தால்.........

---

**ஊரிலுள்ள உறவுகளைச் சுற்றிலும் ஒரே பாம்புகள். அவை இங்குள்ள பாம்புகளைப் போல் புற்றுக்குள் ஒளித்து வாழ்வதில்லை. சுதந்திரமாக திரிகின்றன. யாரையும் எந்நேரமும் தீண்டலாம்; சில சமயம் அப்படியே முழுதாகவும் விழுங்கி விடலாம்.**

---

அப்படி நடந்திருக்காது என்று தன்னை தானே சமாதானப்படுத்திக் கொண்டான். தற்செயலாக அப்படி நடந்திருந்தால் கடிதம் எதுவும் வராமலிருப்பதே அதாவது துன்பம் விளைவிக்கும் சம்பவங்களை அறியாமல் இருப்பது கூட நல்லது தான்.

அது 1984ம்–ஆண்டு என ஞாபகம். உப்பு வெளியில் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் கண்ணிவெடியில் சிக்கிச்சிதறியது. அடுத்த நாள் அதிகாலையில் அந்த ஊரையே சுற்றிவளைத்துப் பலரைப்பிடித்துக் கொண்டு சென்று விட்டனர். அவர்களுக்கு என்ன தோன்றியதோ வெற்றிகட்டுப் பிள்ளையார் கோவிலில் மணியடிக்கும் சண்முகலிங்கத்தை மட்டும் ஓடவிட்டு விட்டு முதுகில் சுட்டுக் கொன்றுவிட்டனர். அது சில வேளைகளில் கண்ணிவெடி வைத்தவனைத் தாம் சுட்டுவிட்டதாக மேலிடத்திற்கு அறிவிப்பதற்காகக் கூட அக்காரியத்தை செய்திருக்கலாம். அது அன்று வந்த பொறுப்பதிகாரியின் மன நிலையைப் பொறுத்தது.

காந்தனையும் ஓடவிட்டு விட்டு பின்னால்இருக்காது. அப்படி நடந்திருக்க முடியாது. காந்தன் நன்றாக ஓடுவான்.இன்று வரை நூறுமீற்றர் ஓட்டப்பந்தயத்தில் வன் நிலைநிறுத்திய பாடசாலைச் சாதனையை எவரும் உடைக்கவில்லை.

துப்பாக்கி ரவையின் வேகத்தை விட மனிதனால் ஓட முடியாமா? முடியாது தான்..... ஆனால் காந்தன் ஓடியே ஆகவேண்டும் என்று அவன் மனம் துடிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் எண்ணூற்று நாற்பத்தாறு பேர் காணாமற்போனதாக அரச அதிபர் அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார். அது எண்ணூற்றுநாற்பத்தியைந்தாக இருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?

சுசியும் பருத்துறைக்கு வேலைக்குப் போக வேண்டும். குஞ்சன் கடைச் சந்தி தாண்டி, மூத்தவிநாயகர் கோவிலடியால் போய் நெல்லியடிச்சந்தியில்............... சந்திக்குப் போகாமல் மகாத்மா தியேட்டர் முன் ஒழுங்கையால் இறங்கி சாணக்க மூலைக்குள்ளால் சென்று வதிரிப்பாதையாலும் போகலாம். அப்படிப்போகும் போது புளியடிச் சந்தியில் மண் மூட்டைகள் அடுக்கப்பட்டிருந்தால் என்ன செய்வது?

கூடப்பிறந்த சகோதரியின் மகள் என்றாலும் கூட "சுஜியின்" அழகையிட்டு அவனுக்கு தனிப் பெருமை. அந்த குறுகுறுத்த கண்களும், படபடக்கும் விழிமடல்களும் நிச்சயமாக மண்மூட்டைக்குள் நிற்கும் கண்களை அவள் பின்னால் விரட்டும் என்பதில் சந்தேகம் கொள்ள வேண்டியதில்லை. வேலைக்குப் போன சுஜியைக்காணவில்லையென்று தேடிப்போன அக்காவும், சுஜியுடன் ஒவே புதைகுழியில் அழுகி, நாறிப்போய், புழுக்களாய் நெளிய.......

நெஞ்சுக்குள் ஏதோ ஒரு உணர்வு உருண்டு, திரண்டு மூச்சை அடைக்கிறது. அனுமான் எப்படிக் கடலைத் தாண்டியிருப்பான்......?

அப்படியே வானத்தில் எழுத்து பறந்து சென்று தாயையும், தகப்பனையும், சகோதரியையும் பிள்ளைகளையும் தோளில் சுமந்து கொண்டு பறந்து வந்து விட வேண்டும். போலொரு



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தவிப்பு மனதில் எழுகின்றது.

எனினும் அனுமானையும் நடுக்கடலில் அரக்கி தடுத்து நிறுத்திய சம்பவமும் அவன் நினைவுக்கு வராமலில்லை.

அவனால் இனியும் கடிதத்தை எழுதாமல் இருக்கவே முடியாது; பேனையை மீண்டும் கையில் எடுக்கிறான்.

பிள்ளையார் கோவில் ஒலி பெருக்கி "பெருங்கதை" படிக்கும் யாரோ ஒருவரின் குரலைக் கர்ண கடூரமாக்கிக் காதைக்கிழிக்கின்றது. ஒலிபெருக்கியை கண்டு பிடித்தவனைச் சுண்ணாம்புக் காளவாயில் போட வேண்டும் போலிருக்கிறது.

அவன் ஊரைவிட்டு கல்வி காரணமாகவோ, தொழில் தேடியோ ஊர் எல்லை தாண்டிய காலம் தொட்டு அவனது தாய் "பெருங்கதை" விரதம் பிடிக்கத் தவறுவதில்லை. அந்த விரதம் அவனுக்கு ஒரு துன்பமும் வராமல் காப்பாற்றும் என்பது அவளது அசையாத நம்பிக்கை. இந்தப் பெருங்கதை விரதகாலத்தில் அவனது கடிதம் கிடைக்குமானால் எவ்வளவு சந்தோஷப்படுவாள்.

பெருமூச்சு ஒன்று நெஞ்சுக்குள் இருந்து எழுந்து அடங்குகின்றது. அழுதால் கொஞ்சம் மனதுக்கு நிம்மதியாயிருக்கும் போலவும் தோன்றுகின்றது.

அசோகவனத்தில் சிறைப்பட்டிருந்த சீதையை எண்ணி ராமன் விம்மி அழுதிருப்பானா? இல்லையே...... படைதிரட்டி, கடலுக்கு பாலம் போட்டு, யுத்தம் செய்தல்லவா சீதையை மீட்டான்; அப்படி செய்திருக்காவிடில் இராமன் சாகும்வரை பஞ்சவடிக் காட்டில் அலைந்து கொண்டல்லவா இருந்திருக்கவேண்டும்.

கிளாலி கடலுக்குப் பாலம் போட முடியுமா? கேள்வி எழுந்த கையுடனேயே பாலக்கற்களாய் விழுந்து போன ஆயிரக்கணக்கான உயிர்களின் எக்காலச் சிரிப்பொலி நெஞ்சை அதிர்க்கிறது.

மிகவேகமாகப் பேனையைக் கையிலெடுக்கிறான். இப்போது கடிதம் எழுதுவது எப்படி என்பது குழப்பங்களைத் தாண்டி திட்டவட்டமான வசனங்களாக உருப்பெற்று விட்டது.

"எனக்கு நீங்கள் கடிதம் போட வேண்டும்; நாங்கள் வெகுவிரைவில் உங்களிடம் வந்து விடுவோம்."

**- யோ. மைதிலி**

# எத்தனை நாள்தான் இவ்வாழ்வு?

பாதையின் இருபுறமும் சகல கட்டடங்களும் தரைமட்டமாக்கப்பட்டு, மக்கள் நடமாட்டமே இன்றி வெறிச்சோடிக் கிடக்கிறது. வீடுகள், கோயில்கள், பாடசாலைகள் அனைத்தும் சிதைந்து இடிந்து கிடக்கின்றன. விவசாய நிலங்கள் காய்ந்து வெடித்து புற்கள் கூடக் கருகிப் போயுள்ளது. கனரக வாகனங்களும், டாங்கிகளும் போன பாதைகளில் மரங்களும் செடிகொடிகளும் முறிந்து நிலத்தோடு அரைபட்டுப்போயுள்ளன.

ஆங்காங்கே மண்மூடைகளுக்குப் பின்னாலும், மரங்களுக்குப் பின்னாலும் பதுங்கி துப்பாக்கிக் குழல்களை நீட்டியபடி இராணுவத்தினர். பயமும் பதட்டமுமாகக் காணப்படும் இவர்களில் துப்பாக்கிகள் ஒரு சிறு அசைவிற்கும் கூட குண்டுகளைப் பொழிந்து தள்ளிவிடும் என்ற நிலை.

இது புருண்டி, ஸாய்ரே, ருவண்டா போன்ற ஆபிரிக்க நாடொன்றில் காணப்படும் நிலை என்று எண்ணிவிடாதீர்கள். நம்நாட்டிலேயே இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் வவுனியா, மன்னார் பிரதேசத்தில் காணப்படும் நிலைதான் இது.

மிகவும் துயரமான நிலையில் அப்பிரதேசம் காணப்படுகிறது. வவுனியா, மன்னார் வீதி விடுவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டபோதும் மக்கள் சுதந்திரமாகப் பயணம் செய்யும் நிலை இன்னும் இல்லை. வீதியின் இருமருங்கிலும் சுமார் 600 யார் தூரம் வரை எதுவித கட்டடங்களும் இல்லை. மரங்கள்கூட பெயர்க்கப் பட்டுள்ளன. முழுவதும் இராணுவ முகங்களே. மக்களின் நடமாட்டமே இல்லை.

வவுனியாவிலிருந்து மன்னார் போவதானால் காலை 8.30 மணிக்கே வவுனியா எல்லைக்கு வரவேண்டும். காலை 11 மணி வரை கச்சேரி பஸ்சை எதிர்பார்த்து நிற்க வேண்டும். சிலவேளை பஸ் இல்லாமலும் போகலாம். இராணுவத்தினரின் பஸ் முன்னால் செல்ல கச்சேரி பஸ்; மற்றைய வாகனங்கள் பின்தொடரும். பாதை மிகவும் மோசமானது.

இராணுவத்தினரின் பஸ் புதிதானதாகையால் வேகமாகப் போய்ச் சேர்ந்து விடும். இடையிடையே தடை முகாம்கள். தமிழோ, ஆங்கிலமோ தெரியாத இராணுவத்தினரிடம் பயணத்தின் காரணத்தை விளங்க வைப்பது மிகப் பெரிய காரியம். வீதித் தடைகளுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்தும்படி பேனாவால் எழுதிய பலகைகள் காணப்படும். இலகுவில் அதை அவதானிக்க முடியாது. தற்செயலாக வாகனம் சற்று நகர்ந்தால் துப்பாக்கிச்சூடு நிச்சயம். 'நாங்களும் உயிர்ப்பயத்தில்தானே இருக்கிறோம்' என்பது இராணுவத்தினரின் வாதம்.

முருங்கன் நகரம் வெறிச்சோடிக்கிடக்கிறது. மக்கள் யாருமே இல்லை. கூரைகள் இல்லாத சில வீடுகள் தவிர ஏனைய அனைத்தும் தரைமட்டமாக்கப் பட்டுள்ளன.

மன்னார் எல்லைக்கு வந்ததும் கடுமையான விசாரணை. வழி நெடுகிலும் விசாரணைகளுக்கும் சோதனைகளுக்கும் முகம் கொடுத்து பாதி உயிர்போன நிலையில், இங்கு மீதி உயிரும் போய்விடும் போலிருக்கும். அதிலும் கொழும்பிலிருந்து வந்தவர்களை விடமுடியாது என்ற கெடுபிடி. சகல அனுமதிகளையும் பெற்றுக்கொண்டு ஒரு மதம் சார்ந்த நிகழ்ச்சிக்கே நாம் வந்துள்ளோம் என்று தெரிவித்தபோதும் அனுமதிக்கப்படவில்லை. நீண்ட நேரம் மன்றாடலின் பின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டோம். மன்னார் பெற்றோல் நிலையத்தருகில் உள்ள மைதானத்தில் கடும் வெய்யிலில் மீண்டும் சோதனை.

*மன்னார் மாவட்டத்திற்கு அண்மையில் சென்றுதிரும்பிய 'இயேசு ஜீவிக்கிறார்' சுவிஷேசப் பணி சகோதரர் எஸ். இராஜேந்திரன் அவர்களின் பயண அனுபவத்திலிருந்து....*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தாண்டவம்

கனவுபோல எல்லாம் நடந்து முடிந்துவிட்டது: இதில்தான், இந்த இடத்தில்தான். கனவாக இருந்தால் நல்லது. ஆனால் அது நிஜம்.

எஞ்சி இருப்பது இவன் ஒருவன்தான். ஆட்ட அசைவற்ற சா! என்னத்துக்கு வந்தான் என்றும் தெரியாது.

எல்லோரும் கலைந்து போய் நீண்ட நேரமாகிவிட்டது. பார்க்கும் ஆவல், தவிப்பு, அத்தோடு தன்னைக் காத்துக் கொள்ளும் உணர்வு. பார்த்தவுடன் மின்னல் வேகத்தில் மறைந்து போயினர். அவலங்களுக்குள் வாழ்ந்துகொண்டு, இந்த அவலங்களை அனுபவித்துக்கொண்டு, அனுபவங்களுக்கு கிட்ட நிற்கவும் பயம்.

ஒவ்வொரு முறையும் நாம் தப்பிவிட்டோம் என்ற திருப்தி: ஆனால் திரும்பவும், திரும்பவும் இதற்குள் பலர்.

இவன்கூட மல்லாவியில் அல்லது முறுகண்டியில் சிதைந்துபோய்க் கிடந்தவற்றுடன் கிடந்த மனிதர்களை பார்த்துவிட்டு மின்னலென மறைந்திருக்கலாம்.

இந்த முறை பார்க்கும் சந்தர்ப்பம் அவனுக்கு இல்லை. எனக்கு. அடுத்தமுறை கதை நாயகன் நானாகவும் இருக்கலாம், பார்வையாளன் வேறொருவன்..

ஒரு மனிதன் இறந்து கிடக்கிறான்: அதுவும் அநாதரவாக நானும் அவனும் தவிர சிதைந்த இந்தக் கட்டிடமும் சேதப்பட்ட மரங்களும், காற்றும் மட்டுமதான் அங்கு. இவனை இப்பவே இதிலயே எரித்துவிட்டு போகலாம். ஆனால் மனம்வரவில்லை. 'காத்துக் கொண்டிருப்போம். யாரோவொரு 'அவள்' வரலாம். அது தாயாக இருக்கலாம். அல்லது அவனது அவளாகவும் இருக்கலாம். ஓர் மரத்தோடு சாய்ந்திருந்தேன்.



இந்த மண்ணில் வாழுகின்ற ஒவ்வொரு மனிதனதும் அவா என்ன? தன்னைச்சுற்றி ஒரு அன்புக் கோட்டையை அவன் ஏன் கட்டுகின்றான்? தடுக்கி விழும்போது ஓடிவந்து தாங்கிக் கொள்ளவும், உயிரற்று சாயும்போது கட்டியணைத்து அழுவதற்கும்தானே!

ஆண்டவா, கட்டியணைத்தழ ஒருவரில்லாத இடத்தில் செத்து அனாதரவாக எரிந்து அடையாளமற்று காற்றில் கலப்பது எவ்வளவு கொடுமையானது.

இளமையில் தாயும் அதன் பின்பு தாரமும் கடைசியில் பிள்ளைகளுமென பாசக்கூட்டில் வாழ்வது இறுதியில் அந்தக் கண்ணீருக்காகத்தானே!

சரி, அதனை விடுவோம். இவனைப் பார்ப்போம். உயிரற்ற பிறகு கூட இவன் அழகுதான்.

விமானக் குண்டுக்கு அதுவும், சட்டென்று வந்து காற்றையும் வெளிகளையும் கலங்க வைத்து கண்மூடிக் கண்திறப்பதற்குள் ஆயிரக்கணக்கான கிலோ குண்டுகளை வீசும் இயந்திரக் கழுகுகளின் கண்களில் பட்டவனின் நிலையை இங்கு யாருக்கும் சொல்லத் தேவையில்லை.

இவன் தன்னை காக்க முயன்றிருக்கிறான். சிறிது தள்ளி, வயிற்றில் காயத்துடன் விழுந்தான்.

அந்த இடத்தில் நின்றவர்கள், சிறுமியொருத்தி, பெண், வயோதிபர் ஒருவர் சங்கக்கடைக் கட்டிடத்தைப்போலவே சிதைந்துபோயினர்.

நான்கூட சற்றுத் தள்ளி வந்தேன். அது குத்துவதைக் கண்டு சனம் பாய்கையில் நானும் இரண்டு வேலிகளை தாண்டியிருந்தேன். ஆனால், அவனின் இலக்கு நிவாரணத்துக்காக வரிசையில் மக்கள் நின்ற இந்தச் சங்கக் கடையாகவே இருந்தது.

இரண்டு மூன்று மணித்தியாலங்களில் எல்லாமே வெறிச்சோடின. இன்னுமொரு தரம் அந்தக் கழுகளின் நிழல் தெரிந்துவிடுமோ என்ற பயத்துடன், மேலே பார்த்து மறைந்தது சனம். அதே நேரம் சிதைந்தவர்களை கூட்டி அள்ளிச் சென்றன உறவுகள்.

ஆனால், இவன் மட்டும் இதுவரை அடையளம் தெரியாமல் கிடக்கிறான்.

திரும்பவும் ஒருதரம் அவனை நன்றாகப் பார்த்துவிட்டுப் போகலாம் என



www.tamileelamarchive.com

நினைத்து அருகில் சென்றேன். இந்த இடத்தில் இப்போது அவனையும் என்னையும் தவிர வேறு எவருமே இல்லை. அருகு வீடுகளும் ஆருமற்றுப்போயின.

யாராவது வருவார்கள் என்ற உணர்வு நெஞ்சில் முள்ளாக உறுத்தியது. அவனது அவர்களுக்காக, சிறிது நேரம் காத்திருப்பதாக முடிவெடுத்தேன்.

நிமிர்த்தி, கால், கைகளை ஒழுங்காக்கி, இரத்தம் தோய்ந்த ஆடைகளைச் சீராக்கினேன்.

அவன் வசீகரமானவன். அடர்ந்த கேசம், கவர்ச்சியான நிமிர்ந்த உடல். 'நேற்று இரவு இந்த உடலில் இவன் பிள்ளை தவழ்ந்து விளையாடி இருக்கும். முத்தமிட்டு முட்டிமோதி விழுந்தெழுந்திருக்கும். அதற்கு அப்படி சொந்தங் கொண்டாட இனி.....' நினைக்க நெஞ்சத்தில் எழுந்த உணர்வு தொண்டைக் குழிக்குள் அடைத்தது. கண் முட்டி நிறைந்தது.



வயது, கிட்டத்தட்ட என்னுடைய தாகத்தான் இருக்கவேண்டும். முப்பத்திரண்டு அல்லது அதைவிட ஒன்றிரண்டு கூட.

இங்கு ஏன் வந்திருப்பான். நிவாரணத்துக்காகவா? அல்லது யாரும் தெரிந்தவர்களை காணவா? இவனைத் தெரிந்தவரென்று எவருமே பேச்சுக்குகூடப் பேசவில்லை. எங்கோ தூர இடத்திலிருந்து வந்திருக்கிறான். அதைக்கூட எப்படிச் சொல்வது? ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஓடி வந்து அங்கிங்கென்றில்லாமல் இருந்து, இடம் பெயர்ந்து நாடோடி வாழ்க்கை வாழும் மனிதக் கூட்டத்தின் ஓரங்கம்தானே இவனும்.

திருமணம்: அனேகமாக இவன் செய்துதான் இருக்க வேண்டும். என்னுடைய மனைவிமாதிரி எதற்கெடுத்தாலும் கண்கள் நிறைந்துவிடும் பெண்தான் இவனது மனைவியுமா? அப்படி என்றால், அவள் எப்படி இதைத் தாங்கிக் கொள்ளப் போகிறாள்.

'அவள் சாகட்டும், கதியற்றுக் கலங்குவதைவிட செத்தழிந்து போவது நல்லது' எண்ணங்கள் தமக்குள் முரண்பட்டன.

மனம் இப்படித்தான் சில நேரங்களில் தேவையற்றுக் குழம்பும்: தளம்பி நின்று அந்தக் குட்டைக்குள்ளேயே நீச்சலடிக்கும்.

சாவுக்கு சாவுதான் எல்லாமே என்றால், இன்று உலகு ஜீவராசிகள் அற்ற வெளியாக இருக்க வேண்டும். சீறி எதிர்க்கும் அலைகளுக்குள் ஏதோவொரு அலை தடவி வழியனுப்பும்: இன்னுமொரு அலையின் மேலுந்தலில் கரை சேர வழி வரும்.

நேரம் கடந்திருந்தது. இனியும் நிற்பது நல்லதாகப்படவில்லை. 'போகலாம்' என எண்ணி நடந்தேன்.

அருகில் நாயொன்று ஊழையிட்டது. அதற்குத் தனித்துப் போன பயவுணர்வு.

'இதற்கு உணவு. இன்று சரி நாளை' நினைவு பேயாக எழுந்து நெஞ்சை அமுத்தியது.

கடவுளே இவன்தானா? நினைவே கடுமையாக தாக்கியது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு இருந்தேன். தலையைச் சுற்றியது. கால்கள் பதறி நடுங்கின.

'வேண்டாம், அவன் கௌரவமாக எரியட்டும். அழுவதற்கு யாருமில்லாவிட்டாலும் பரவாயில்லை, எரிந்து சாம்பலாகட்டும்' ஒருமுடிவோடு அக்கம் பக்கத்துக் கட்டைகள், தடிகள், விறகுகளைக் குவித்தேன்.

சரி, ஒருவன் முற்றாக எரிவதற்கு காணுமானது என்றவுடன் நின்றேன்.

உதவிக்கு ஒருவருமில்லை. ஒருவருமில்லாததும் ஒருவிதத்திற்கு நல்லதுதான். எந்தத் தலையீடுமற்ற ஒழுங்கான செயல்.

மாலையாகிவிட்டது. இனி விறகால் அவனை மூட வேண்டும்.

அருகில் சென்றேன். நெஞ்சில் மீண்டும் நெருடியது. 'நாளை விடிந்ததும் 'அவள்' நான் நினைப்பதுமாதிரி இவனுக்கு மனைவி இருந்தால், ஒரு வேளை ஓடி வரலாம்'.

மனம் சங்கடப்பட்டது. கால்கள் இயங்க மறுத்து நின்றன. இரவு அவனுக்கு காவலிருப்பதாக தீர்மானித்தேன்.

கல்சிதறல்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு குந்திலமர்ந்தேன். கதிர்கள் விழுந்து இருள் தன் கைகளை மெதுவாக விரித்தது.

அழகான வானம். அத்துடன் நிம்மதி, அமைதி, மகிழ்ச்சி எல்லாவற்றையும் விழுங்கியபடி விரிந்தது.

இரவு, பேய்போன்ற இருள். அகன்ற வெருட்டும் கண்கள், கூரிய குத்திக் கிழிக்கும் மூக்கு, சட்டென்று மிதித்து துவம்சம் செய்துவிடும் கால்கள், நெஞ்சை நடுங்கவைக்கும் இருள்பேய்.

அது தன் ஆதிக்கக் கரங்களை விரித்து ஆட்டம் போட்டது. நெஞ்சில், கழுத்தில், வயிற்றில் என ஒவ்வொரு சனத்தின் மீதும் ஏறி ஆடி சாகும்படி வதைத்தது. இப்போதெல்லாம் இரவு இப்படித்தான் கொடுமையானது. அருவருப்பானது நாய்கள் அங்கங்கு ஊளையிட்டு வெறுப்பேற்றின. ஒவ்வொரு மணித்துளியும் ஒரு யுகமாகக் கழிந்தன.

அவன் ஆட்ட அசைவற்றுக் கிடந்தான். நானோ வாழ்க்கை பற்றிய விசாரணையில் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். அவனுக்கு இது திருப்திகரமான சாவில்லை. இதை எதிர்பார்த்துக்கூட இருக்கமாட்டான். ஆனால் ஒரு சின்னச் சிரிப்பு: கடைசியில் இதுதான் வாழ்க்கையின் முடிவு என்ற நினைப்பில் எழுந்த அலட்சியம் கலந்த சிரிப்பு. அதேநேரம் வாழ்க்கையைத் தொடர முடியாமல்போன ஏக்கம்: இம்முறை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நினைத்து அருகில் சென்றேன். இந்த இடத்தில் இப்போது அவனையும் என்னையும் தவிர வேறு எவருமே இல்லை. அருகு வீடுகளும் ஆருமற்றுப்போயின.

யாராவது வருவார்கள் என்ற உணர்வு நெஞ்சில் முள்ளாக உறுத்தியது. அவனது அவர்களுக்காக, சிறிது நேரம் காத்திருப்பதாக முடிவெடுத்தேன்.

நிமிர்த்தி, கால், கைகளை ஒழுங்காக்கி, இரத்தம் தோய்ந்த ஆடைகளைச் சீராக்கினேன்.

அவன் வசீகரமானவன். அடர்ந்த கேசம், கவர்ச்சியான நிமிர்ந்த உடல். 'நேற்று இரவு இந்த உடலில் இவன் பிள்ளை தவழ்ந்து விளையாடி இருக்கும். முத்தமிட்டு முட்டிமோதி விழுந்தெழுந்திருக்கும். அதற்கு அப்படி சொந்தங் கொண்டாட இனி.....' நினைக்க நெஞ்சத்தில் எழுந்த உணர்வு தொண்டைக் குழிக்குள் அடைத்தது. கண் முட்டி நிறைந்தது.

வயது, கிட்டத்தட்ட என்னுடைய தாகத்தான் இருக்கவேண்டும். முப்பத்தி இரண்டு அல்லது அதைவிட ஒன்றிரண்டு கூட.

இங்கு ஏன் வந்திருப்பான். நிவாரணத்துக்காகவா? அல்லது யாரும் தெரிந்தவர்களை காணவா? இவனைத் தெரிந்தவரென்று எவருமே பேச்சுக்குகூடப் பேசவில்லை. எங்கோ தூர இடத்திலிருந்து வந்திருக்கிறான். அதைக்கூட எப்படிச் சொல்வது? ஒவ்வொரு இடத்திலிருந்தும் ஓடி வந்து அங்கிங்கென்றில்லாமல் இருந்து, இடம் பெயர்ந்து நாடோடி வாழ்க்கை வாழும் மனிதக் கூட்டத்தின் ஓரங்கம்தானே இவனும்.

திருமணம்: அனேகமாக இவன் செய்துதான் இருக்க வேண்டும். என்னுடைய மனைவிமாதிரி எதற்கெடுத்தாலும் கண்கள் நிறைந்துவிடும் பெண்தான் இவனது மனைவியுமா? அப்படி என்றால், அவள் எப்படி இதைத் தாங்கிக் கொள்ளப் போகிறாள்.

'அவள் சாகட்டும், கதியற்றுக் கலங்குவதைவிட செத்தழிந்து போவது நல்லது' எண்ணங்கள் தமக்குள் முரண்பட்டன.

மனம் இப்படித்தான் சில நேரங்களில் தேவையற்றுக் குழம்பும்: தளம்பி நின்று அந்தக் குட்டைக்குள்ளேயே நீச்சலடிக்கும்.

சாவுக்கு சாவுதான் எல்லாமே என்றால், இன்று உலகு ஜீவராசிகள் அற்ற வெளியாக இருக்க வேண்டும். சீறி எதிர்க்கும் அலைகளுக்குள் ஏதோவொரு அலை தடவி வழியனுப்பும்: இன்னுமொரு அலையின் மேலுந்தலில் கரை சேர வழி வரும்.



நேரம் கடந்திருந்தது. இனியும் நிற்பது நல்லதாகப்படவில்லை. 'போகலாம்' என எண்ணி நடந்தேன்.

அருகில் நாயொன்று ஊழையிட்டது. அதற்குத் தனித்துப் போன பயவுணர்வு.

'இதற்கு உணவு. இன்று சரி நாளை' நினைவு பேயாக எழுந்து நெஞ்சை அமுத்தியது.

கடவுளே இவன்தானா? நினைவே கடுமையாக தாக்கியது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு இருந்தேன். தலையைச் சுற்றியது. கால்கள் பதறி நடுங்கின.

'வேண்டாம், அவன் கௌரவமாக எரியட்டும். அழுவதற்கு யாருமில்லாவிட்டாலும் பரவாயில்லை, எரிந்து சாம்பலாகட்டும்' ஒருமுடிவோடு அக்கம் பக்கத்துக் கட்டைகள், தடிகள், விறகுகளைக் குவித்தேன்.

சரி, ஒருவன் முற்றாக எரிவதற்கு காணுமானது என்றவுடன் நின்றேன்.

உதவிக்கு ஒருவருமில்லை. ஒருவருமில்லாததும் ஒருவிதத்திற்கு நல்லதுதான். எந்தத் தலையீடுமற்ற ஒழுங்கான செயல்.

மாலையாகிவிட்டது. இனி விறகால் அவனை மூட வேண்டும்.

அருகில் சென்றேன். நெஞ்சில் மீண்டும் நெருடியது. 'நாளை விடிந்ததும் 'அவள்' நான் நினைப்பதுமாதிரி இவனுக்கு மனைவி இருந்தால், ஒரு வேளை ஓடி வரலாம்'.

மனம் சங்கடப்பட்டது. கால்கள் இயங்க மறுத்து நின்றன. இரவு அவனுக்கு காவலிருப்பதாக தீர்மானித்தேன்.

கல்சிதறல்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு ஒரு குந்திலமர்ந்தேன். கதிர்கள் விழுந்து இருள் தன் கைகளை மெதுவாக விரித்தது.

அழகான வானம். அத்துடன் நிம்மதி, அமைதி, மகிழ்ச்சி எல்லாவற்றையும் விழுங்கியபடி விரிந்தது.

இரவு, பேய்போன்ற இருள். அகன்ற வெருட்டும் கண்கள், கூரிய குத்திக் கிழிக்கும் மூக்கு, சட்டென்று மிதித்து துவம்சம் செய்துவிடும் கால்கள், நெஞ்சை நடுங்கவைக்கும் இருள்பேய்.

அது தன் ஆதிக்கக் கரங்களை விரித்து ஆட்டம் போட்டது. நெஞ்சில், கழுத்தில், வயிற்றில் என ஒவ்வொரு சனத்தின் மீதும் ஏறி ஆடி சாகும்படி வதைத்தது. இப்போதெல்லாம் இரவு இப்படித்தான் கொடுமையானது. அருவருப்பானது நாய்கள் அங்கங்கு ஊளையிட்டு வெறுப்பேற்றின. ஒவ்வொரு மணித்துளியும் ஒரு யுகமாகக் கழிந்தன.

அவன் ஆட்ட அசைவற்றுக் கிடந்தான். நானோ வாழ்க்கை பற்றிய விசாரணையில் சஞ்சலப்பட்டுக் கொண்டிருந்தேன். அவனுக்கு இது திருப்திகரமான சாவில்லை. இதை எதிர்பார்த்துக்கூட இருக்கமாட்டான். ஆனால் ஒரு சின்னச் சிரிப்பு: கடைசியில் இதுதான் வாழ்க்கையின் முடிவு என்ற நினைப்பில் எழுந்த அலட்சியம் கலந்த சிரிப்பு. அதேநேரம் வாழ்க்கையைத் தொடர முடியாமல்போன ஏக்கம்: இம்முறை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சாவு தனக்கு என்ற போது எழுந்த ஆச்சரியம். இது என்னுடைய மனதின் பிரதிபலிப்பாகக் கூட இருக்கலாம். ஆனால், உண்மையும் அதாகத்தான் இருக்கும்.

வேதனையின் சுவட்டை எள்ளவு கூட அவனில் காணவில்லை. எப்படி? அதற்கு விளக்கம் எனக்குத் தெரிய வில்லை. இறந்தவனின் மனதிற்குள் உலவ என்னால் இயலாது. ஆனால் இது சாத்தியமானது, சாவின் இறுதிக் கணங்களில் நடிக்கவேண்டியதேவை யிலும் சாவு தேர்ந்தெடுக்கிறது. சாவு சர்வ நிச்சயமானது. அது எதிர்க்கிறவர் களிடம் பல வேளைகளில் பணிந்து போகிறது. இவன் ஓடித்தப்ப முயன் றான், முடியவில்லை.

கண்கள் தூங்கி வழிந்தன. அச்சம், மனதை உறுத்தியது. தப்பித்தவறி கண் அயர்ந்தால் எதிரில் இருப்பவன் இழுத் துச் செல்லப்படலாம். ஒவ்வொரு திசை யாலும் சில நாய்கள் எட்டிப் பார்ப்ப தும் சத்தத்திற்கு ஓடி வேறுபக்கத்தால் திரும்பமுயல்வதாயும் இருந்தன. மனி தன் விழுந்துவிட்டால், சத்தத்திற்கு ஓடும் நாய்கள் கூட கடித்துக் குதற நிற் கும்: ஓடினால் துரத்துகிற மாதிரி எதிர்த் தால் சாவையும் வெல்லலாம்.

ஒரு பிரளயத்தின் கூத்தில் ஆடி விழுந்து சாவதும் மேலானதுதான். ஆட வேண்டும்: ஒவ்வொருத்தனும் ஆடவேண்டும். விஸ்வரூபமெடுத்து, கையில் வாளெடுத்து, கால்களை அகட்டி, துள்ளி ஆடவேண்டும்.

கழுத்தில், நெஞ்சில், வயிற்றில் என அழுத்தி சாக்காட்டும் பேயின் கரங்களை வெட்டி எறிந்தும் ஆடவேண்டும்: அத் தனை கைகளின் வீச்சிலும் அதன் தலை எகிறிப்பறக்கவேண்டும்.

இரவுப் பேய் சரிந்து, எழுவான் திசை சிரித்து— நிலம் வெளுத்தது. ஒருவ ரும் வரவில்லை. எழுந்து கிழக்கைப் பார்த்தேன். தூரத்தில் இருமிதிவண்டி கள். 'கிட்டவா வரட்டும்' மனம் இருப் புக் கொள்ளவில்லை. கண்களை வெட் டிப் பார்த்தேன். மிதிவண்டிகள் விழுந் தன. பெண்ணொருத்தி ஓலமிட்டபடி ஓடிவந்தாள். பின்னால் வந்தவனின் கைகளில் குழந்தை இருந்தது. நெருப் புப் பெட்டியை தேய்த்துச் சூடாக்கி அருகிலிருந்த வேலிக் கட்டையில் வைத்தேன். நடந்து சென்று எனது மிதி வண்டியை எடுத்தேன். ★

**— வசந்தன் —**

# செலவீட்டுப் பதிவற்ற யுத்த 'கணக்கேடு'

சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்திடம் வரவினை மட்டுமே பதியும் கணக் குப் பதிவேடே உள்ளது. இதில், அரசிற்கான வரவுகள் மட்டுமே பதியப்படுகின் றன. அரசின் இழப்புக்கள் செலவீடுகள் என்பன எதுவும் குறிப்பிடப்படுவதும் இல்லை. பதியப்படுவதும் இல்லை. இந்த வகையில் பதிவு செய்யப்படும் முக்கிய மான அம்சங்களில் சிறீலங்கா இராணுவத்தின் 'வெற்றிகளும்' முக்கியமானவை யாகும். சந்திரிகா அரசாங்கத்தின் மதிப்பீடுகளின்படி யுத்தத்தின் எண்பது சத வீதமான யுத்தம் முடிவடைந்துவிட்டது. மிகுதி 20 – சதவீதமும் இவ்வாண்டிற் குள் முடிவடைந்துவிடும். பெரும்பாலும் யாழ். குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை திறப்பதுடன், இவ் யுத்தம் முடிவிற்கு வந்துவிடும் என்பதே அரசின் மதிப்பீடாகும்.

அஃதாவது, யாழ். குடாநாட்டை இராணுவம் கைப்பற்றியபோது 50 சதவீத மான யுத்தம் முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதாக அரச தரப்பில் கூறப்பட்டது. பின்னர் கிளிநொச்சி கைப்பற்றப்பட்டதும் 70 – சதவீதம் முடிவடைந்துவிட்ட தென அறிவிக்கப்பட்டது. பின்னர் 'எடிபல' நடவடிக்கை மன்னார் தீவிற்கான பாதை – திறக்கப்பட்டதுடன் 80 – சதவீதமான போர் முடிவிற்கு வந்துவிட்ட தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஐ.தே.க ஆட்சியாளரும், புதிய பொ.ஐ.முன்னணி ஆட்சியாளரும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான கால எல்லையையே முதலில் விதித்தனர். இதனை தமிழருக்கு எதிரான அரச பயங்கரவாதத்தை கட்டவிழ்த்து விட்டு முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன தொடக்கி வைத்தார். அவரின் முதற்காலக்கெடு ஆறு மாதங்களாக இருந்தது. ஆனால், பின்னர் ஒவ் வொரு ஆட்சியாளரும் காலக்கெடு விதிப்பதும், பின்னர் கால நீடிப்புச் செய்வ துமாக யுத்தத்தைத் தொடர்ந்த வண்ணமே இருந்தனர். ஆனால், எவருமே வெற்றிபெற முடியவில்லை.

இறுதியில் தற்பொழுது சந்திரிகா அரசாங்கமும் இதனை விடுத்தவண்ணமே உள்ளது. இவர்களும் சில கால எல்லைகளை விதித்தாலும் யுத்த நீடிப்புக்களைத் தொடர்வதோடு இதில் புதியதொரு அம்சமாக யுத்தத்தின் வெற்றிகளை வீதா சார அளவிலும் அறிவிக்கவும் தொடங்கியுள்ளனர். ஆனால், இக்கணக்கில் முக்கிய பிரச்சினை என்னவெனில் வரவு மட்டுமே பதியப்படுவதாகும்.

அதாவது, யாழ். ஆக்கிரமிப்புக்கும், கிளிநொச்சி அபகரிப்பிற்கும் மன்னார் பாதை திறப்பதற்கும் வீதாசாரத்தைப்போடும் ஆளும் கட்சியினர், குறிப்பாக ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவும் தமது செலவீட்டைக் கணக்குப் பார்க்கவும், பதிவு செய்யவும் மறுக்கின்றார்கள்.

இதனைச் சுருக்கமாகக் கூறுவதானால், சிறீலங்கா இராணுவமோ அன்றி ஏனைய ஆயுதப்படையினரோ இதற்கு முன்னர்— அதாவது, ஈழப்போர் கூர்ப் படைந்த 1983–இல் இருந்து சந்திரிகா ஆட்சிப் பொறுப்பு ஏற்றவரை— ஏற் பட்ட இழப்புக்களைவிட உயர்ந்தளவு இழப்புக்களைச் சந்தித்துள்ளது. இதில் உயிர் மற்றும் உடமை இழப்புக்கள் என்பனவும் அடங்கும். ஆனால், இதனை ஆட்சியாளர்கள் கருத்தில் கொள்ளவோ செலவீடாகக் கொள்ளவோ இல்லை.

இவைதான் போகட்டும், யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்ததை வரவில் சேர்த்த அரசாங்கம் மட்டக்களப்பில் பெரும்பகுதியில் கட்டுப்பாட்டை இழந்த தைக் கருத்திற் கொள்ளவில்லை. இதே சமயம் கிளிநொச்சியை ஆக்கிரமித்ததை வரவாகக் காட்டிய அரசு முல்லைத்தீவு இழந்ததைக் காட்டவில்லை. இதே போன்று 'எடிபல' வின் வரவைக்காட்டிய இராணுவம் பூநகரி விட்டுப்போன தையோ அன்றி கிழக்கின் பல வீதிகளில் கட்டுப்பாட்டை இழந்ததையோ செல வீடாகக் காட்டவில்லை.

இந்த நிலையில் யுத்தத்தின் வெற்றிக் கணக்கானது தனியாக ஒரு பக்கப் பதிவை மட்டும் கொண்டதுதானா? அவ்வாறு இல்லாது வரவு – செலவு என்பதைக் கணக்கில் கொண்டால் சந்திரிகா குமாரதுங்கவோ அன்றி ரத்வத்த கூறுவது போன்றோ எண்பது வீத வெற்றி என்பது 'அரசியல்வாதிகளின்' மதிப் பீடுகளில் ஒன்றாகமட்டுமே இருக்கமுடியும். இதேபோன்றே யுத்தம் இவ்வாண் டிற்குள் முடியும் என்பதும் இருக்கும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிங்களவருக்கு அநீதி இழைக்கப்படுகின்றது

## சந்திரிகாவின் சிங்கள ஆணைக்குழு முன் இனவாத சாட்சியம்

'ஆணைக்குழு' நியமித்தல் என்பது சந்திரிகா விஜயகுமாரதுங்காவின் தினசரிக் கடமை யாகிவிட்டது. தமது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க விதத்தில் சிங்கள இனவாதத் தீயை கொழுந்துவிட்டு எரிய வைத்தல் என்பது பண்டாரநாயக்க பாணி அரசியல். அதன் எல்லையைத் தொட்டுவிட்ட சந்திரிகா அமைத்த ஆணைக்குழுக்களில் ஒன்றே இந்த சிங்கள ஆணைக்குழு ஆகும். இதன்முன் வழங்கப்பட்ட ஒரு சாட்சியத்தின் ஒரு பகுதி இது.

- பொ.ஐ.மு. அரசு முன்வைத்துள்ள அரசியல் தீர்வுத் திட்டத்தை மேலும் முன்னெடுத்துச் சென்றால் ஒரு காலத்தில் சிங்களக் கிராமங்களும் சிங்களவர்களுக்குச் சொந்தமின்றி போய்விடும்.
- இந்த நாட்டில் உள்ள பிரதான கட்சிகளில் எதுவித பிரயோசனமுமில்லை. எல்லாம் சிறுபான்மையினரை சந்தோஷப்படுத்தவே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- புதிய அரசியலமைப்பு முறை அமுல்படுத்தப்பட்டால் சிங்களவர்களுக்கு அது ஒரு பாரிய அழிவாகும். இனவாதம் வேண்டாம் என்று கூறுபவர்களே இனவாதிகள் ஆவர்.
- தீர்வுப் பொதி நடமுறைக்கு வந்தால் அது பௌத்த மதத்திற்கு அழிவை ஏற்படுத்தும். வட— கிழக்குப் பகுதிகளிலுள்ள 300 பிரதான பௌத்த மையங்கள் தற்போது இல்லாமற் போயிருக்கின்றன.
- இனத்தைக் காப்பாற்ற வேண்டுமெனில், சிங்களவர்களைக் காப்பாற்ற வேண்டுமெனில் இந் நாட்டில் இரு பிரதான கட்சிகளும் ஒன்றுபட வேண்டும்.
- எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எப்போதுமே சிறுபான்மை இனக்கட்சிகளைத் தம் பக்கம் வைத்திருக்கவே விரும்புகிறார். ஜனாதிபதியும் தம்மைச் சுற்றி இந்த சிறுபான்மைக் கட்சிகளை வைத்திருக்கவே விரும்புகின்றார். இது சிங்கள இனத்திற்கே கேவலமான செயலாகும்.
- வட—கிழக்குப் பகுதிகளிலுள்ள கிராமங்களின் பெயர்கள் சிங்களத்திலேயே இருத்தல் வேண்டும். இன்று எமது சிங்கள இனத்தைக் காப்பாற்ற யாரும் இல்லை.
- சிங்கள மக்களுக்கென்று இருக்கும் ஒரேயொரு நாடு சிறீலங்காதான். இதில் 75 வீதம் பௌத்தர்கள் தான் இருக்கிறார்கள். மற்ற அனைவரும் சிறுபான்மையினர் ஆவர்.
- இந்த நிலைமையை ஏன் யாரும் புரிந்து கொள்ள மறுக்கிறார்கள். பரம்பரை பரம்பரையாக சிங்களவர்கள்தான் இந்நாட்டை ஆண்டு வந்துள்ளனர் என்று வரலாறு கூறுகின்றது.
- சிங்கள மக்கள் குரூரமானவர்கள் அல்லர். ஸ்ரீலங்கா என்ற வார்த்தையை ஏன் தமிழர்கள் இலங்கை என்கின்றனர். ஏன் அதை ஸ்ரீலங்கா என்று கூறமுடியாது?
- இன்று துறைமுகங்களை எடுத்துக் கொள்ளுங்கள். நூற்றுக்கு 75 வீதமான முஸ்லீம்கள் தான் அங்கு வேலை செய்கிறார்கள். இதில் ஆட்சேர்ப்பில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளது.
- எனவே இந்த மாதிரியாக சிங்கள இனத்திற்கு அநீதிகள் பல இழைக்கப்பட்டுள்ளன. முன்பு யாழ்ப்பாணத்தில் 25.000—த்திற்கும் மேற்பட்ட சிங்களவர்கள் இருந்தனர். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் ஒரு சிங்கள மாணவர் தானும் இல்லை. ஆனால் நாட்டின் பல்வேறு பாகங்களிலுமுள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் முஸ்லிம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர்.
- முன்பு சிறிமா— சாஸ்திரி ஒப்பந்தப்படி 6 இலட்சம் தமிழர்கள் இந்தியா செல்லவிருந்தனர். ஆனால் தொண்டமான் அவர்களை போகவிடாமல் தடுத்து நிறுத்தினார். அப்புறம் அவர்கள் அனைவருக்கும் இந்த நாட்டு பிரஜாவுரிமை வழங்கப்பட்டது.
- மலைநாட்டு சிங்களவர்களுக்கு தோட்டக்காணிகளில் ஒரு அங்குலமேனும் பெறமுடியாது. சிங்களவன் ஒருவனின் சடலத்தைப் புதைக்கக்கூட இடமில்லை.
- அரசியல் திட்டத்திற்கு சிங்களவர்கள் தமது எதிர்ப்பை தெரிவிக்க வேண்டும். அரசின் ஆலோசனைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் முழு நாடும் ஓர் யுத்தகளமாகிவிடும்.
- தொண்டமான் மலைநாட்டுப் பிரபல அரசியல்வாதி தமக்குப் 10 இலட்சம் தேர்தல் வாக்கு இருப்பதாகக் கூறி ஒவ்வொரு அரசிலும் நன்மைகளைப் பெற்றார். எமது ஆட்கள் தொண்டமானுக்குப் பயம். இன்று எமது நாட்டில் சீரான நிருவாகம் இல்லை.

*(இவ்வாறு சிங்கள ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியங்கள் தொடர்கின்றன.)*



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நினைக்கிறேன். தாங்கமுடியாத வறுமையுடனும் நிம்மதியாக இருப்பதாகவே நான் நினைக்கிறேன். என் குழந்தையின் தந்தையோ இன்னும் சந்தோசமாக இருப்பதாகத் தெரிகிறது. என் போன்ற பெண்கள் இருக்கும் வரை இவர்களுக்கும் கவலையில்லை. என்ன செய்வது பெண்ணாகப் பிறந்துவிட்டோம். அனுபவிக்கிறோம். இருபது வயதில் எனக்கு மூன்று வயதுக் குழந்தை, என் எதிர்காலம்... பூதமாக முன் நிற்கிறது.

அன்பான சகோதரிகளே...

இங்கு கூறப்பட்டிருக்கும் பெண்ணின் பிரச்சினையைப் போன்று இன்னும் அனேக பெண்கள் தாங்கொணாத சித்திரவதைகளைத் தாங்கிக் கொண்டவர்களாய் மனதாலும் உடலாலும் புண்பட்டு வேதனைகளைச் சுமந்தவர்களாய் நடைப்பிணம் போன்று வாழ்ந்துவருகின்றனர், அல்லது கணவனைப் பிரிந்து பெற்றோருக்குச் சுமையாக எதிர்காலமே ஒரு கேள்விக்குறியாக, வாழவழியின்றித் தவிக்கின்றனர். இவர்களின் கணவர்களோ வேறு பெண்ணுடன் சுகமாகப் பொழுதைக் கழிக்கின்றனர்.

இப்படியான பெண்களுக்கெல்லாம் நாம் கூறவிரும்புவது எமது நாட்டில் இன்று பெண்களுக்கு பல விதத்திலும் பாதுகாப்பு வழங்குவதாய் எமது சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு பெண்ணைக் கணவனாய் இருந்தாலும் துன்புறுத்தவோ சித்திரவதை செய்யதோ குற்றமாகும். ஆணாயினும் பெண்ணாயினும் ஒரு முறை மட்டுமே திருமணம் செய்யலாம். கணவனோ மனைவியோ உயிருடன் இருக்கும் போது, மண விலக்குப் பெறாமல் வேறு திருமணம் செய்ய இயலாது. உங்களின், உங்கள் குழந்தையின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு கணவன் மீது பராமரிப்பு, தாபரிப்பு வழக்குகளைத் தாக்கல் செய்யலாம் அல்லது காவற்துறையில் முறைப்பாடு செய்யலாம். இப்படி செய்வது உங்களுக்கு கஸ்டமாகத் தோன்றினால், எங்களுடன் தொடர்புகொள்ளலாம். நாங்கள் உங்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைத் தருவதுடன், உங்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கும் ஆவன செய்வோம்.

தமிழீழப் பெண்கள்
ஆய்வு நிறுவனம்,
முள்ளவை வீதி, மாங்குளம்.

நன்றி: 'சுதந்திரப் பறவைகள்'

# மறுதலிப்பு

எனக்குள்
னேற்றுடன்
மறுதலிப்புக்கான காவம் தொடங்கிற்று.

ஒரு கிறிஸ்துமஸ்
விழாக்காவம் போல்
ஒரு கந்த சஷ்டி விரதம் போல்
அல்வது
ஒரு மாதவிடாய்க் காவம்போல்
ஆனால்
காவவரைகள் எதுமின்றி.

சாப்பிடாது போன
உணவு
பூனையின் ஒரு
கைபார்த்தலின் அடையாளத்துடன்
மேசையில் கிடக்கு.

இரவு. அணைக்காமலே விட்ட விளக்கு
விடிந்தபின்
மண்ணெண்ணெய்
விலை என்ன என்கிறது.

செய்தியறிக்கைக்காய்
படிப்பறைக்குவரும்
வானொலிப்பெட்டி வரவில்லை
நான் படிக்கவும் இல்லை
கவிதை எழுதினேன்
செய்ய வேண்டும் என்றிருந்தவையெல்வாம்
புறக்கணிக்கப்பட்டன.
அன்றி
மாற்றிச்
ஓ! மறுதலிப்புக்காவம்
தொடங்கிவிட்டது.

ஆனால் பெண்ணே
ஒரு ஆணின்
சிறு இலட்சியத்திற்காகவா
இவ்வளவும்?
மோசம் பெண்ணே
மோசம்.
இதனாலெல்வாம்
நீ அடைந்த வாபம் என்ன?
உன் அறிவு
எங்கே போயிற்று?
தங்கியிருத்தலை
வாழ்வாக்கிக் கொண்டனை: ஏன்?
இந்த அரைகுறை
மறுதலிப்புக்கள்
அவசியமற்றுப் போகும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# வரண்டுபோன நாட்களும் எழுதத் தொடங்கும் ஒரு வரலாறும்

எமக்கும் அதற்குமான உறவை
நீ- பிரித்தாய்
எமது நந்தவனத்தில் மலர்களை
பிய்த்தெறிந்தாய்.
எமது வீதியோரங்களில்
எலும்புகளையும் தசைகளையும்
விதைத்துச் சென்றாய்.

ஒரு கொடிய இரவின் கருமையில்
எமது நிலம் ஆக்கிரமிக்கப்பட்டபோது
நாம் எவ்வாறு சிதறிப்போனோம்.
திக்கொன்றாய் இரத்த உறவுகள்
பிரிந்த கதையின் ஆழத்தில்
சிந்தப்பட்ட கண்ணீர்த்துளிகளாய்

எங்களது கதை
வருகின்ற அகாலமான நாட்களில்

இன்றும் நாளையும்
நிச்சயமற்ற பொழுதுகளாய்
உயிரை உலுக்கிப் போகும்.
காற்று அலைகின்ற வயல்வெளிகளிலும்
மயான அமைதி சூழ்ந்த இரவுகளிலும்
அநாதையாய் ஒலித்த
அந்தக் கடைசி ஓலங்கள்
இன்னும் ரணமாக்கப்பட்ட வலியாய்
உள்ளே எரிகின்ற அக்கினிச்சுவாலையாய்
கனன்றெழும்.
வரண்டுபோன நாட்களை வாங்கிக் கொள்ளாமல்
இரும்புச் சிறைக்கு அப்பால்
வேதனைகள் சுமந்த போதும்
கசப்பற்ற இவ் வாழ்வில்
முற்றிலும் நிம்மதி உள்ளதாய்
நினைக்கும் சோதரி!

கொடிய பற்களுக்கு இரையாகாமல்
தப்பி விட்டாய்.
கசக்கி எறியப்பட இருந்த
உன் காலத்தை இப்போது காப்பாற்றி விட்டாய்.
இனியும் இடர்கள் தொடராது என்ற
இறுமாப்பில் இருப்பாயா?
திரைகளைத் தாண்டிச்
சூரியன் உனக்கு முழுமையாய் ஒளிர்ந்ததா?

காடும் மரநிழலும்
நிவாரண வரிசையும்
பசியும் பட்டினியுமல்ல உன் துயரம்
உனது இருப்பைப் பற்றி
உன்னால் என்றும் நிச்சயித்துக் கொள்ள முடியாது.
உனக்கும் சொந்தங்களுக்குமான
உறவுச் சங்கிலி
எப்போதும் அறுபட்டுப் போகலாம்.

உனது முதுகில் பாரங்கள்
அனைத்தும் இறங்கிட
சுமைகளைப் பகிர்ந்து கொள்ள
யாருமற்றுப் போவாய்.
எண்ணக் கோயிலில் - நீ
கட்டி வைத்திருந்த கனவுகள் தகர்ந்து
வெறும் சுடுகாடாய் - உன்
காலங்கள் விரியலாம்.

ஆக்கிரமிக்கப்பட்ட நிலத்துள்
அவலமுறும் உன் சகோதரிக்கு
மட்டுமல்ல துயரங்கள்.
அவளுக்குத் திணிக்கப்பட்ட வாழ்வே
உனக்கான அச்சுறுத்தல்தான்.
அதையெண்ணி நாளும் பொழுதும்
நெஞ்சுகள் கலக்கமுறும் உன்வாழ்வு
எப்படி இனிதாக முடியும்?

சோதரி!
துயரத்துக்கு அப்பாலான தூரத்தில்
நீயில்லை.
சமூகத்தினின்றும் காலத்தினின்றும்
உனது தளைகள் இன்னும்
கழன்று போகவில்லை.
வாழ்விடங்கள் மாறிப்போன
உனது வாழ்வு இன்னும் அப்படியே.
சக்தியுள்ள உனது கரங்களை அகல விரி
கால்களில் பற்றியிருக்கும் துயர்
கழுத்துக்கு வரமுன்பே
பிய்த்து எறி-
யாராலோ தீர்மானிக்கப்பட இருக்கும்
உனது எதிர்காலத்தை
நீ இனி எழுதத் தொடங்கு.
உனது மனதிலிருந்து
எழுதுகோல் முளைக்கட்டும்.

— அம்புலி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



அச்சுப் பதிப்பு-வாசன் அச்சகம் லண்டன் 0181 646 2885

www.tamileelamarchive.com